# ஞானவிளக்கம்


இராமகிருஷ்ணர்


திருஞானசம்பந்தர்


மெய்கண்டதேவர்


சற்குரு சச்சிதானந்தர்


நாவலர் பெருமான்


பூண்டி மகான்


அன்னை மீராதேவி


நடனகோபாலநாயகி சுவாமிகள்


நல்லை ஆதீன
1வது சன்னிதானம்

நூலாசிரியர்:

ஆத்மஜோதி நா. முத்தையா

உ

சிவமயம்

# ஞானவிளக்கம்

**நூலாசிரியர்**

ஆத்மீக வள்ளல், சித்த ஞான வித்தகர்,

அன்புமணி, ஞானசுரபி

ஆத்மஜோதி, நா. முத்தையா

வெளியீடு:

ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை

கனடா

## நூல்த் தரவு

| | |
|---|---|
| நூலின் பெயர்: | ஞானவிளக்கம் |
| நூல் ஆசிரியர்: | ஆத்மஜோதி நா. முத்தையா |
| வெளியீடு: | ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை |
| பதிப்புரிமை: | ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை |
| வடிவமைப்பு: | திரு. மா. கனகசபாபதி |
| அச்சமைப்பு: | விவேகா அச்சகம் |
| நூல் பிரதிகள் | 1000 |
| முதற் பதிப்பு: | 30-05-2007 |

## TITLE

| | |
|---|---|
| Name of the Book: | Ganavilakkam |
| Name of author: | Arthmajothy N. Muthiah |
| Published by: | Ontario Hindu Religious Society |
| Copy Right: | Ontario Hindu Religious Society |
| Book Amount: | 1000 |
| First edition: | 30-05-2007 |
| Type setting: | M. Kanagasabapathy |
| Printed By: | Viveka Press |

# உள்ளடக்கம்


| | |
|---|---|
| பதிபபுரை | 4 |
| அணிந்துரை | 6 |
| அறிமுகவுரை | 10 |
| அன்னை மீராதேவியின் தரிசனம் | 12 |
| தன் முயற்சியால் தன்னை அறிந்த தருமன் | 15 |
| பூண்டி மகான் | 27 |
| புலவர் நாடு புக்க மணி | 31 |
| நாவலர் நூற்றாண்டில் நாம் சாதித்தது என்ன | 34 |
| ஈழத்தில் ஸ்ரீ இராமகிருஷ்ண இயக்கத்தின் சேவை | 39 |
| நடன கோபாலநாயகி சுவாமிகள் | 44 |
| சச்சிதானந்த சற்குரு சுவாமிகள் | 50 |
| சைவ சித்தாந்தத்தில் இரு குழந்தைகள் | 55 |
| பிரமேந்திர சரஸ்வதி சுவாமிகள் | 61 |
| நாவலர் வழியில் வாழ்ந்து நாவலர் வழியில் தொண்டு செய்த நல்லை ஆதீனம் | 66 |
| காயத்திரி சுவாமிகளுடன் ஒரு நாள் | 70 |
| பிரணவானந்தரின் பிரிவுத் துயரம் | 74 |
| இந்து மத போதகர் | 77 |
| ஓம் ஸ்ரீ குள்ளச்சாமி | 80 |

# பதிப்புரை

எமது இந்துசமயப் பேரவை 1994ஆம் ஆண்டு யூலை மாதம் கனடாவில் ஆத்மீக வள்ளல் நா. முத்தையா அவர்களால் தாபிக்கப்பட்டது. சைவமும் தமிழும் ஒருமித்து வளரவேண்டும் என்பது பெரியாரின் நோக்கமாகும். தன்வாழ்நாளில் ஞானிகள் மகான்களை தேடிச் சென்று தரிசனம் பெறுவது ஐயா அவர்களின் வழக்கமாகும். எமது தமிழ் மக்களும் ஞானிகள், சித்தர்கள், மகான்கள் தங்கள் வாழ்நாளில் எப்படி மெய்யுணர்வு பெற்று மேல்நிலை அடைந்தார்கள் என்பதை அறிய வேண்டு மென விரும்பினார். தன்சிந்தனைகளை செயல்வடிவமாக்கும் பெரியவர் **ஈழத்துச்சித்தர்கள், முப்பெரும் சித்தர்கள், தரிசனம், என்னை எனக்கு அறிவித்த எங்கள் குருநாதன், யோகி ராம் சுரத்குமார்** போன்ற ஞானநூல்களை எங்களுக்குத் தந்துள்ளார். இவைகளைவிட 1948ஆம் ஆண்டு தொடக்கம் 1983வரை 35 ஆண்டுகள் நாவலப்பிட்டியில் வெளிவந்த ஆத்மஜோதியில் பல மகான்களின் வரலாறுகளை கட்டுரைகளாக ஆவணப் படுத்தியுள்ளார். அவைகளில் 15 கட்டுரைகளை நாங்கள் நூல்வடிவாக அவருடைய 89ஆவது பிறந்தநாள் விழாவில் வெளியிட எண்ணியுள்ளோம்.

ஆத்மீகத்தில் முன்னேறத் துடிக்கும் அன்பர்களுக்கு ஞான விளக்கம் என்ற இந்நூல் கரைசேர்க்கும் தெப்பமாக இருக்கும் என்பதில் எந்தவித ஐயமுமில்லை.

ஞானம் என்றால் அறிவின் தெளிவு என்பது கருத்தாகும். மனித வாழ்வில் ஞானம் இடம்பெறும் அளவிற்கே மக்களுக்கு சிறப்பும் இன்பமும் அமைதியும் பேரின்பமும் ஏற்படுகின்றன. எனவே **ஞானம் என்பது வாழ்க்கை விளக்கு ஆகும். தகுதியுடையோர் ஞானம் பெற்று வாழவேண்டும். இயலாதோர் ஞானிகளின் வழியை பின்பற்றி வாழவேண்டும்.** வாழும்பொழுது மக்கள் தூய்மையடைய வேண்டுமென்றால் சிறுவயது தொடக்கம் ஆன்மஞானம் பெற முயல வேண்டும். ஆத்மஞானம் பெறுவதற்குவயதுக்கட்டுப்பாடு தேவை இல்லை. சொல் செயல் சிந்தனை ஒன்றாகச் செயல்படுவோருக்கு ஞானம்கைகூடுவது இலகுவாகும். ஐம்புலன்களை அடக்கிச்

சமநோக்குப் பார்வையை பெறுகின்றவர்களுக்கு அந்தக் கரணங்களாகிய மனம் புத்தி, சித்தம், அகங்காரம் ஆகியன சுத்தமாக இருக்கும்.

தொழில்நுட்பம், விஞ்ஞான அறிவு வளர்ந்துள்ள இக்காலத்தில் எமது சிறார்கள் மெய்ஞ்ஞான அறிவை பெறுவதற்கு இப்படியான ஆத்மீக நூல்கள் கைகொடுக்கும். இந்நூலுக்கு பேரவையின் தலைவர் சைவதுரந்தரர் வி. கந்தவனம் ஐயா அவர்கள் ஞானவிளக்கம் எனப் பெயர் சூட்டியுள்ளார். இந்நூலை வடிவமைப்புச் செய்த திரு மா. கனகசபாபதிக்கும், அச்சிட்ட விவேகா அச்சகத்தினருக்கும் பேரவையின் சார்பில் எந்நன்றிகள். இந்நூல் வெளிவருவதற்கு நிதி உதவி புரிந்து உறுதுணையாக இருக்கும்பேரவையின் திருக்கூட்டத்தினருக்கும் எந்நன்றிகள். நல்ல ஒரு அணிந்துரை எழுதி அளித்த பேரவையின் தலைவர் சைவ துரந்தரர் வி. கந்தவனம் அவர்களுக்கும் ஆத்மார்த்தமான அறிமுகவுரையை எழுதித்தந்த பேரவையின் பொருளாளர் செ. சோமசுந்தரம் அவர்களுக்கும் நன்றிகள். தொடர்ந்து எங்கள் பணிகளைச் செய்ய என் குருதேவர் ஞானசுரபி ஆத்மஜோதி ஐயா அவர்களின் ஆசிகளையும், எல்லாம் வல்ல முழுமுதற் கடவுளாம் சிவபெருமானின் பெருங்கருணையையும் பேரவையின் சார்பில் வேண்டுகின்றேன். தொடர்ந்து எங்கள் பணிகள் தொடர சைவத்தமிழ் அன்பர்களின் ஆதரவையும் நாடி நிற்கின்றோம். **மனித ஆன்மா மேல்நிலை அடைந்தால் சமுதாயமும், நாடும் மேன்மை பெறும். ஆன்மீகவாழ்வு ஆனமாவை மேல் நிலைப்படுத்தும்.**

சிவ முத்துலிங்கம்
செயலாளர்
நூல் வெளியீட்டுப் பொறுப்பாளர்
ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை
கனடா

# அணிந்துரை

ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை ஆற்றிவரும் பன்முகப்பட்ட பணிகளில் சமய நூல்களைப் பதிப்பித்து வெளியிடுதலும் ஒன்றாகும். கடந்த பன்னிரண்டு ஆண்டுகளில் 36 நூல்களை வெளியிட்ட சாதனைச் சிறப்பு இதற்கு உண்டு. சமய அறிவைப் பரப்ப வேண்டும் என்கின்ற தலையாய நோக்கத்தை முறையாக நடைமுறைப்படுத்தி வருவதையிட்டுச் சைவ உலகத்தின் பாராட்டுதலையும் பேரவை பெற்று வருகின்றது. கனடாவில் மட்டுமன்றி தமிழ்நாடு, தமிழீழம், அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும் பேரவையின் வெளியீடுகளைப் பெற்றுப் படித்துப் பயன்பெறுவார் தொகை அதிகரித்து வருகின்றது.

இவ்வரிய பணியின் தொடர்ச்சியாக இப்பொழுது வெளிவருகின்றது 'ஞானவிளக்கம்' என்னும் இந்த நூல். இது ஞானசுரபி, ஆத்மஜோதி நா. முத்தையா அவர்களால் அவரது ஆத்மஜோதி மாத இதழில் அவ்வப்போது எழுதப்பெற்ற கட்டுரைகள் பதினைந்தைக் கொண்ட தொகுப்பு நூலாகும். இந்து சமயப் பேரவை சார்பில் அவற்றைத் தொகுத்திருப்பவர் அவரது உத்தம சீடரும் பேரவையின் செயலாளருமாகிய திருமுறைச் செல்வர் சிவ. முத்துலிங்கம் அவர்கள்.

தொகுப்பு ஞானிகளைப் பற்றியதாதலால் 'ஞானவிளக்கம்' என்று பெயர் சூட்டியிருக்கின்றேன்.

ஞானம் என்றால் எமக்கு எட்டாத சங்கதி என்று பலர் கருதுகிறார்கள். ஞானத்திற் பல படிநிலைகள் இருப்பினும் 'இந்த உலக வாழ்வு நிலையற்றது. நிலையான சிவன் கழல்களைப் பற்றுதற்கே இப்பிறப்பு எமக்குக் கிடைத்தது' என்ற எண்ணம் உதித்தாலே ஞானம் பிறந்துவிட்டதாக நாம் கொள்ளலாம். இவ்வித ஞானம் இந்த நூலில் தோய்பவருக்கும் தோன்றும்; தோன்றும் வகையிலேயே கட்டுரைகளை ஆசிரியர் எழுதிச் செல்கிறார்.

அவரே ஒரு ஞானசுரபி. பாம்பின் காலைப் பாம்பறியும் என்பதுபோல ஞானிகளின் பெருமையை ஞானியே அறிவார். ஞானிகளைத் தேடிச் சென்று தரிசிப்பதில் இன்பம் கண்டவர். தான் பெற்ற இன்பத்தைச்

சொற்பொழிவுகளாகவும் கட்டுரைகளாகவும் பிறர்க்கு வழங்கும் ஆத்மீக வள்ளல். கட்டுரைகளை நூல்களாகவும் வெளியிட்டவர். 'தரிசனம்' என்ற நூல்மூலம் பல மகான்களை முன்னர் ஈழத்தவருக்கு அறிமுகப்படுத்தியவர். அத்தகைய முறையிலேயே இந்நூலும் தொகுக்கப்பட்டுள்ளது.

முதலாவது கட்டுரை மீராதேவி அன்னை பற்றியது. பிரான்சு நாட்டைச் சேர்ந்த அன்னையார் எவ்விதம் பகவான் அரவிந்தருக்கு அடிமையானார் என்பதை அழகுற எடுத்துக் கூறுகின்றது.

இரண்டாவது கட்டுரை இத்தொகுதியில் உள்ள மிக நீண்ட கட்டுரை. ஓர் இளைஞனின் ஞான நாடகத்தைக் கூறும் கட்டுரை. இளைஞனின் பெயர் தருமு. சிவனொளிபாத மலை அடிவாரத்தில் உள்ள வள்ளிமலைத் தோட்டத்துக் கங்காணியார் ஒருவரின் மகன். அவனுடன் ஆசிரியர் நெருங்கிப் பழகியமையால் நெஞ்சை உருக்கும் வகையில் அனுபவத்தைப் பிழிந்து தருகின்றார். தந்து அவனை வாழ வைத்திருக்கின்றார்.

அடுத்த கட்டுரை மனத்தை ஞானமுகமாகத் திருப்பி, அதில் முயன்று வெற்றியும் கண்ட பூண்டிமகானை எமக்கு அறிமுகப்படுத்துகின்றது. பூண்டி தமிழ்நாட்டில் செங்கற்பட்டு மாவட்டத்தில் உள்ள ஒரு சிறு கிராமம். ஆனால் மகானின் சந்நிதானச் சிறப்பினால் அது பெயர்பெற்ற யாத்திரைத் தலமாக மாறியுள்ளது.

நான்காவதாக இடம்பெறுவது 'புலவர் நாடு புக்க புலவர்மணி' என்ற இரங்கற் கட்டுரை. புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை அவர்கள் மறைந்த செய்தி கேட்டு மனம் கசிந்து எழுதியது. புலவர்மணி தந்த நூல்களுள் பகவத்கீதை வெண்பா பெயர் பெற்றது. வெண்பாவுக்குப் புகழேந்தி ஒருவர் தானா? புலவர்மணியும் உள்ளார் என்று சொல்லவைத்த - சொல்ல வைத்துக்கொண்டிருக்கும் நூல் அது. அது கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம் என மூன்று பகுதிகளாக வெளியிடப்பட்டன. அவற்றுள் பக்தியோகத்தை அச்சிற் பதிப்பத்தவர் இந்நூலாசிரியர் ஆத்மஜோதி முத்தையா அவர்கள்.

'நாவலர் நூற்றாண்டில் நாம் சாதித்தது என்ன?' என்ற கேள்வி அடுத்து வருகின்றது. நாவலர் பெருமானைப் பற்றித் தமிழர் சரியாக

அறிந்து கொள்ளவில்லை என்றும் அவரது நூல்களைக் கற்பார் இல்லை என்றும் அதனால் இளஞ் சந்ததியினர் மத்தியில் தமிழ் அறிவும் சமய உணர்வும் குன்றிவருகின்றது என்றும் கூறி, செய்ய வேண்டியவற்றை விளக்கும் விழிப்புணர்வுக் கட்டுரையாக இது விளங்குகின்றது.

இதனையடுத்து வருவது 'ஈழத்தில் ஸ்ரீ இராமகிருஷ்ண இயக்கத்தின் சேவை' என்ற கட்டுரை. ஈழத்தின் ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்தின் பொன்விழாக் கொண்டாட்டத்தை யொட்டி எழுதப்பெற்றது. இதற்கு முந்திய கட்டுரை சைவசித்தாந்தி நாவலரைப் பற்றியது. இது வேதாந்தி இராமகிருஷ்ணரைப் பற்றியது. இயக்கரீதியாக வேதாந்திகள் செய்யும் பணிகளைப் போன்று சைவசித்தாந்திகள் செய்யவில்லை என்பதை உணர்த்தும் வகையில் இவை அக்கம் பக்கமாக வைக்கப்பட்டுள்ளன.

தொடர்ந்து வரும் பக்கங்களில் நடன கோபாலநாயகி சுவாமிகள், சச்சிதானந்த சற்குரு சுவாமிகள், ஒப்புநோக்கில் ஞானசம்பந்தப் பெருமான் - மெய்கண்டதேவர் (சைவ சித்தாந்தத்தில் இரு குழந்தைகள்), பிரம்மேந்திர சரஸ்வதி சுவாமிகள், நல்லை ஆதீனம் குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள், காயத்திரி சுவாமிகள், பிரணவானந்த சுவாமிகள், சுவாமி விவேகானந்தர் (இந்துமத போதகர்), ஓம் ஸ்ரீ குள்ளச்சாமி ஆகிய ஞானச்செல்வர்களது வரலாறுகளையும் அருமைபெருமைகளையும் வாசகர்கள் அறிந்து கொள்ளலாம்.

ஆத்மஜோதி முத்தையா அவர்களின் ஆக்கங்களில் அதிகம் தொனிப்பது அவரது அனுபவங்கள். அவற்றை எழுதும் பொழுதும்கூட மிக அனுபவித்தே எழுதுவார். எழுத்துப்பற்றி 'புலவர் நாடு புக்க புலவர்மணி' என்ற கட்டுரையில் **"எவன் ஒருவன் தனது ஆத்ம திருப்திக்காக எழுதுகின்றானோ அந்த எழுத்துத்தான் மற்றையோருடைய ஆத்மாவையும் திருப்திப்படுத்தும்"** என்று அவர் கூறியிருப்பது கவனிக்கத் தக்கது. அது புலவர்மணி பகவத்கீதை வெண்பாவைத் தமது ஆத்ம திருப்திக்காகக் பாடினார் என்பதை வலியுறுத்தும் வாக்கியம். முத்தையா அவர்களுக்கும் அந்த வாக்கியம் மிகவே பொருந்தும். அவரும் தனது மன நிறைவுக்காக எழுதிக் குவித்தவர். அந்த நிறைவு பிறரையும் நிறைவாக்கும் என்றும் நம்பினார்.

கட்டுரைகளிற் பலர் பிற பெரியார்களின் கருத்துக்களுக்கே முக்கியத்துவம் கொடுப்பர். அவர்களது கூற்றுக்களாற் கட்டுரைகளை நிரப்பி முடிப்பர். ஆத்மஜோதி அவர்களின் கட்டுரைகளில் புதிய அனுபவங்களும் சுய சிந்தனைகளுமே மேலோங்கி இருக்கும்.

நல்லதை நயமுறச் சொல்லும் நாகரிகமும் வாய்ந்தவர் இவர். எவரையும் இகழ மாட்டார். யாரையும் புண்படுத்த மாட்டார். அவ்வளவுக்குப் பக்குவம் மிகுந்தவர்.

சொல்வதை விளங்கச் சொல்லும் திறமையும் கைவரப் பெற்றவர். எந்தப் பெரிய தத்துவத்தையும் இலகுவான சொற்களால் விளக்குவதோடு தொடர்ந்து வாசிக்கத் தூண்டும் தந்திரங்களையும் கையாள்வார். தந்திரங்கள் உவமைக் கதைகளாகவோ உண்மைச் சம்பவங்களாகவோ வடிவெடுக்கும்.

ஆத்மஜோதி அவர்களது கட்டுரைகள் நூல்வடிவம் பெறாது இன்னும் அதிகம் உள்ளன. அவற்றையும் தொகுத்து வெளியிட வேண்டும் என்று திருமுறைச்செலவர் திரு. சிவ. முத்துலிங்கம் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன். இந்து சமயப் பேரவையின் சமய இலக்கியத் தொண்டுக்கு ஆதரவு தந்துவரும் நன்மக்களையும் பாராட்டுகின்றேன்.

வி. கந்தவனம்
தலைவர்
ஒன்ராறியோ இந்து சமயப் பேரவை

ஓம் நமசிவாய

# அறிமுகவுரை

இந்நூலாசிரியர் ஆத்மஜோதி நா. முத்தையா அவர்கள் ஒரு கொள்கைப் பிடிப்புள்ள ஆத்மீகஞானி. அவர் ஒரு நைட்டீகப் பிரமச்சாரி. 44 வருடங்கள் மலையகத்தில் வாழ்ந்து ஆசிரியத்தொழில் செய்ததுடன் அரும்பெரும் ஆத்மீகப் பணியாற்றியவர். மலையக மக்களை பக்தியுடனும் ஒழுக்கமாகவும் வாழவைத்தவர். கல்வியும் ஒழுக்கமும் ஒருநாணயத்தின் இருபக்கங்கள் போன்றது. ஒழுக்கமில்லாத கல்வியால் சமுதாயம் மேல்நிலை அடையமுடியாது. ஆசிரியர் அவர்கள் தன் ஆசிரியப் பணியில் ஒழுக்கத்தை உயிரினும் மேலாக மதித்தவர். அதனால் மலையகத்தில் ஒழுக்கமுள்ள நல்ல சமுதாயத்தை வளர்த்தெடுத்தவர்.

1948ஆம் ஆண்டு ஆத்மஜோதி சஞ்சிகையை ஆரம்பித்து இன்று நாம் கனடாவில் வெளியிடுவதற்கும் வழிவகுத்தவர். உலகமெங்கும் வாழும் தமிழர்களுக்கு மத்தியில் ஆத்மஜோதி பத்திரிகையை பரப்பியவர். சனாதன தர்மத்தைத் தாங்கி நிற்கும் தூண்கள் ஞானிகள் மகான்கள், சித்தர்கள் போன்ற அருளாளர்களே.

எந்த ஒரு முக்கியமான நிகழ்வையும் ஒழுங்காக ஆவணப்படுத்தும் பழக்கம் எமது தமிழ் மக்களுக்கு மத்தியில் குறைவு. சமயகுரவர்களின் வரலாறுகளுக்குஅவர்களின் திருமுறைகள்தான் சான்று பகர்கின்றது. திருநாவுக்கரசர், மாணிக்கவாசகர் போன்றவர்களின் வரலாறுகளில் இன்றும் பல முரண்பாடுகள் உள்ளன. சித்தர்களின் வரலாறுகளிலும் அவர்களின் சித்தர் பாடல்கள், சித்த வைத்திய ஏடுகள் சான்றுபகர்கின்றனவே ஒழிய அவர்களுடைய வாழ்க்கை வரலாறுகளில் பல முரண்பாடுகள் உள்ளன.

ஆத்மீகவள்ளல் அவர்கள் ஈழத்துச்சித்தர்கள் என்ற நூலில் 18 சித்தர்களின் வரலாறுகளை வெளிக்கொணர்ந்துள்ளார். அந்நூலை வெளியிடுவதற்கு 32 வருடங்களாக முயற்சி செய்து குறிப்புக்களை சேர்த்ததாக நூல் முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார். அவருடைய தரிசனம் என்ற நூல் அவர் தன் வாழ்க்கையில் தரிசித்த 10 மகான்களின் வரலாறுகளைக் குறிப்பிடுகின்றது. ஒவ்வொரு மகான்களின் வரலாறுகளைப் படிக்கும் பொழுதும்

அந்த அருளாளர்களுடன் எங்களை மறைமுகமாக சற்சங்கம் செய்ய வைக்கின்றார்.

பூண்டிமகான், சச்சிதானந்த சற்குருசுவாமிகள், ஓம் ஸ்ரீ குள்ளசாமிகள் தன் முயற்சியால் தன்னை அறிந்த தருமன் போன்ற அருளாளர்களின் 15 கட்டுரைகளை இந்நூலில் தந்திருக்கின்றார்.

கனடா ஒன்ராறியோ இந்துசமயப் பேரவையின் தாபகர் ஆத்மஜோதியார் அவருடைய சீடராகிய திருமுறைச் செல்வர் சிவமுத்துலிங்கம் அவர்களை ஆட்கொண்டு தன் தவவலிமையால் அவரை ஒரு கருவியாக வைத்து எங்களையும் இணைத்து இந்து சமயப் பேரவையை ஒரு விருட்சம் போல வளர்த்துள்ளார். வளர்ப்பது மாத்திரம் அல்ல கடந்த எட்டு வருடங்களாக பன்னிரு திருமுறைகள், திருப்புகழ் போன்ற பனுவல்களை ஓதும் திருஅடியார் கூட்டத்தையும் தன் ஆத்மீக சக்தியால் உருவாக்கி வருகின்றார்.

ஒரு துறவியானவன் துறவு விருப்பம் உள்ளவர்களையும், ஆத்மீக ஈடேற்றம் அடைய நாட்டம் உடையவர்களையும் தேடிச் சென்று அவர்களுக்கு நல்வழியை காட:டுவதை தன் கொள்கையாக உள்ளவன். **தனக்காக வாழாமல் பிறருக்காக வாழ்பவனே உண்மைத் துறவியாவான். ஆத்மீக வள்ளல், அன்புமணி, சித்தஞான வித்தகர் ஞானசுரபி நா. முத்தையா அவர்களும் இப்படிப்பட்ட உயர்ந்த துறவியாவார். அவருடைய வழியில் அவரின் பணிகளைச் செய்வதன் மூலமும் அவரின் நூல்களை வெளியிட்டு மக்கள் மயப்படுத்துவதனாலும் நாமும் உயர்வு அடையலாம்.** எமது சமுதாயமும் நன்மை பெறும். அப்பர் சுவாமிகள் தேவாரத் திருமுறைகளைப் பாடியதுடன் உழவாரப்பணி போனற திருத்தொண்டுகளையும் செய்து தன்னிகரில்லாத் தொண்டனாக வாழ்ந்தவர். ஆத்தஜோதியாரும் சமயத் தொண்டுடன் பக்தியையும் வளர்த்து தன் இறுதிக் காலத்தில் சைவச் சிறுவர் இல்லம் அமைத்து அநாதைப் பிள்ளைகளை வளர்த்தவர். அப்பர் சுவாமிகள் சித்திரைச் சதயத்திலும், ஆத்மஜோதியார் புரட்டாதி சதயத்திலும் இறைவன் திருவடியை அடைந்தனர்.

ஆத்மஜோதியார் நாமம் வாழ்க. அவரின் ஆத்மீக பணிகள் தொடர்க.

செ. சோமசுந்தரம்
பொருளாளர்
இந்துசமயப் பேரவை

# 1. அன்னை மீராதேவியின் தரிசனம்

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் பாண்டிச்சேரி போவதென்றால் இந்தியப் பாஸ்போட்டுடனோ அன்றி இந்திய விசாவுடனோ செல்ல முடியாது. இந்தியாவிற்குள் பாண்டிச்சேரி இருந்தாலும் இந்தியா சுதந்திரம் பெற்ற பின்பும் பிரான்சு ஆதிக்கத்தின் கீழேயே இருந்து வந்தது. இப்படி இருந்ததனாலும் சில நன்மைகள் ஏற்பட்டிருந்தன.

ஆங்கில ஆட்சியை எதிர்த்துப் போராடிய வ.வே.சு. ஐயர், பாரதியார், பகவான் அரவிந்தர் ஆகியோருக்குப் புகலிடம் அளித்தது பாண்டிச்சேரியாகும். பகவான் அரவிந்தர் ஆத்மீக விடுதலை பெறுவதற்கான பயிற்சிக்கூடம் ஒன்றை பாண்டிச்சேரி நகரத்தின் நடுமத்தியிலே நிறுவினார்.

இதற்கு உதவியாக விளங்கியவர், சமீபத்தில் மகாசமாதி அடைந்த ஸ்ரீ மீராதேவி அன்னையாராகும். சிவமும் சத்தியும் போலவும், பரமகம்சரும் சாரதாதேவியும் போலவும், சுவாமி இராமதாசர் அன்னை கிருஷ்ணபாய் போலவும், பகவான் அரவிந்தரும் ஸ்ரீ அனனையாரும் விளங்கினர் என்று கூறலாம்.

அன்னையார் பிரான்சு தேசத்தைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இயல்பிலேயே ஆத்மீக நாட்டம் உடையவர். பகவான் அரவிந்தரின் கட்டுரைகளால் கவரப்பட்ட அன்னையார் பகவான் அரவிந்தரைக் குருவாகக் கொண்டு வாழவிரும்பி பகவானுக்குக் கடிதம் எழுதினார். பகவான் உடனேயே ஏற்றுக் கொண்டுவிடவில்லை. ஆச்சிரம வாழ்க்கைக்குத் தகுதி வரும்போது தாமே அழைப்பதாக எழுதியிருந்தார்.

அன்னையாரின் தவம் அதிகமாகியது. அன்னையாரின் தபோ சக்தி பகவான் அரவிந்தரின் உள்ளத்துள்ளே புகுந்து அன்னையாரைப் புதுவைக்கு அழைக்கத் தூண்டியது. பகவானின் அழைப்பைப் பெற்ற அன்னையார் அளவிலா மகிழ்வு கொண்டார். ஆத்மீக நாட்டம் கொண்ட அன்னையார் துறவியாகப் பகவானை நாடி வந்தபோது வெறும் சந்நியாசினியாக மாத்திரம் வரவில்லை.

நான்கு லட்சத்திற்குமதிகமான பொருளுடன் வந்து சேர்ந்தார். தனக்கென்று இருந்த பொருளை சுற்றத்தவருக்குக் கொடுத்துவிட்டு வந்திருக்கலாம். அன்னையார் அப்படிச் செய்யவில்லை. தன்னை முழுவதாகத் தனது குருநாதரிடம் எப்பொழுது ஒப்புக் கொடுத்தாரோ அன்றே பொருளையும் ஒப்புக் கொடுத்து விட்டார்.

" அன்றே என்றன் ஆவியும் உடலும் உடைமை எல்லாமும்
குன்றே அனையாய் எனை ஆட்கொண்டபோதே
கொண்டிலையோ"

என்ற திருவாசகத்திற்கு இலக்கியம் ஆனார்.

தனது உடைமை எல்லாவற்றையும் தெய்வீகப் பணிக்கென்று தியாகம் செய்த பெருமை அன்னையாருக்குரியதாகும். நல்ல கருமத்தை ஆரம்பித்தால் பொருள் எங்கிருந்தோ வரும் என்று பெரியோர்கள் தமது சொந்த அனுபவத்திலிருந்து கூறியுள்ளார்கள். அதேபோல பகவான் அரவிந்தருடைய விண்ணரசை பூவுலகத்திற்குக் கொண்டு வரும் பயிற்சித்திட்டத்திற்கு அன்னையாரைப் பொருளுடன் அனுப்பி வைத்தது திருவருள்.

அன்னையார் செயல் திறம் உடையவர். சிவம் சும்மா இருக்கச் சக்தியே படைத்துக் காத்து அழிப்பதுபோல பகவான் அரவிந்தர் தவத்தில் மௌனமாக இருக்க அவரது சக்தியை முழுதாகப் பெற்ற அன்னையாரே ஆச்சிரம நடவடிக்கைகள் எல்லாவற்றையும் கவனித்தார்.

பகவானின் தரிசனம் வருடத்தில் நான்கு தினங்களுக்கு மாத்திரம் பொதுமக்களுக்குக் கிடைத்து வந்தது. அன்னையாரின் தரிசனமோ தினத்திற்கு மூன்று முறை பொதுமக்களுக்குக் கிடைத்து வந்தது. ஆச்சிரமவாசிகளும் சரி பொதுமக்களும் சரி அன்னையாரையும் பகவானையும் குறிப்பிட்ட தினத்திலோ குறிப்பிட்ட நேரத்திலோதான் தரிசிக்க முடியும். ஆச்சிரமவாசிகள் தினமும் தரிசிக்கும் வாய்ப்பைப் பெற்றிருப்பார்கள் என்று சிலர் தவறாகக் கருதக்கூடும். அன்னையார் தினமும் மூன்று முறை தமது அறையின் மொட்டை மாடியின் முற்றத்தில் வந்து காட்சி தருவார்கள். அத்தருணம் ஆச்சிரமவாசிகளும் பொதுமக்களுடன் சேர்ந்து நின்றே தரிசனம் பெறுவர்.

அன்னையவர்கள் மேல்மாடிக்கு வரும் நேரத்தை எதிர்பார்த்து

தினமும் நூற்றுக்கு மேலான அரவிந்த பக்தர்கள் எதிர்பார்த்துக் காத்து நிற்பர். அன்னையார் அவர்கள் மேல்மாடியில் தோற்றம் அளிக்கும்போது தேவர் உலகத்தில் இருந்து கீழ் இறங்கிய தெய்வீக அன்னையோ என்று சொல்லத் தோன்றும். புன்னகை தவழும் முகமும் அருள் பொழியும் கண்களும் தரிசிப்போருக்கெல்லாம் ஆனந்தத்தைக் கொடுப்பனவாகும். ஒருமுறை தரிசிப்பவர் அடுத்த தரிசனம் எப்போ கிடைக்கும் என்று ஏங்கி நிற்பர்.

அந்தராத்மாவின் அழைப்புப் பெற்று ஸ்ரீ அரவிந்தரை நாடி வந்து, அவரால் சீடர்களாக அங்கீகரிக்கப்பட்ட சாதகர்களின் உடல் நலம், ஆத்ம நலம் முதலிய எல்லாவற்றிற்கும் ஸ்ரீ அரவிந்தரும் ஸ்ரீ அன்னையுமே முழுப் பொறுப்பேற்றுக்கொண்டு, அவரவர்களின் உட்புற நிலைகளுக்கும், தேவைகளுக்கும், ஆத்மவளர்ச்சிக்கும் ஏற்ப, அவரவர்களைப் பல்வேறு வழிகளில் நடத்தி வந்தனர். ஆச்சிரமவாசிகளும் சிறிதிலும் பெரிதிலும், எவ்விஷயத்திலும் ஸ்ரீ அரவிந்தருடைய ஸ்ரீ அன்னையினுடைய திருவுள்ளத்தின்படியே தத்தமக்குரிய பணிகளைச் செய்து அவர்களது அருளைப் பெற்று வந்தனர்.

பகவான் அரவிந்தரின் மறைவுக்குப் பின்பு அன்னையின் அருளில் வாழ்ந்த அரவிந்த பக்தர்களுக்கு அன்னையாரின் மறைவு ஓர் பேரிழப்பாகும்.

ஆச்சிரமவாசிகள் ஒவ்வொருவருக்கும் ஸ்ரீ அன்னையால் குறிப்பிடப்பட்ட ஒரு பணி இருந்து வந்தது. அதை அவர்கள் நிலைமைக்கும் வேலைக்கும் தக்கபடி சேர்ந்தோ தனித்தனியாகவோ செய்து வந்தனர். சிலர் ரொட்டி சுடுதல், மடைப்பள்ளி போஜனசாலை, மருந்துச்சாலை, சலவை, சோப்புச் செய்தல், காகிதம் செய்தல் முதலியவை சம்பந்தமான வேலைகளைச் செய்து வந்தனர். சிலர் தோட்டங்களில் பயிர் செய்தனர். வேறு சிலர் சித்திரம், சங்கீதம், பூத்தையல் முதலிய நுண்கலைகளில் கவனம் செலுத்தினர். மேலும் சாதகர்கள் ஓய்வு நேரங்களில் கலை, இலக்கியம், சாத்திரம் இவை பற்றிய நூல்களைப் படிப்பதிலும் பல மொழிகளைக் கற்பதிலும் ஈடுபட்டனர்.

பகவானும் ஸ்ரீ அன்னையவர்களும் இல்லாவிட்டாலும் அவர்களுடைய ஆத்மசக்தியின் உதவியால் மேற்படி சாதனைகள் யாவும் நடைபெற்றுக் கொண்டே இருக்கின்றன.

# 2. தன் முயற்சியால் தன்னை அறிந்த தருமன்

சுமார் நாற்பது ஆண்டுகளுக்கு முன் நடந்த நிகழ்ச்சி. புதுவருடப் பிறப்பிற்குக் கதிர்காமம் செல்ல வேண்டும் என்ற ஒரு எண்ணம். ஏப்ரல் 11ம் திகதி பாடசாலை விடுமுறை. வருடப்பிறப்பு 13ம் திகதி. இந்தக் காலத்தைப்போல நினைத்த உடனே கதிர்காமத்தைச் சென்று அடையத்தக்க போக்குவரவு வசதியற்ற காலம். பாடசாலை விடுமுறை கொடுத்த அன்றே புறப்பட்டு வருடப்பிறப்பு அன்றே அதிகாலை சென்று அடையத்தக்கதாக பிரயாண வசதி அமைந்தது.

ஆடித்திருவிழா, திருக்கார்த்திகை விழா இக்காலத்தைத் தவிர மற்றைய நாட்களில் சனக்கூட்டம் மிகக் குறைவு. நான் சென்றபோது இருபத்தைந்து பேர்கூட இருந்திருக்கமாட்டார்கள். மாணிக்க கங்கையின் நீரோட்டம் மனதிற்கு மகிழ்வைக் கொடுத்தது. தனிமையில் முருகப் பெருமானை வேண்டுதல் செய்யும்போது உள்ளத்தில் என்றுமில்லாத ஒரு உருக்கம். அந்தச் சூழல் உணவைப் பற்றியோ அன்றி வேறு தேவைகளைப் பற்றியோ சிந்திக்க வேண்டாத நிலையை உண்டாக்கியது. முருகன் திருக்கோயிலின் பின்னால் ஒரு பெரிய அரச மரம்.

அந்த அரச மரத்தை நாடிச் சென்றேன். பைத்தியக்கோலம் பூண்ட இள்ளைஞர் ஒருவரைச் சந்தித்தேன். அவருக்குப் பக்கத்தே இன்னொரு இளைஞர் குறட்டைவிட்டுத் தூங்கிக் கொண்டிருந்தார். வயதால் இளைஞர். பார்ப்பவருக்குப் பைத்தியம்போல் தெரியலாம். காந்தக் கண்கள். முகத்தில் ஒரு தேஜஸ் . கண்களிலிருந்து கருணையைக் காட்டும் கண்ணீர். இத் திருக்கோலத்தை எத்தனை நாட்கள் பார்த்துக் கொண்டிருந்தாலும் அலுப்புத் தட்டாது.

நித்திரையாகக் கிடந்த இளைஞர் தூக்கங் கலைந்து எழுந்தார். ஏ தருமு! எழும்படா குளிக்க நேரமாச்சு என்று சொன்னார். இளைஞர் அதைக் கேட்டதாகத் தெரியவில்லை.

அவர் ஒரு புது உலகத்தில் சஞ்சரித்திருந்ததாக அவரது முகம் சொல்லியது. தருமுவின் உடலை உலுக்கினான் இளைஞன். அப்போதுதான் இந்த உலகிற்கு வந்தான் தருமு.

பரஸ்பரம் ஊர் பேர் எல்லாம் பரிமாறிக் கொண்டோம். சிவனொளிபாதமலை அடிவாரத்திலுள்ள வள்ளி மலைத்தோட்டத்தைச் சேர்ந்தவர்கள் அவ்விரு இளைஞரும். தருமு ஒரு கங்காணியாரின் மகன். மற்ற இளைஞராகிய வேலு ஒரு தொழிலாளியின் மகன். இருவரும் பாடசாலை நண்பர்கள். வேலுவின் தந்தை மெய்யப்பன் கங்காணியார் வீட்டில் உள்ள வேலைகள் எல்லாவற்றுக்கும் பொறுப்பானவர். உள்ளம் ஒன்றிய குடும்ப நண்பர்கள் என்றே கூறலாம்.

இளமை தொடங்கியே தருமுவுக்கு ஒரு சாமிப் பயித்தியம் என்று சொல்லிக் கொள்வார்கள். தருமுவோடு ஒத்த இளைஞர் களுடைய மனப்பாங்கு வேறுபட்டிருந்தது. விளையாட்டில் மனநாட்டம் இல்லை. கூத்து, சினிமா போன்ற கேளிக்கைகளில் கலந்து கொள்ளமாட்டான். இளைஞர்கள் சாதாரணமாகக் கோயிலுக்குச் சென்றால் அது ஒரு விளையாட்டு இடமாகவோ அன்றி சந்தைக் கடைகளாகவோ மாறிவிடும். தருமு இவை ஒன்றிலும் கலந்து கொள்ளாத மௌனியாக வாழ்ந்து வந்தான். வீட்டிலும்தான் உண்டு; தன் பாடுண்டு என்ற வாழ்க்கை.

ஒருமுறை கங்காணியார் வீட்டிற்கு கதிர்காமத்திலிருந்து ஒரு சாது வந்திருந்தார். சிவனடியார்களை உபசரித்து அனுப்புவதே ஜன்மசாபல்யம் என்று வாழ்ந்தவர் கங்காணியார். கங்காணியார் வீட்டிற்கு வராத சாதுக்களே இல்லை என்று சொல்லிவிடலாம். சிவனொளிபாதம் செல்லும் சாது யாத்திரிகர்கள் போகும்போதும் வரும்போதும் தங்குமடம் கங்காணியார் இல்லமாகும். தருமுவைப் பற்றிக் கவலையோடு சாதுவுக்கு கங்காணியார் கூறினார். சாது தருமுவின் உள்ளத்தை ஊடுருவிப் பார்த்தார். சாதுவின் முகம் மலர்ந்தது. தருமுவுக்கு ஒன்றும் இல்லை. ஒரு மாதத்திற்குக் கதிர்காமத்தில் இருப்பதற்கு அனுப்பி வையுங்கள். எல்லாம் சரியாகிவிடும் என்று கூறிச்சாது தன்பாட்டிலே போய்விட்டார்.

தருமுவுக்கும் வீட்டுச் சூழலை விலகி இருக்க வேண்டும் என்றொரு துடிப்பு. தருமு கதிர்காமத்திற்குச் செல்ல வேண்டும் என்ற விருப்பைத் தெரிவித்தான். யார் துணைக்குப் போவது? ஒரு மாதத்திற்கு தருமுவோடு யார் நிற்க முடியும் என்ற பிரச்சனை எழுந்தது. இத்தகைய சந்தர்ப்பங்களில்தான் மெய்யப்பனுடைய ஆலோசனைகள் பெரிதும் உதவின. மகன் வேலு வீட்டில் சும்மாதானே இருக்கிறான். அவனை அனுப்பி வைக்கலாம் என்றான் மெய்யப்பன். எல்லாவிதத்திலும் வேலு தான் தகுதி உள்ளவன் என்று எல்லோரும் கருதினர். வேலுவும், தருமுவும் நான் செல்வதற்கு இரு தினங்களுக்கு முன் வந்து சேர்ந்தார்கள். அரச மரத்தடியில் இருவர் மூவரானோம்.

வேலு, மாணிக்க கங்கையில் நீராடத் தருமுவை அழைத்தான். தருமுவுக்கு அன்று நீராட வேண்டும் என்ற எண்ணம் உதிக்கவில்லை. வேலுவை அனுப்பிவிட்டு என்னோடு உரையாட வேண்டும் போலிருந்தது. "வேலு நீ போய் நீராடிச் சுவாமிதரிசனம் செய்துவிட்டு வா. நான் மத்தியானம் நீராடுகிறேன். உடல்நிலை இப்போ சரியில்லை" என்று கூறினான் தருமு. வேலு தன்பாட்டில் எழுந்துபோய் விட்டான்.

'தருமு! உனக்கு உள்ளத்தில் என்ன குறை?' என்று பேச்சை ஆரம்பித்தேன். என் குறையை முருகன் தான் அறிவார். எனது குறை எல்லாம் தகுந்த ஒரு குருநாதன் கிடைக்க வேண்டும் என்பதுதான்.

" குருவாய் வருவாய் அருள்வாய் குகனே"

என்று தான் தினமும் வேண்டுதல் செய்கின்றேன். இத்தெளிவான பேச்சு கல்லாய் இருந்த எனதுநெஞ்சத்தையே உருக வைத்தது. "செல்லக்கதிர்காமத்தில் நான் அறிந்த ஒரு சாது இருக்கிறார். நான் இன்று மாலை செல்ல இருக்கின்றேன். என்னுடன் வந்தால் உமது கவலை எல்லாம் தீரும்" என்றேன். தருமுவின் உள்ளத்திலும் ஒரு மலர்ச்சி.

சாதுவைத் தரிசிப்பதற்குச் செல்லும்போது வெறுங்கையுடன் செல்லக்கூடாது என்று நினைத்து ஒரு விசுக்கோத்துப் பெட்டியும் ஒரு சீப்பு வாழைப்பழமும் வாங்கிக் கொண்டு சென்றோம்.

பெரியோரிடம், அரசனிடம், குருவிடம், குழந்தையிடம் செல்லும்போது வெறுங் கையுடன் செல்லக்கூடாது என்று சொல்வார்கள். மூவரும் சென்றோம். செல்லக் கதிர்காம விநாயகரைத் தரிசித்தோம்.

சுவாமிகளுடைய பன்னசாலையை நோக்கி மூவரும் சென்றோம். நேரம் மாலை ஐந்து மணி இருக்கும். சுவாமிகள் தியானத்தில் இருந்தார்கள். மூவரும் விழுந்து வணங்கி ஒரு பக்கம் ஒதுங்கி இருந்தோம். சுவாமிகள் கௌபீன உடையுடன் முழு நீறு பூசிய முனிவராய் விளங்கினார். சுவாமிகள் கண் விழித்தார்கள். வள்ளிமலை வள்ளலே வருக வருக என்று அழைத்தார்கள். சுவாமிகளுக்கு தருமுவை அறிமுகம் செய்து வைக்க வேண்டிய அவசியம் ஏற்படவில்லை.

**தருமன் எவ்வளவு நல்ல பெயர். இன்று தருமத்திற்குத் தான் எவ்வளவு பஞ்சமாக இருக்கிறது. அதருமம் தான் தருமம் இருந்த இடத்தைப் பிடித்துக் கொண்டது. தம்மைக் கற்றவர்கள் என்று கொள்ளுபவர்கள், பெரிய பதவிகளை வகிப்பவர்கள் தருமத்தினின்று தவறிவிட்டார்கள். அவர்கள் செய்யும் அதருமங்களைத் தான் பாமரமக்கள் தருமம் என்று நினைக்கிறார்கள். இந்த ரீதியிலே வாழ்க்கை அமைந்தால் தருமத்தின் இடத்திலே மக்கள் அடைக்கலம் புகுவது என்று ஆகிவிடும். பார்க்குமிடமெங்கும் அதருமமே நீக்கமற நிறைந்து நின்றால் தருமத்திற்குப் புகலிடமேது?**

இப்படி உபதேசம் செய்த சுவாமிகள் "அப்பா, அம்மா எல்லாரும் சௌக்கியமா?" என்று தருமுவைக் கேட்டார்கள். சுவாமிகள் நன்கு பழகியவராகக் காணப்படுகின்றாரே என்ற எண்ணம் தருமுவுடன் தலைதூக்கி நின்றது. தருமுவின் வீட்டிற்குச் சென்று சில நாட்கள் தங்கி தருமுவைக் கதிர்காமத்திற்கு அழைத்த சுவாமிகளே கௌபீனதாரியாக இருக்கிறார் என்ற தெளிவு இப்போதான் ஏற்பட்டது. முருகப் பெருமானே இத்திருக்கோலத்தில் வந்து ஆண்டு கொண்டான் என்று தருமு கண்ணீர் பெருக்கினான்.

'குழந்தாய்!' உனது வாழ்வின் குறிக்கோள் என்ன? என்று

வினவினார் சாது. உனக்கு என்ன தான் குறைவு உண்டு. நல்ல அப்பா நல்ல அம்மா. நல்ல குடும்பத்தில் பிறந்துள்ளாய் - சாப்பாடடுக்குக் குறைவில்லை. அப்பாவின் சொல்லைக் கேட்டு ஏதாவது ஒரு தொழிலைப் பார்த்துக் கொண்டு ஆனந்தமாக வாழ்வதுதானே!

வாய்விட்டுத் தன் குறைகளைக் கூறி அழுவதற்கு இப்பொழுதுதான் தருமனுக்குச் சந்தர்ப்பம் கிடைத்தது. அவனையும் அறியாது கண்களினின்று நீர் பெருகி வழிந்தது. உரத்த குரலில் சுவாமி! என்று விளித்தான். நெஞ்சை அடைத்தது. என்றாலும் வந்த அழுகையை அடக்கிக் கொண்டு பேசினான். வாழ்க்கைப் பயனைப் பெறுவதே என் அவா. தங்களிடம் மறைப்பானேன்? தாங்கள் அறியாததா? பல இடங்கட்கும் சென்றேன். பல பெரியோர்களையும் நாடினேன். இவ்வற்பனை ஏற்று அருள்புரிய எவரும் விரும்புவதில்லை. தங்கள் திருவடிகளை அடைந்துள்ளேன். இவ் ஏழைக்குத் தங்கள் கருணைப் பார்வை கிட்டுமா? என்று சொல்லிவிட்டு கால்களில் விழுந்து அழத் தொடங்கினான்.

சாது தருமனை அன்புடன் இரு கைகளாலும் பிடித்து எழுப்பினார். ஆறுதலடையுமாறு கூறினார். சிறிதுநேரம் கழிந்தது. சுவாமிகள் மூவரையும் கையமர்த்தி இருக்கச்செய்தார். 'தருமு! வாழ்க்கைப் பயன் என்பது நான் எடுத்து உன் கைகளில் கொடுத்துவிடக்கூடிய ஓர் பொருளல்ல. தன்னுடைய நலனைத் தானே முயன்று பெற்றாக வேண்டும். பிறர் பாதையைக் காண்பிக்கத்தான் முடியும். முயற்சியை மற்றவர்கள் செய்யப் பயன் மட்டும் உனக்குக் கிடைக்குமா? நீ உன் முயற்சியையே நம்பியிருக்க வேண்டும். முதலில் உன் மனதை விட்டு ஏனைய தீய எண்ணங்களையும் அகற்றி அதைத் தூய்மை பெறச் செய். ஆராய்ச்சி முறைகளால் மனதிலுள்ள பற்றுதல்களையெல்லாம் நீக்கிவிடு. பரம்பொருளை எவ்வகையிலாயினும் அண்டி மனதை அதிலேயே செலுத்தப்பழக்கு. இன்பப் பற்றுகள் அகன்றதும், மனம் ஒருமையைப் பெறும். அந்நிலையில் உண்மைப் பொருளை எளிதில் காண்பாய். பேரின்பமும் பெறுவாய்! என்றும் உபதேசித்தார்.

தருமன் விரிவாக உபதேசங்களைப் பெறவிரும்பினான். சாதுவும், உலக வாழ்வு உண்மையல்ல என்பதையும், இன்பப் பொருள்களைச் சேவிக்கச் சேவிக்கத் துன்பமே கிட்டுகிறது என்பதையும், வெறுப்பை மனதில் பயிலுவதனால் உண்மை இன்பம் எப்படிக் கிடைக்கின்றதென்பதையும் கூறிவிட்டு, தருமனுடைய மன உறுதிக்கேற்றவாறு பேரின்பம் பெறுதற்கேற்ற முறைகளையுங் கூறினார்.

'மறுபடியும் தங்களை எப்போது எங்கே பார்ப்பேன்?' என்று தருமன் வினவச் சாது, 'எதற்காக என்னைக் காணும் அவா? பரம்பொருளைக் காண்பதற்கன்றோ அவா இருக்க வேண்டும். என்னிடம் எந்த உதவியை எதிர்பார்க்கின்றாயோ, அவ்வுதவியையும் அப்பரத்தினிடமே எதிர்பார்த்து இரு. எல்லா இடையூறுகளும் அவன் எதிரில் மறைந்துவிடும். உன் விருப்பமும் கைகூடும். என்உதவியை மறந்துவிடு' என்று கூறினார் சாது. மூவரும் விழுந்து வணங்கி விடைபெற்றுத் திரும்பினோம்.

முருகன் திருக்கோயிலுக்கு வந்தோம். முருகப்பெருமானை வாயார வாழ்த்தினோம். வருடப்பிறப்பில் அன்று முருக தரிசனமும், சாதுவின் தரிசனமும் கிடைத்ததை நினைந்து நினைந்து இன்புற்றோம். ஆண்டுமுழுவதும் இந்த இன்பம் நிலைத்து நிற்க வேண்டும் என்று ஏங்கினோம். முருகன் சந்நிதியில் அடியற்ற மரம்போல் விழுந்தோம். விடைபெற்றோம். தனியாகச் சென்ற எனக்கு இருபக்கத்துணைகள். அவர்களுடைய வற்புறுததலின்பேரில் வள்ளிமலைத் தோட்டம் சென்று கங்காணியாரின் வீட்டில் இருநாட்கள் அவர்களுடைய உபசாரத்தில் திளைத்திருந்தேன். இருநாட்களும் தருமுவினுடைய உள்ள நிலையை பெற்றாருக்குத் தெளிவுபடுத்தும் வாய்ப்புக் கிடைத்தது. தருமுவின் உள்ள நிலையைப் புரிந்து கொண்டு அவருடைய சாதனைக்கு இடையூறில்லாமல் வாழ்வதாக உறுதி அளித்தனர். அவர்களிடமிருந்து விடைபெறும்போது தருமு முகமெலாம் கண்ணீர்வார நீங்கள்தான் என் முதல் குரு என்று நாத்தழுதழுக்கக் கூறினார். அவரைத் தழுவி குருவருளும் திருவருளும் உமக்குக் கிடைத்துவிட்டது. இனி ஒரு குறையுமில்லை என்று கூறி விடைபெற்றுக் கொண்டேன்.

மிகவும் உயர்ந்த முறையில் துறவுப் பாதையில் செல்ல தருமு தன்வாழ்க்கைப் பாதையை அமைத்துக் கொண்டான். தோற்றத்தால் துறவு கொள்ளவில்லை. உள்ளத்துறவு கொண்டான். பகலிலும் இரவிலும் தனிமையில் அமர்ந்து ஜபத்தையும் பூஜையையும் செய்து வந்தான். அதற்கேற்ற இடமும் வாய்த்தது. வருடத்தில் மூன்று நாட்களுக்கு மாத்திரம் திறந்து பூஜையும் விழாவும் நடத்தும் முத்துமாரியம்மன் கோயில் தருமுவின் சாதனைக்குரிய இடமாகியது. விழா நாட்கள் தவிர மற்றைய நாட்களில் பெரியவர்களோ குழந்தைகளோ அப்பக்கம் திரும்பியும் பார்ப்பதில்லை. தனிமையில் செல்ல அவர்களுக்கு ஒருவித பயமும் ஏற்பட்டது. அதனால் அப்பக்கம் திரும்பியும் பார்க்காமலே செல்வார்கள். வருடத்தில் 362 நாட்கள் பயத்தோடு வாழ்ந்து மூன்று நாட்கள் பக்தி செலுத்துவார்கள். இதுதான் பயபக்தியோ என்று நான் சிந்திப்பதுண்டு.

சாப்பாடு நேரந் தவிர மற்றைய நேரம் எல்லாம் கோயிலிலேயே கழிந்தது. சாப்பாட்டு நேரத்திற்குச் செல்லாவிட்டால் தாயார் துன்பப்படுவார். தன்னைத் தேடிவந்து விடுவார் என்ற பயத்தினாலேயே நேரத்திற்கு நேரம் தவறாது வீட்டிற்குச் சென்று வந்தார்.

தருமு சாதனை முறைகளைப் பயிலும் வழியை நன்கு அறிய முடியாது ஏமாறினான். மனம் நேர் எதிராகச் செல்ல விரும்பியது. கட்டுக்கடங்காத குதிரையைப்போல் மனதை நேர்மையான பாதையில் செலுத்த விரும்பினான். பூசைக்காகவோ, ஜபத்திற்காகவோ, பாராயணம் செய்ததற்காகவோ அரைநாழிகை நேரம் மனம் ஒருமைப்படாது திண்டாடினான். கோயிலில் உடல் இருந்தது உண்மை தான். மனம் துள்ளிக் குதித்தது. கடவுள் ஒருவர் இருக்கிறாரா என்றும் மனதில் சந்தேகம் எழுந்தது. என்றும் தோன்றாத தீய எண்ணங்களும் வாதங்களும் தோன்றலாயின. மனக் குதிரை கட்டுக்கடங்காது ஓடிற்று.

ஒவ்வோர் சமயம் கடவுளை எண்ணி அழுவான். கெஞ்சுவான். மனதின் உறுதியின்மையை நீக்கி உறுதி ஏற்படுமாறு அருள்புரிய வேண்டும் என வேண்டுவான். வேண்டுகோள் வீண்போகவில்லை. மனம் மெதுவாகப் பழைய பாதையை

நோக்கித் திரும்பிற்று. மெதுவாகப் போனபோக்கில் விட்டுத்தான் மனக்குதிரையைப் பழக்கி அடக்கித் தன் வழிக்குக் கொண்டுவர வேண்டும் என்பதை அனுபவத்தில் உணர்ந்தான். கவனத்துடன் மனதைச் சீரான நிலைக்குக் கொண்டுவந்தான். தீய எண்ணங்கள் வந்தபடியே மறைந்தன. இன்பத்தையும் மெல்ல மெல்லமாக உணரத் தலைப்பட்டான்.

திடீரென நிலைமை மாறியது. பழைய குருடி கதவைத் திறவடி என்ற நிலைமைக்கு மனம் திரும்பியது. உடல்நலமும் உலகின்பங்களும் தருமுவின் மனதைச் சூழ்ந்து கொண்டன. அற்பமான பொருளைத் தானும் பிறருக்குத் தியாகம் செய்ய மனம் மறுத்தது. கடவுளைத் தியானிக்க உட்கார்ந்தால் இன்பப் பொருள்கள் அகக்கண்முன்பு தாண்டவம் ஆடின. **பழைய வீட்டை சீர்ப்படுத்துகையில் முன்பிருந்ததைவிட அதிகமான கேட்டை அடைந்துதான் வீடு புதுமையைப் பெறும் என்பது தருமுவுக்குத் தெரியாது. எரியும் விளக்கு அணையும்போது அதிகமான ஒளியுடன் எரிந்த பிறகுதான் அணைவதுபோல், தீய எண்ணங்கள் மனதைவிட்டு முற்றிலும் அழிந்து போகையில் இப்படித்தான் அதிகமாகத் தோன்றும் என்பதும் தருமுவுக்குத் தெரியாது.** ஆதலால் அவன் நடுங்கிப் போனான். நான் உயர்வுபெற முயன்று முன்பிருந்த நிலையைவிடத் தாழ்வான நிலைமைக்கும் போகாமலிருக்க வேண்டுமே என்று கவலை தோன்றிற்று. ஜபம், தியானம், பாராயணம் முதலியவற்றைச் செய்வதற்கு முன்பிருந்த நிலைமையே போதும் என்றுகூட எண்ணிவிட்டான். கீழ்நிலைக்குப் போகாமலாவது காத்தருளுமென்று கடவுளிடம் அழுது வேண்டினான்.

இவ்வளவு கலக்கம் ஏற்பட்டும் சாது கூறிய பாதையை மட்டும் தருமன் விடாமல் பற்றிக் கொண்டான். உண்மைப் பற்றின்றி தியானம் செய்து யாது பயன்? என்ற எண்ணம் தோன்றும். ஆனால் அவன் அறியாத ஓர் அவா மறுபடியும் தூண்ட ஜபம் முதலியவற்றைத் தவறாது செய்து வந்தான். முடிவில் நாட்கள் செல்லச் செல்ல விருப்பமின்றியே செய்ய வேண்டிய தினக்கடன்களின் நிலைமைக்கு ஜபம் முதலியவற்றைக் கொண்டு வந்துவிட்டான்.

மாதங்கள் கழியவே ஆராய்ச்சி அறிவு வெற்றி பெற்றது. புற இன்பங்களின் பற்றுக் கயிறுகள் நைந்துபோயின. அமைதி அன்னை காட்சி அளித்தாள். சினம் எங்கோ மறைந்து கொண்டது. தான் அமைதியின்றித் தவித்த நிலைமையைக் குறித்துத்தானே சிரித்துக் கொண்டான். பிறந்த குழந்தை நிலைமையில் அப்போதுதான் இருந்ததாக தருமன் உணர்ந்தான். பிறருக்குச் சேவைபுரிவதிலும் பிறரிடம் அன்புப் பெருக்கைத் தடையின்றிச் செலுத்துவதிலும் இணையற்ற இன்பத்தை உணர்ந்தான். உடலையும், தன்னுடையது என்ற எண்ணத்தையும் மறந்தான்.

தான் பசியுற்றிருக்கையில், வேறொரு எளியவனுக்கு அவ்வுணவை அளித்து அவன் புசிக்கையில் தான் பசியற்றுப்போவதாக உணர்ந்தான். குளிர்காலத்தில் தன் ஆடையைப் பிறருக்குக் கொடுத்து அவன் குளிரின்றி மகிழ்கையில் தான் குளிரின் துன்பத்தை இழந்ததாக எண்ணி மகிழ்ந்தான். தோட்டத்து மக்கள் தருமனுக்கு மூளைக்கோளாறு ஏற்பட்டு விட்டதெனப் பேசலாயினர். உண்மையில் பித்தனுடைய தன்மை தருமுவிடம் இருந்தது. எங்காயினும் உட்காருவான். எங்கு வேண்டுமாகிலும் படுத்துக் கொள்வான். வாய் எதையோ முணுமுணுத்துக் கொண்டே இருக்கும். எவரைக் கண்டாலும் காரணமின்றித் திடீரென சிரிப்பான் அல்லது அழுவான். அல்லது கால்களில் வீழ்ந்து வணங்குவான்.

இந்த நிலையில் பூசை பாராயணம் எல்லாம் எங்கோ பறந்துவிட்டன. வீட்டிலுள்ளவர் ஏனைய முயற்சிகளையும் செய்து பார்த்தனர். பயனொன்றும் ஏற்படவில்லை. இனி ஒழுங்குபடுத்த முடியாதென நம்பிக்கையை இழந்து விட்டனர். இப்படி உலகினருக்கு தருமு பித்தனாகவே இருந்தான். எங்கு வேண்டுமானாலும் உட்கார்ந்து மணிக்கணக்கில் கண்களை மூடிக்கொண்டே இருப்பான். எப்பொழுதாவது நடக்கத் தொடங்கினால் நடந்து கொண்டே இருப்பான். எவராவது அணைத்துப் பிடித்து உட்கார வைத்த பிறகு தான் உட்காருவான். ஏதாவது பொருளிற்கு எந்த இடத்திலாவது அமர்ந்து கொண்டு பூசை செய்வான். தான் செய்வது என்ன? என்பதும் அவனுக்குத் தெரியாது. பித்தம் முதிர்ச்சி பெற்றுவிட்டதென மக்கள் எண்ணினர். எவருக்கும் துன்பத்தை விளைவிக்காத பித்தனாக தருமு

இருந்தான். நாள் முழுவதும் ஒரே இடத்தில் உட்கார்ந்திருப்பான். எவராவது தின்பண்டத்தைக் கொடுத்தால் புசிப்பான். நீரைக் கொடுத்தால் குடிப்பான். தானாக எதையும் வேண்டுவதில்லை. செய்வதுமில்லை.

சில நாட்கள் கழிந்தன. மறுபடியும் நிலைமை மாறிற்று. மௌனமாக இருப்பதை ஒழித்தான். மெதுவாகப் பேசத்தொடங்கினான். பூசை, ஜபம், பாராயணம் முதலியவற்றை ஒழுங்காகச் செய்து வந்தான். பிறருடைய கேள்விகளுக்கு அன்பொழுக விடை பகன்றான். பித்தம் குறைந்துவிட்டதென மக்கள் எண்ணினர்.

இத்தருணத்தில் முத்துமாரியம்மன் கோயிலின் வருடாந்த திருவிழாவை முன்னிட்டு மூன்று நாள் நிகழ்ச்சிகளுக்கு என்னை கங்காணியார்' அழைத்திருந்தார். தருமுவைக் காணவேண்டும் என்ற ஒரே ஆசை என்னைப் பிடித்து உந்தித் தள்ளியது. விழாவிற்கு முதல் நாளே சென்று சேர்ந்துவிட்டேன்.

என்னைக் கண்டதும் ஓடி வந்து கட்டித் தழுவினான். சுக நலம் எல்லாம் விசாரித்தான். மூன்று நாள் திருவிழாவிலும் ஒவ்வொரு மணித்தியாலம் அருமையாகப் பஜனை செய்தான். பஜனைப் பாடல் பாடும் போது இவ்வுலக நினைவின்றியே இருந்தான். எனது அருகிலேயே மான் தோலை விரித்துத் துயின்றான். நான் விழித்த நேரம் எல்லாம் தியானத்திலேயே இருப்பதைக் கண்டேன். மூன்று நாட்களும் என்னோடு உண்டு என்னோடு உறங்கி என்னோடு எழுந்து எல்லாக் கருமங்களிலும் சந்தோஷமாக ஈடுபட்டான்.

நான்காம் நாள் எல்லாரிடமும் விடைபெற்றேன். தருமு தோட்ட எல்லை வரையில் வந்து வழி அனுப்பி வைத்தான். அன்று தொடக்கம் தருமு வீடு திரும்பவே இல்லை. இரவு பகலாக நடந்து கொண்டே இருந்தான். பொழுது சாயும் வரை வீடு திரும்பாததால் மறுநாள் வரக்கூடும் என்று எண்ணினர். அக்கம் பக்கங்களில் விசாரித்தனர். எவ்வித தகவலும் இல்லை. சில சமயம் என்னுடன் வந்திருக்கலாமோ என்று எனக்குக் கடிதம் எழுதினர். உண்மை நிலையை விளக்கிக் கடிதம் ஒன்று

எழுதினேன். தருமு இவ்விடம் வரவில்லை. அவர் மிக உயர்ந்த ஆத்மீக நிலையில் உயர்ந்து விட்டார். அவரை நம்மால் விளங்கிக் கொள்வதே கஷ்டம். அவரைப் பற்றி நீங்கள் எவ்விதத்திலும் கஷ்டம் அடைய வேண்டியதில்லை என்று எழுதினேன்.

பல தோட்டங்களுக்கூடாக தருமுவின் பிரயாணம் நடைபெற்றது. கால் ஆறவிரும்பினால் ஒரு இடத்தில் உட்காருவார். படுக்க விரும்பினால் அந்த இடத்திலேயே படுப்பார். யாருடனும் எவ்வித பேச்சும் இல்லை. மயிலாடித் தோட்டத்துப் பெரிய ஆலமரத்தடியில் வந்து தங்கினார். அங்கு இருக்க வேண்டும் போல் தோன்றியது. இருந்தார். கண்களை மூடினார். ஆழ்ந்த தியானத்தில் இருந்தார். சாது ஒருவர் ஆடாமல் அசையாமல் அன்ன ஆகாரமின்றி நிஷ்டையில் இருக்கிறார் என்ற செய்தி சூழலில் உள்ள தோட்டங்கள் பலவற்றுக்கும் பறந்தன.

கற்பூரம் எரித்தார்கள். தேங்காய் உடைத்தார்கள். பழமும் சில்லறைகளும் குவிந்தன. அவை எவற்றிலுமே சாது சம்பந்தப்பட்டதாகத் தெரியவில்லை. சிலர் பால் கொண்டு வந்து காத்திருந்தனர். இரவு பகல் எல்லாம் ஒன்றுபோல் அவரது வாழ்வு இருந்தது.

முடிவில் அன்பர்கள் வாயைத் திறந்து பால் குடிக்க வைத்தனர். தாமே வாயையும் கழுவினர். இவை எதுவுமே அவர் அறியார். இம்முறையில் 2,3 மாதங்கள் கழிந்தன. ஒரு சிலர் அவரைத் தரிசிப்பதால் தமக்கு ஜன்ம சாபல்யம் ஏற்படும் என்ற நோக்கத்தோடு வந்தனர். வணங்கி ஆறுதல் பெற்றுச் சென்றனர். வேறுசிலர் சாமியார் வாய்திறந்து பேசுவார்; தமக்கு ஏதாவது நல்ல வார்த்தை சொல்லுவார் என்று காத்திருந்து ஏமாந்து சென்றனர். இன்னும் சிலர் தீரா நோய்களைத் தீர்க்க வல்லவர் என்று நோயாளரை அழைத்து வந்தனர். அவரை வணங்கிச் சென்ற நோயாளர் சிலர் சுகம் பெற்றனர். இதனை அறிந்து பலருடைய கூட்டம் பல்கியது.

ஒரு நாள் அன்பர்கள் உணவை ஊட்டுவதற்காக அழைத்தனர். தியானம் கலையவில்லை. அசைத்துப்பார்த்தனர். ஏனைய முயற்சிகளும் வீணாயின. வருத்தத்துடன் திரும்பினர்.

மறுநாளும் வந்து பார்த்தனர். பயனில்லை. வழக்கம்போல் 20 நாட்களுக்குப் பின்னர் ஒரு நாள் அன்பர்கள் வந்து உடலைத் தொட்டு அசைத்துப் பார்த்தனர். உடல் குளிர்ந்திருந்ததைக் கணடனர். உடல் கட்டையாகி விட்டதை உணர்ந்தனர்.

தருமனுடைய உடலைச் சமாதி வைத்து அதன்மேல் குடிசையும் கட்டினர். உருண்டையான கல் ஒன்று கொண்டு வரப்பட்டு சிவலிங்கம் நாட்டிப் பூஜை செய்யத் தொடங்கினர். கோயிலும் தருமலிங்கம் என்றே பெயர் பெற்றது. தருமனிடம் உபதேசம் பெற முடியாதவர்கள் தருமலிங்கத்திடம் அருள் பெற்று வருகிறார்கள்.

# 3. பூண்டி மகான்

பூண்டி என்பது ஒரு ஊரின் பெயர். இது தென்னிந்தியாவில் சென்னை இராச்சியத்தில் செங்கற்பட்டு மாவட்டத்தில் திருவள்ளூர் தாலுக்காவில் இருக்கும் ஊர். இங்குக் கொற்றலை என்று ஒரு ஆறு பாய்கின்றது. ஆற்றின் குறுக்கே அணை ஒன்றைக் கட்டி ஒரு நீர்த்தேக்கத்தை அமைத்துள்ளனர். நீர்த்தேக்கத்தின் முழு உயரம் 137 அடி. நீர்ப்பரப்பின் அளவு 12 ச.மைல். இத்தேக்கத்திலிருந்து நீர் கொற்றலை வழியாகப் புழலேரிக்குக் கொண்டு செல்லப்பட்டு சென்னை நகரில் குடிநீராகப் பயன்படுகிறது.

அம்பிகையின் கட்டளைப்படி சுப்பிரமணியப் பெருமான் ஏழு இடங்களில் ஏழு லிங்கங்களைப் பிரதிட்டை செய்து பூசித்தார். அவற்றில் ஒன்று பூண்டி ஆகும். பூண்டியில் ஈஸ்வரன் சிவராத்திரி தினத்தின்போது நரிக்கு மோட்சம் கொடுத்ததாகத் தலபுராணம் கூறுகின்றது. நீர்த்தேக்கம் இருக்கும் இடத்தில் திருவெண்பாக்கம் என்ற பாடல் பெற்ற சைவத்தலம் ஒன்று இருக்கிறது. இவ்வூரின் பெயர் வெண்பாக்கம் ஆயினும் இங்குள்ள கோயிலின் பெயர் வெண்கோயில் என்பதாகும்.

"வெண்கோயில் இங்கிருந்தாயோ என்ன" என்பது சுந்தரர் வாக்கு.

மனிதனுக்கு வாழ்க்கையில் பலவிதமான பிரச்சினைகள் ஏற்படுவது உண்டு. பிரச்சினைகளுக்கு முடிவு காணாமல் திண்டாடும்போது கடைசியில் கடவுளை நினைக்கின்றான். ஆனால் சிலமனிதர்கள் எவ்வித முயற்சியும் செய்யாமல் விருப்பு வெறுப்பற்றவர்களாய், இன்பதுன்பம் இல்லாதவர்களாய் தாங்கள் யார்? கடவுள் என்றால் என்ன? என்று அறிந்து கொள்வதில் மனத்தை ஞானமுகமாகத் திருப்பி அதில் முயன்று வெற்றியும் அடைகின்றார்கள். பகவான் ரமண மகரிஷிகளும் பூண்டிமகானும் அத்தகையவர்களே.

பூணடிமகான் என்பது இவருடைய சொந்த பெயர் அல்ல.

பூண்டியில் அமர்ந்ததால் ஏற்பட்டது. ஆற்றுச்சுவாமிகள் என்பதும் இவருக்குரிய ஒரு பெயராகும். இவரை ஆற்றிலே கண்டதால் ஏற்பட்ட பெயராகும் அது. மகான் எந்த ஊர்? - யாருக்குந் தெரியாது. மகானின் சொந்தப் பெயர்? - தெரியவில்லை. மகானின் வயது தாய் தந்தையர் குடும்பம் பற்றியது என்ன? தெரியவில்லை. எந்த மதம்? எந்தச்சாதி? - தெரியவில்லை, ஏன் திண்ணையில் அமர்ந்தார்?- புரியவில்லை. எப்படி பதினெட்டு ஆண்டுகளாக ஒரே இடத்தில் அமர்ந்துள்ளார்?- அது அவரின் மகிமை. அங்கு போடும் மலர் மாலை, பழம், தேங்காய் வருடக்கணக்கில் இருந்தாலும் போட்டது போட்டபடியே உள்ளது ஏன்? - அதுவும் தெய்வத்தன்மை. எந்தத் தெய்வத்தை வணங்குகின்றார்? - தெரியவில்லை. யாருடைய அவதாரம்? - தெரியவில்லை. இவர் யார்? - இவர் ஓர் உயிருள்ள தெய்வம்.

இந்தச் சந்தர்ப்பத்திலேதான் கந்தபுராணச் செய்யுள் ஒன்று நினைவுக்கு வருகின்றது.

**ஊரிலான் குணங் குறியிலான் செயலிலான் உரைக்கும்**
**பேரிலான் ஒரு முன்னிலான் பிறிதோர்**
**சாரிலான் வரல் போக்கிலான் மேலிலான் தனக்கு**
**நேரிலான் உயிர்க் கடவுளாய் என்னுளே நின்றான்.**

இயற்கையின் சக்தியாகவும் எல்லாச் சீவர்களையும் இயக்கி அதனுள் பரவியுள்ள அந்தப் பரம்பொருளை உணருவதே ஒவ்வொரு மனிதனின் பிறப்பின் பயனாகும். என்றைக்காவது ஒருநாள் எல்லா சீவராசிகளும் தெய்வத்தோடு சேர்ந்தே ஆகவேண்டும். ஆனால் சிலர் அறிவைக் கொண்டு விடாமுயற்சி யால் அதுவரை காத்திராமல் இவ்வுலக வாழ்க்கையை மறந்து முத்தி எய்துகின்றார்கள்.

ஒரு சக்கரவர்த்தியின் இராச்சியத்தில் எங்காவது கலகம் நிகழ்ந்தால் அதனை அடக்குவதற்குச் சக்கரவர்த்தியே நேரில் செல்வதில்லை. தனது பிரதிநிதி ஒருவரையே அனுப்பிவைப்பது வழக்கம். அதுபோல பூமியில் எங்காவது ஒரு இடத்தில் பாவம் மலியுமானால் அதனைப் போக்குவதற்காகப் பகவான் ஒரு அவதார புருஷரையே அனுப்பி வைக்கின்றார். அவதாரம் என்ற

சொல்லுக்குக் கீழிறங்குதல் என்பது பொருள். பெரிய முக்தர்கள் மக்கள்மேல் கொண்ட கருணையினால் மக்களை ஈடேற்றுவதற்குக் கீழிறங்கி வருகின்றார்கள்.

கடவுள் காலங்கள்தோறும் மகான்களை அனுப்பி அவர்கள் மூலம் உலகத்துக்கு அருளையும், நன்மைகளையும் வழங்குகிறார். தண்ணீரைப் படைத்த இறைவன் தாகத்தையும் உண்டாக்கினான். உணவை உண்டாக்கிய இறைவன் பசியையும் படைத்தான். செடி கொடிகளை வளரவிட்டவன் அவற்றில் மூலிகைகளை வைத்தான். ஆனால் மனிதனைப் படைத்த இறைவனோ மனிதனில் தன்னையே இணைத்துக் கொண்டான். அந்த சீவாத்துமாவில் உள்ள பரமாத்துமாவை நம்மால் கண்டுகொள்ள முடியவில்லை. அந்தப் பரமாத்துமாவை எமக்கு விளங்கவைப்பவர்கள் மகாத்துமாக்கள். அத்தகைய மகாத்துமாவே பூண்டி மகான். பூண்டியிலே ஆண்டியாக அமர்ந்து வேண்டியவர் குறைகேட்டு அவற்றை நீக்கும் அருளாளன்.

பூண்டி மிகமிகச் சிறிய கிராமம்தான். புட்டபர்த்தி யாருக்கும் தெரியாத ஒரு கிராமம். ஸ்ரீ சத்திய சாயிபாபா அவர்களின் அவதாரத்தினால் புட்டபர்த்தி உலகப் பிரசித்தி பெற்ற யாத்திரைத் தலங்களுள் ஒன்றாக மாறியது போல பூண்டியும் உலக மக்களின் யாத்திரைத் தலமாக மாறிவருகின்றது. இதுவே பூண்டி மகானுடைய சந்நிதான விசேடமாகும்.

பூண்டி மகானைத் தரிசிக்க நாள்தோறும் ஆயிரக்கணக்கில் மக்கள் கூடிக்கொண்டே இருக்கின்றார்கள். 20 ஆண்டுகளுக்கு மேலாக ஒரு அம்மையாரின் வெளித்திண்ணையிலே அமர்ந்தவர் தான் அமர்ந்தபடியே இருக்கின்றார். கால்கள் நிலத்தில் பரவியதே கிடையாது. அவர் பூமியில் எங்கும் நடக்காமலே, தம்மை நாடி வருவோருக்கு நடக்கப்போவதையும் நடந்ததையும் உணர்த்துகின்றார்.

சுவாமிகள் சுமார் 40 ஆண்டுகளுக்கு மேலாகக் குளித்ததே கிடையாது. ஆனால் அங்கு வருவோரின் மும்மல அழுக்குகளை நீக்கித் தூய்மைப்படுத்துகின்றார். எப்பொழுதும் மலம் கழித்ததே இல்லை. இது இயற்கை நியதிக்கு அப்பாற்பட்டதேயாகும்.

ஆனால் அந்த அண்ணல் இருக்கும் இடத்திற்குச் சென்றால் அங்கு ஜவ்வாது கலந்த நறுமணம் வீசிக்கொண்டே இருக்கும்.

அறிவு என்பது மனிதனுக்குக் கிடைத்த பெரிய செல்வம். இதைப் பயன்படுத்தி மக்கள் முத்திநிலை எய்த வேண்டும். ஆனால் அந்தப் பரப்பிரமத்திடம் அறிவோ வாக்கோ, கண்களோ, மனமோ சென்றடைய மாட்டா. பொன்பொருள் போன்றவற்றிற்கு அதிபதியான திருமாலினாலும், கல்வி அறிவு, செருக்கு போன்றவற்றிற்கு அதிபதியாகிய பிரமனாலும் அடியையும் முடியையும் காணமுடியவில்லை. இதன் தத்துவம் கல்வி கேள்வியினாலும் பொன் பொருள் பலத்தினாலும் இறைவனை அடைய முடியாது என்பதாகும். இவைகளின் உதவியைக் கொண்டு இறைவனை அடையலாம். எப்படியெனில் ஓர் மாடிமேல் ஏறுவதற்கு படிக்கட்டுகள் தேவை. படிக்கட்டுகளின் மூலமாக மேல்மாடியை' அடையலாம். ஆனால் படிக்கட்டுகள் மாடிமேல் சென்று மாடியைப் பார்ப்பதில்லை. இதன்படி அறிவு என்ற படிக்கட்டின் மூலம் முத்தியாகிய மேல்நிலையை நாம் அடையலாம்.

இந்த மேல் நிலைகளை அறிவிப்பதற்காகவே மதங்களும் மதாசாரியர்களும் குருகுலங்களும் தோன்றின. ஆனால் எல்லா மதங்களும் ஒரே கருத்தைத்தான் கூறுகின்றன. அவைகளின் வழிமுறைகள்தான் வித்தியாசம்.

சமயச் சடங்குகள் யாவும் - சாதனைகள் யாவும் கடவுள் உணர்வை மனித உள்ளத்தில் தட்டியெழுப்ப ஏற்பட்டவையே. புலனுணர்வைத் தேய்த்துக் கடவுள் உணர்வை தூண்ட வேண்டும். இத்தகைய உணர்வை மகான்களுடைய சந்நிதியிலே மிக இலகுவாகப் பெற்றுவிடலாம். இதனையே தான் பூண்டி மகானுடைய திருச்சந்நிதி செய்து வருகின்றது.

# 4. புலவர் நாடு புக்க புலவர்மணி

ஈழத்துச் சைவத் தமிழ் வானில் இருமணிகள். ஒருவர் வடக்கே நாதப் பிரம்மமாக ஒலித்துக் கொண்டிருக்கும் பண்டிதமணி அவர்கள். அடுத்தவர் கிழக்கே அசையாமணியாக ஒலித்துக் கொண்டிருந்த புலவர்மணி அவர்கள். இருமணிகளும் ஒரே சிற்பாசானால் ஒரே காலத்தில் வார்க்கப்பட்ட மணிகளாகும்.

பண்டிதமணி அவர்களுடன் ஒரு முறை அவரது இளமைக் காலச் செய்தியைப் பற்றிப் பேசிக் கொண்டிருந்தபோது "எனது வாழ்க்கையில் பாதி புலவர்மணி அவர்களுடன் சம்பந்தப்பட்டது" என்று குறிப்பிட்டார்கள். புலவர்மணி அவர்களிடம் கேட்டபோது அதனை முற்றுமுழுதாக ஒப்புக்கொண்டதோடு அதனைத் தாம் இப்போ நினைவுகூர்ந்து கொண்டு வருவதாகவும் குறிப்பிட்டார்கள். சில மாதங்கள் கழிந்தன. சிந்தாமணியில் உள்ளதைச் சொல்லத் தொடங்கினார்கள் புலவர்மணி அவர்கள். இந்தக் கலியுகத்தில் உள்ளதைச் சொல்பவர்கள் இருக்கக் கூடாது என்று தேவர்கள் கருதிவிட்டார்கள் போலும். புலவர்மணி அவர்கள் சொல்லத் தொடங்கியது அப்படியே இருக்க, சொல்லி முடிக்கவிடாமல் தேவர்கள் அவரைத் தந்திரமாகத் தமது நாட்டுக்கு அழைத்துச் சென்று விட்டார்கள். புலவர்மணி அவர்கள் சொல்லத் தொடங்கியதை முற்றாகச் சொல்லுமாறு விட்டிருந்தால் அவர்கள் சொல்லி முடிக்கும்போது நாம் எல்லாரும் கலியுகத்தில் கிரேதாயுகத்தைச் சந்தித்திருப்போம். இதனால் நாம் எல்லாரும் அபாக்கியசாலிகளாகி விட்டோம்.

புலவர்மணி அவர்களுக்கும் எம்மைப்போல கவலை கட்டாயம் இருக்கும். சொல்லத் தொடங்கியதைச் சொல்லி முடிக்கவில்லையே என்ற கவலையோடுதான் சென்றுள்ளார்கள். அவருடைய சிந்தனை தேக்கிய முகத்தைக் கண்ட தேவர்கள் காரணத்தைக் கேட்கவே போகிறார்கள். அவரும் தமது கவலைக்குக் காரணத்தைக் கூறி மறுபடியும் நம்மிடையே வந்து புலவர் மணியாக ஒலிக்கத்தான் போகிறார்கள். விட்டகுறையை நிரப்பத்தான் போகிறார்கள். அப்பொழுது எமது மனக்குறையும் ஓரளவு தீரும்.

யாழ்ப்பாணத்திலே நடந்த தமிழாராய்ச்சி மகாநாட்டிலேதான் அடியேன் முதன் முதல் புலவர்மணி அவர்களுடைய பேச்சைக் கேட்க முடிந்தது. அவர்கள் தமக்கென்று தனியாக ஒரு பாணி வைத்துக் கொண்டு பேசியமை இந்திய இலங்கைப் பேச்சாளர்களையெல்லாம் கவருவதாக அமைந்திருந்தது.

கவிஞர் பரமஹம்சதாசன் அவர்கள் மட்டக்களப்பில் இருந்த காலத்தில் முதன்முறையாக அவருடைய விருந்தினனாக மட்டக்களப்பிற்குச் சென்றிருந்தேன். அவரே புலவர்மணி அவர்களுடைய இல்லத்திற்கும் அழைத்துச் சென்று அடியேனை புலவர்மணி அவர்களிடம் அறிமுகம் செய்து வைத்தார்கள். அன்றையதினம் வாழ்க்கையில் மறக்க முடியாத ஒரு தினமாக அடியேனுக்கு வாய்த்து இருந்தது. அந்தநாளை இன்றும் பசுமையாக நினைவு கூருகின்றேன்.

அறிமுகம் செய்து வைக்கப்பட்டவர் புலவர். அறிமுகம் செய்து வைத்தவர் கவிஞர். புலவருக்கும் கவிஞருக்கும் இடையில் அடியேன். ஒருபக்கம் திரும்பினால் தமிழின் இனிமை. மறுபக்கம் திரும்பினால் பக்திரசம். இதில் எது இனியது என்றே அடியேனால் தீர்மானிக்க முடியவில்லை. தேனில் தோய்ந்த பண்டத்தை உண்ணும்போது எந்தப் பக்கம் இனிமையானது என்று யாரால்தான் கூறமுடியும்?

அடுத்த சந்திப்பு ஆத்மஜோதியின் கௌரவ ஆசிரியராகவிருந்த திரு. க. இராமச்சந்திரா அவர்கள் இல்லத்தில் நிகழ்ந்தது. இதிலும் ஒரு புது அனுபவம். புலவர்மணி அவர்கள் தாமே பாடிய பகவத்கீதை வெண்பாவினால் உள்ளத்தை உருக்கினார்கள். அதனை அனுபவித்துக் கொண்டிருந்த இராமச்சந்திரா அவர்கள் அடிக்கடி தமது கண்களில் இருந்து வழிந்தோடிய கண்ணீரைத் துடைக்கும் போதெல்லாம் “அழுதால் உன்னைப் பெறலாமே” என்று மணிவாசகர் சொன்ன இடம் இதுதானோ என்று அடியேன் நினைத்துக் கொண்டேன்.

மூவரும் தேவருலகு புக்கனர். மூவரும் கட்டாயம் சந்தித்தே இருப்பார்கள். என்ன பேசிக்கொள்வார்கள் என்று

கற்பனை செய்து பார்த்தேன். மூவரும் ஆனந்தக் கண்ணீர் சொரிந்திருப்பார்கள். வாய்திறந்து யாரும் பேசியிருக்க மாட்டார்கள். கட்டித்தழுவி ஆனந்தம் அனுபவித்திருப்பார்கள். மூவரும் ஞானிகளே. "மோனம் என்பது ஞானவரம்பு" என்று சொன்ன இடம் இதுதானோ என்று சிந்திக்கின்றேன்.

**எவன் ஒருவன் தனது ஆத்ம திருப்திக்காக எழுதுகின்றானோ அந்த எழுத்துத்தான் மற்றையோருடைய ஆத்மாவையுந் திருப்திப்படுத்தும். புலவர்மணி அவர்கள் பகவத்கீதை வெண்பாவைத் தமது ஆத்ம சாந்திக்காகவே பாடினார்கள். அதனால் அது அதனைப் படிப்போர்க்கும் ஆத்மசாந்தியைக் கொடுக்கிறது.** தாமே பாடிய பாட்டைத் தாமே படித்து இன்பங் கண்டார்கள் புலவர்மணி அவர்கள். அதனால் தான் பெற்ற இன்பம் வையகமும் பெறவேண்டும் எனக் கருதினார்கள். கர்மயோகம், பக்தியோகம், ஞானயோகம் என்று பிரித்து மூன்று நூலாக வெளியீடு செய்தார்கள். அதில் பக்தியோகத்தை அச்சில் பதிப்பிக்கும் வாய்ப்பும் எமக்குக் கிடைத்தது. அதனால் எமது அச்சகம் ஒரு புனித தொண்டைச் செய்தது என்று பெருமைப்படுகிறோம்.

கடைசியாக அவர்களை சென்ற ஆண்டு காரைதீவில் சித்தானைக்குட்டி சுவாமிகளின் குருபூஜையின்போது சந்தித்து நீண்டநேரம் அளவளாவச் சந்தர்ப்பம் கிடைத்தது. நல்லாரோடு இணங்கியிருக்கும் சந்தர்ப்பம் கிடைத்ததையிட்டு ஆனந்தம் அடைகின்றேன்.

புலவர்மணி அவர்களுடைய மறைவைக் கேட்டபோது அவர்களுடைய பகவத்கீதை வெண்பாவை எடுத்துப் பார்த்தேன். பூத உடம்பு மறைந்ததாகத்தான் பத்திரிகைகளில் செய்திகள் வெளிவந்தன. வானொலியும் அப்படியே அறிவித்ததோடு அவரது ஒலியையே ஒலிபரப்பியது. அவரது ஒலியைக் கேட்கும் போது உருவெளித்தோற்றம் ஒன்று மின்னியது. ஆனால் பகவத்கீதை வெண்பாவினுள்ளே அவர் மகிழ்வோடிருப்பதைக் கண்டு ஆனந்தம் கொண்டேன். புலவர்மணி அவர்களைக் காணவிரும்புவோர் பகவத்கீதை வெண்பாவினுள்ளே அவரைக்காணலாம். அவரோடு சத்சங்கம் செய்ய விரும்புவோர் பகவத்கீதை வெண்பா மூலமே செய்து கொள்ளலாம்.

# 5. நாவலர் நூற்றாண்டில் நாம் சாதித்தது என்ன?

நாவலர் என்றதும் தமிழ் நாட்டில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த இரா. நெடுஞ்செழியன் அவர்களை நோக்கி ஓடுகின்றது இன்றைய இளைஞரின் உள்ளம். அந்த அளவுக்கு நாவலர் பெருமானை நாமும் உணர்ந்து கொள்ளவில்லை; எமது இளைய சந்ததியினருக்கு அறிமுகமும் செய்து வைக்கவுமில்லை. கலைக்களஞ்சியத்தைப் பார்த்து ஆறுமுகநாவலரை அறிந்துகொள்ளும் அளவுக்கு நமது இளைஞருடைய தமிழ்ப்பக்தியும் சைவசமய உணர்வும் முன்னேறியுள்ளது.

நாவலர் பெருமானை ஐந்தாங்குரவர் என்று அழகாக நூலிலே அச்சிட்டுள்ளார்கள். ஆனால் கிழக்கு மாகாணத்தில் உள்ள தமிழர்களிலும் மலையகத்திலுள்ள தமிழர்களிலும் எத்தனைபேர் நாவலர் பெருமானை அறிந்துள்ளார்கள்? எத்தனை சங்கங்கள் நாவலர் பெருமானின் குருபூசையைக் கொண்டாடுகின்றனர்? சுவாமி விபுலானந்தருடைய தினத்தை வடமாகாணத்தில் எத்தனை சங்கங்கள் நினைவுகூர்ந்துள்ளன? இந்த அளவுக்கு எமது பிரதேச உணர்வுகள் தலைதூக்கி உள்ளன.

நாவலர் பெருமான் பாடசாலைப் பிள்ளைகளுக்கென்று பாலபாடங்கள் எழுதியதன் பின்பு, எத்தனையோ வாசிப்புப் புத்தகங்கள் தோன்றி, இருந்த இடமும் தெரியாது மறைந்து விட்டன. நாவலர் எழுதிய இரண்டாம் பாலபாடத்திலுள்ள நீதிவாக்கியங்களும் நீதிக்கதைகளுமே மனித வாழ்க்கைக்கு வழிகாட்டப் போதியனவாகும். இரண்டாம் வகுப்பு மாணவன் நல்ல விடயங்களை மனதில் பதித்துக் கொள்வதற்கும், ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் உள்ள இரண்டாம் வருட மாணவர்கள் நல்லனவற்றை உணர்ந்து கொள்வதற்கும், இரண்டாம் வகுப்பு ஆசிரியர் நல்லாசிரியனாய் வாழ்ந்து காட்டுவதற்கும், பல்கலைக்கழகப் பேராசிரியர்களில் இரண்டாந்தரத்தினர் தம்மை முதலாந்தரத்தினர் ஆக்கிக் கொள்வதற்கும் நாவலர் பெருமானின்

பாலபாடம் இரண்டாம் புத்தகம் ஒன்றே போதியது.

இடைக்காலத்திலே தமிழ்க் குழந்தைகளின் தமிழ் அறிவும் சமய உணர்வும் மேலே உள்ளவர்களை நோக்கிச் செல்லாமல் தடுக்கப்பட்டு, கீழே இருப்பவர்களை நோக்கிச் செல்லுங்கள் என வாசினைப் புத்தகங்கள் மூலம் வழிநடத்தப் பெற்றுவிட்டார்கள். நாவலர் பெருமான் தம்முடைய வாழ்நாளில் தனித்து ஒருவராக நின்று கொண்டே தமிழ் மொழிக்கும் சைவ சமயத்திற்கும் ஒரு திருப்பு மையத்தை உண்டாக்கினார்.

இந்த நூற்றாண்டு காலத்திலே, நாவலர் பெருமானுக்குப் பின்பு மேல்நோக்கிய திருப்புமையம் ஏற்பட்டுள்ளதா? என்றால், இல்லை என்றே கூறவேண்டியுள்ளது. ஆனால் கீழ் நோக்கிய திருப்பு மையங்கள் பல ஏற்பட்டுள்ளன. நாவலர் பெருமான் மறைந்து நூறாண்டுகளாக செய்யப்பெறாத ஒன்றை இன்றுள்ள நாவலர் பக்தர்களும், தமிழை வளர்க்கும் சங்கங்களும் சமயத்தை வளர்க்கும் சங்கங்களும் செய்தே ஆகவேண்டும்.

ஈழம் முழுவதிலும் பரந்திருக்கும் தமிழர்களுக்கே நாவலர் பெருமானைப்பற்றி நன்கு அறிந்துகொள்ளக்கூடிய வாய்ப்பு ஏற்படவில்லை. தமிழகத்திலும் இன்று மேடைப்பேச்சில் வல்லவர்களாகக் கருதப்படுபவர்களில் ஒரு சிலரே ஈழநாட்டுக்கு வரும் காலங்களில் நாவலர் பெருமானை நினைவுகூருகின்றார்கள் என்றால், அதில் எவ்வித பொய்யும் இல்லை என்றே கூறவேண்டும். நாவலர் நூற்றாண்டு விழாச்சபையினருக்கு இதில் பெரும் பொறுப்பு உள்ளது. உலகு எங்கணும் உள்ள தமிழர்கள் நாவலர் பெருமானை அறிந்து கொள்ள வாய்ப்பு ஏற்படுத்துவதோடு உலகப் பெரியார் வரிசையில் நாவலர்பெருமானை அறிமுகம் செய்துவைக்க வேண்டிய பெரும் பொறுப்பும் ஏற்பட்டுள்ளது.

தற்போது இலங்கையில் கல்வி மந்திரியாக இருப்பவர்கள் சமய உணர்வோடு சமரச மனோபாவமும் உடையவர்கள். நாவலர் பெருமானின் பாலபாடங்களைப் படிப்பதால் எதிர்காலத்தில் நல்லதொரு சமுதாய மாற்றம் ஏற்படும் என்பதனை விளங்கவைத்து அப் பாலபாடங்களை உபபாடப்புத்தகங்களாகவாவது வைப்பதற்கு வேண்டிய ஒழுங்குகளைச் செய்ய வேண்டும்.

அடுத்த ஆண்டில் நடைபெறவிருக்கும் உலகத் தமிழாராய்ச்சி மகாநாட்டிலே நாவலர் பெருமானுடைய படைப்புகளைக் கொண்ட ஒரு கண்காட்சியும் ஈழத்துப் படைப்புகளைக் கொண்ட ஒரு கண்காட்சியும் இடம்பெறச் செய்ய வேண்டும். ஈழத்திலுள்ள புலவர்களால் எழுதப்பட்ட பல நூல்கள் அச்சுவாகனம் ஏறாமலே இருக்கின்றன. அக்கையெழுத்துப் பிரதிகளையோ, ஏட்டுப்பிரதிகளையோ கண்காட்சியில் இடம்பெறச் செய்யத் தக்கதாக நாம் முயல வேண்டும்.

நாவலர் பெருமானைப் பற்றிய ஆய்வுநூல் ஒன்று தமிழாராய்ச்சி மகாநாட்டில் வெளியீடு செய்தால் எதிர்காலத் தமிழருக்கும் அது மிகப் பயனுள்ளதாக இருக்கும். நாவலர் பெருமானுடைய பணி தொடர்ந்து நடைபெறுவதற்கு மலையகம் ஏற்ற இடமாக அமைந்துள்ளது. நாவலர் பெருமான் இன்று பிறக்க நேர்ந்தால் மலையக மக்கள் மத்தியிலேதான் பிறந்து தொண்டு செய்யவிரும்புவார்.

கல்வியறிவிலும் சமய அறிவிலும் பின் தங்கி இருக்கும் மலையகத் தமிழ் மக்கள் மத்தியிலே கல்வி விருப்பையும் சமய உணர்வையுந் தூண்ட வேண்டிய கடமை ஒவ்வொரு தமிழ் மகனையும் சார்ந்ததாகும். நாவலர் பெருமானை நினைவுகூருமுகமாக மலையகத்திலே தோட்டந் தோறும் நாவலர் பெருமானுடைய பெயராலேயே வாசிகசாலைகளை ஏற்படுத்தி நாவலர் பெருமானுடைய நூல்களை இடம்பெறச் செய்தால் பெரிய தொண்டாகும். பல பாடசாலைகளில் உள்ள நூல் நிலையங்களில் நாவலர் பெருமானுடைய நூல்களைக் காணுதல் குதிரைக் கொம்பாக இருக்கிறது. நாவலர் பெருமானுடைய பிரதிமைப் படங்கள் வாசிகசாலை தோறும் பாடசாலைகள் தோறும் இடம்பெறச் செய்ய வேண்டும்.

நாவலர் பெருமானுடைய பெயரால் கல்விநிதி ஒன்று ஏற்படுத்தி அதனை நிரந்தர வைப்புப் பணமாக வைத்து அதிலிருந்து வரும் வட்டியைக் கொண்டு ஒவ்வொரு மாகாணத்திலிருந்து ஒவ்வொரு குழந்தைக்காவது புலமைப்பரிசில் வழங்கலாம். **இந்நூற்றாண்டை முன்னோடியாக வைத்துக்**

கொண்டு தமிழும் சமயமும் வளர நாம் ஆவன செய்தல் வேண்டும். நாங்கள் சமயத்தின் பெருமைகளைப் பேசிக் கொண்டிருக்கிறோமே தவிர, மக்களைச் சமய வாழ்க்கை நடத்துமாறு தூண்டத் தவறி விட்டோம். சமயம் உதட்டளவிலே தான் உண்டு. உள்ளத்திலே சமய வாழ்க்கை செல்லவில்லை.

கடவுளைப் பற்றி அறிந்து கொண்டிருக்கிறோமே தவிர, கடவுளை அனுபவிக்கத் தவறிவிட்டோம். கடவுள் அறிவுப் பொருள் அல்ல. அவர் அனுபவப் பொருள். மனித வாழ்க்கையிலிருந்து சமயம் பிரிந்து வெகுதூரம் சென்றுவிட்டது. வாழ்க்கையே, சமயம். சமயமே வாழ்க்கை என்பதை என்றைக்கு மக்கள் உணருகிறார்களோ அன்றைக்குத்தான் மனித சமுதாயத்தில் நாம் மனித பண்பாட்டைக் காண முடியும். ஆண்டில் ஒருமுறை ஒரு நாளைக்கு நாவலரை ஐந்தாங்குரவராக வைத்துக் குருபூசை செய்துவிட்டு அடுத்த ஆண்டுக் குருபூசை வரும் வரைக்கும் மறந்து விடுகின்றோம்.

நாவலர் பெருமானுடைய படத்திற்குத் தீபாராதனை செய்து அவரைத் தெய்வமாக்கிவிட்டு அவர் சமூகத்திற்குச் செய்த சேவைகளை நினைவுகூரத்தவறி விடுகின்றோம். அவர் செய்த சேவையில் ஆயிரத்தில் ஒன்றையாவது நாம் செய்ய முடியாதா? நாவலர் தனி மனிதரல்லர்; அவர் ஒரு தாபனம். அவர் தனி ஒருவராக இருந்து செய்த சேவையில் நூற்றில் ஒரு பாகத்தைதானும் இன்றைய தாபனங்களால் சாதிக்க முடியவில்லையே!

நாவலர் பெருமானின் பின்வரும் உபதேசங்கள் நமது வாழ்வைச் செம்மைப்படுத்துவதாக!

" நேற்றைக்கு உளன் எனப்பட்டான் இன்றைக்கு இலன் எனப்படுதல் கண்டும், உன் உயிர்க்குப் பயன்படுவனவற்றைச் செய்யாது, வீண் நாட்கழிப்பது, ஐயையோ எவ்வளவு அறியாமை! நாவை அடக்கி விக்கல் எழும்போது, ஒன்றைச் செய்தலே அன்றிச் சொல்லலுங் கூடாமையாலும், அது இன்ன காலத்தில் வரும் என்று அறிதல் இயலாமையாலும் மோட்சத்திற்கு ஏதுவாகிய புண்ணியத்தை விரைந்து செய். நாம் சிற்றறிவு சிறுதொழில்

உடையோம். ஆதலால், முற்றறிவு முற்றுத்தொழில் உடைய கடவுளை வணங்கி அவருடைய திருவருள் வசமாய் நிற்பின் அன்றி, பாவபுண்ணியங்களை உள்ளபடி, அறிதலும், பாவங்களை ஒழித்துப் புண்ணியங்களைச் செய்தலும், நம்மால் இயலாவாம்."

# 6. ஈழத்தில் ஸ்ரீ இராமகிருஷ்ண இயக்கத்தின் சேவை

மனித நிலையில் மூன்று நிலைகள் உண்டு. நலமே நினைந்து நலமே பேசி, நலமே செய்து வாழ்கின்றது ஒரு நிலை. பரோபகாரியாக வாழ்வது அடுத்த நிலை. கடவுளை எப்பொழுதும் மறவாது வாழ்தல் மூன்றாவது நிலை. கடவுளை எப்பொழுதும் மறவாத தியான நிலையில் - ஞான நிலையில் வாழ்வதற்கு ஒரு இராமகிருஷ்ண பரமகம்ச தேவராலோ அன்றி ஒரு ரமண மகரிசியாலோ தான் முடிந்தது. ஸ்ரீ இராமகிருஷ்ண தேவரின் உத்தம சீடராம் சுவாமி விவேகானந்தராலேயே ஸ்ரீ இராமகிருஷ்ண தேவரைப் போன்று சும்மா இருக்க முடியவில்லை.

ஒரு சந்தர்ப்பத்தில் சுவாமி விவேகானந்தர் சமாதி நிலையைப் பெரிதும் விரும்பினார். இதனை உணர்ந்த குரு தேவர் நீ வந்த வேலை மலைபோல் குவிந்துள்ளது. அதனை முடிக்காமல் சமாதி நிலைக்குள் போக முயற்சிக்கின்றாயா? என்று செல்லமாகக் கண்டித்தார். நீ எப்போது அந்த நிலையை விரும்புகின்றாயோ அப்போது சமாதிநிலை கஷ்டமின்றித் தானாகவே உனக்குச் சித்திக்கும் என்ற ஆசியினையும் கூறினார் குருதேவர்.

அமெரிக்க திக்குவிஜயம் முடித்துச் சுவாமிகள் பாரதநாட்டை அடைந்ததும் தமது சகோதரத் துறவிகளை எல்லாம் ஒன்று சேர்த்து ஒரு ஆலோசனைக் கூட்டம் நடத்தினார். நமது வாழ்க்கை நமது சுயநலத்திற்காக மாத்திரம் அமைந்துவிடக் கூடாது. பரோபகாரிகளாக நாம் வாழ்ந்து காட்ட வேண்டும் என்ற முடிவுக்கு வந்தனர். அதற்குச் சேவை ஒன்றே வழி என்றும் தீர்க்கமான முடிவுக்கு வந்தனர்.

“சீவ சேவையே சிவசேவை; மானிட சேவையே மகேஸ்வரன் சேவை” என்ற குறிக்கோளில் எழுந்தவையே இராமகிருஷ்ண மடாலயங்கள். சரித்திர காலத்திற்கு முன்பிருந்தே பாரத நாட்டின் தாக்கம் ஈழத்திற்கும் கிடைத்து வந்திருக்கிறது.

புத்த தேவரின் உபதேசம் புத்த பெருமான் பிறந்த இந்தியாவைவிட ஈழத்திலே பெரும்பான்மை மக்களைக் கவர்ந்திருப்பது இதற்கொரு உதாரணமாகும். பாரதத்தில் ஏற்பட்ட இராமகிருஷ்ண இயக்கத்தின் தாக்கம் ஈழநாட்டின் அதன் தலைநகராம் கொழும்பிலும் ஒரு இராமகிருஷ்ண மடாலயத்தைத் தோற்றுவித்தது. சுவாமி விபுலானந்தா, சுவாமி நடராஜானந்தா, சுவாமி சர்வாதித்தானந்தா, சுவாமி பிரேமாத்மானந்தா, சுவாமி ஜீவானந்தா போன்ற துறவிகளைத் தோற்றுவித்ததன் மூலம் ஈழமும் தனது சேவையின் ஒரு பங்கினை உலகுக்கு அளித்துள்ளது என்றே நாம் கூறவேண்டும்.

ஈழத்தின் மேற்குத்திசையில் வெள்ளவத்தையில் ஸ்ரீ இராமகிருஷ்ண மடம் அமைந்தது போலவே ஈழத்தின் கிழக்குத் திசையில் மட்டக்களப்பைச் சேர்ந்த கல்லடியில் ஒரு இராமகிருஷ்ண இல்லந்தோன்றிச் சேவை புரிந்து வருவது மிகப் பொருத்தமானதொன்றாகும். தெற்குத்திசையில் கதிர்காமத்தில் ஸ்ரீ இராமகிருஷ்ண மடம் கடந்த பல ஆண்டுகளாக ஆற்றி வந்த சேவையைக் கதிர்காம யாத்திரீகர்கள் எவரும் இலகுவில் மறந்துவிட முடியாது. "அப்பன் இல்லாவிட்டால் தெரியும் அப்பன் அருமை; உப்பில்லாவிட்டால் தெரியும் உப்பின் அருமை" என்பது ஒரு பழமொழி. அதுபோன்று இன்று கதிர்காமத்திற்குச் செல்லும் யாத்திரிகர்கள் ஸ்ரீ இராமகிருஷ்ணமடம் ஆற்றிய சேவையின் மகத்துவத்தை உணர்ந்து கொண்டிருக்கின்றார்கள். கதிர்காமச் சூழலில் முருகனடியார்களாக வாழ்ந்து கொண்டிருந்தவர்கள் இன்று அசுரர் கூட்டமாக மாறிக் கொண்டிருப்பதை அறிந்துபோலும் முருகப்பெருமான் ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்தினரின் சேவை அங்கு தேவை இல்லை என்று திருவுளம் பற்றிவிட்டார்.

வடக்கில் இன்று ஸ்ரீ இராமகிருஷ்ண சேவாச்சிரமமும் சாரதா நிலையமும் ஸ்ரீ இராமகிருஷ்ண மடாலயங்களின் சேவையினை ஓரளவு உணர்ந்து செயலாற்ற முற்பட்டிருக்கின்றன. நாலு திசைகளிலும் ஸ்ரீ இராமகிருஷ்ண மடாலயங்களின் சேவையைப் பெற்றிருக்க மத்திய பிரதேசமாகிய மலைநாட்டில் வாழுகின்ற பதினைந்து லட்சம் தமிழ் மக்களின் தவக்குறைவு என்றே குறிப்பிட வேண்டும். கல்வியிலும், சமயத்திலும் மிகப் பின்தங்கியது மலையகமாகும். இங்குதான் ஸ்ரீ இராமகிருஷ்ண

மடாலயங்களின் சேவை மிகமிகத் தேவையானதாகும். இத்தகைய இடத்தில் மடாலயம் ஒன்று அமைவதற்குத் திருவருள் கூட்டி வைக்கவில்லை என்றே கூறவேண்டியிருக்கிறது. அன்று பணம் படைத்தவர்களும் கல்விமான்களும் தேயிலைத் தோட்டங்களில் வாழும் மக்களைப் பற்றிச் சிறிதும் சிந்தனை இன்றியே இருந்து விட்டார்கள் என்று சொல்ல வேண்டி உள்ளது. கதிர்காமத்தில் ஏற்பட்டிருந்த மடாலயம் மலையகத்தில் ஏற்பட்டிருக்குமானால் இன்று மலையகத்தில் புதியதோர் சமுதாயத்தைக் கண்டிருக்கலாம்.

இன்று ஈழத்திலே சமயப் பூசல்கள் தோன்றாவண்ணம் ஒரு சமய சமரச நிலையை ஏற்படுத்துவதற்கு நிலைக்களனாக அமைந்தது ஸ்ரீ இராமகிருஷ்ண மடம் என்றால் அது மிகைப்படுத்திக் கூறுவதன்று. இம்மடங்கள் ஈழத்திற்குச் செய்த சேவைகள் காலத்திற்கு ஏற்றவைகள்; காலத்தால் அழியாதவைகள்.

ஸ்ரீ இராமகிருஷ்ண தேவர் சாதனையில் மிக மிக உயர்ந்து நின்றவர். இந்து சமயத்தின் பேருண்மையினை சாதனையினால் உணர்ந்தது போலவே பௌத்தம், கிறிஸ்துவம், இஸ்லாமியம் ஆகிய சமயங்களின் பேருண்மைகளைச் சாதனையின் மூலமாக அனுபவித்து உணர்ந்தவர்கள். இவ்வுண்மையினை ஈழத்திலுள்ள மடாலயங்களும் கடைப்பிடிக்கத் தவறவில்லை.

சுவாமி விவேகானந்தர், கடந்த ஒரு சில நூற்றாண்டு காலத்தில், வெளிநாடுகளுக்குச் சென்று உலகுக்கு உலக சமயத்தின், சனாதன தர்மத்தின் செய்கையை மீண்டும் ஒரு முறை தெளிவாக விளக்கிக்கூறிய முதல் இந்து பிரசாரகராவார். அவர் மாபெரும் தேசபக்தர்; சீர்திருத்தவாதி; ஒன்று திரட்டும் அமைப்பாளர் என்பதுடன் தேசீய மறுமலர்ச்சிக்கான சக்திகளை முதன் முதலில் முடுக்கிவிட்டு, பிரிட்டிஷ் ஆட்சியின் முதல் தாக்குதலால் சிதறுண்டு நெறிகுலைந்திருந்த நாட்டைப் புனர்நிர்மாணப் பாதையில் அமைத்து வைத்தவரும் ஆவார். சமயம்தான் பாரதத்தின் ஆத்மா. அதை மையப்புள்ளியாக வைத்தால்தான் நமது தேசத்தைப் பயனுள்ள முறையில், சக்தி வாய்ந்த ரீதியில் புனர்நிர்மாணித்து அமைக்க முடியும் என்பதை நாட்டுக்கு உணர்த்தி மறுமலர்ச்சியுற்ற பாரதத்திற்கு அத்திவாரம் அமைத்தவர் அவரே.

சிக்காகோவிற்கு சுவாமிகள் சர்வமத மகாநாட்டிற்குச் சென்று திரும்பும்போது ஈழத்தை முதலில் வந்தடைந்தார். "தாழ்வுற்று, வறுமை விஞ்சி, விடுதலை தவறிக்கெட்டு, பாழ்பட்டு" நின்ற ஈழத்திற்கும் சுவாமிகளுடைய பேச்சு ஒரு வீர உணர்வைக் கொடுத்தது என்றே கூறலாம். ஈழத்தில் சுவாமிகளுக்குக் கிடைத்த வரவேற்பு அமெரிக்காவில் சுவாமிகளுக்குக் கிடைத்த புகழுக்குச் சற்றும் குறைந்ததல்ல.

சுவாமிகள் அளித்த உபதேசச் செய்தியானது சக்தியை ஆதாரமாகக் கொண்டது. உடல்வலிமை, உள்ளவலிமை, மனத்திண்மை ஆகியவற்றை அது வலியுறுத்துவதாகும். இவ்வாறு எல்லா அம்சங்களிலும் வலிமைபெற்று விளங்குவது இந்த வேளையில் மிக முக்கியமான தேவை. சுவாமி விவேகானந்தர் தம் நாட்டினருக்கு "இரும்பாலான தசையும், எ.்.கினாலான நரம்பும், அதனுள்ளே இடியை உருவாக்குகிற அதே பொருளால் உண்டாக்கப்பட்ட உள்ளமும், உறைந்திருக்க வேண்டும்" என்று விரும்பினார். தமது நாட்டினர் சக்தியும் ஆண்மையும், சத்திரிய வீரியமும், அத்துடன் பிரமதேஜஸும் வாய்க்கப் பெற்றிருக்க வேண்டும் என்றும் அவற்றை வளர்த்துக்கொள்ள வேண்டும் என்றும் விரும்பினார். அபாயமும் நெருக்கடியும் கலந்த இன்றைய நிலையில் குறிப்பாகத் தேவைப்படுகிற குணங்கள் இவைகளே.

சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலத்தில் வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்பட்ட சுகபோகமே பெரிதென்ற வாதங்களாலும், வாழ்வுபற்றிய உலகாயத நோக்காலும் கவரப்பட்டு, குறிப்பாக இக்குணங்களை நாம் உதாசீனம் செய்து விட்டோம்.

ஈழத்தின் ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்தின் பொன்விழாக் கொண்டாடும் இத்தருணத்திலே சுவாமிகளின் உபதேசங்களில் சிலவற்றையாவது நாம் நினைவுகூருதல் சாலப் பொருத்தமுடையதாகும். சுவாமிகளின் உபதேச மொழிகளை நாம் சுருங்கக்கூறின் அவர் நமக்கு ஒரு மகாமந்திரத்தை உபதேசம் செய்ததாகக் குறிப்பிடலாம். அதுதான் தெய்வ நம்பிக்கையும், தன்னம்பிக்கையும் தேவை என்பது. தன்னம்பிக்கையானது உபநிடதப் பேருண்மையை அடிப்படையாகக் கொண்டது. "நான்

ஆத்மா; என்னைவாள் வெட்டாது; ஆயுதங்கள் துளைக்காது; நெருப்பு எரிக்காது; நான் சர்வ சக்திமான்; எல்லாம் உணர்ந்தவன்" என உபநிடதங்கள் முழங்குகின்றன. இந்த மந்திரத்தைத்தான் சுவாமி விவேகானந்தர் சதாசர்வகாலமும் தமது நாட்டினருக்கு ஆணி அடித்தாற்போலப் புகட்டினார். அவர் பேசியவற்றில் எல்லாம், அவரது அருள்மொழியிலெல்லாம் இந்த மந்திரமே முழங்கிற்று. இதுவே அவரது உபதேச கீதத்தின் பல்லவியாக இருந்தது. இவ்வுண்மையின் உட்பொருளை நாம் புரிந்து கொண்டு அதற்குத்தகுந்த முறையில் வாழ்வதற்கான தக்கதருணம் இதுவே. அவ்வாறு நாம் செய்தால் உலகிலுள்ள எந்தச் சக்தியும் நமக்குத் தீங்கிழைக்க முடியாது.

அன்றியும் மோட்சத்தை அடைய விரும்பும்போது நமது தர்மத்தை நாம் நிறைவேற்ற வேண்டும் என்று அவர் மேலும் கூறுகின்றார். உண்மையில் பார்க்கப்போனால் தர்மமில்லாமல் மோட்சம் இல்லை. நமது சமயமானது வலிமை குலைந்து தாழ்வுறும் கட்டத்தில் இந்த உண்மையை மீண்டும் வலியுறுத்த வேண்டிய தேவை இருந்தது. தமோகுணத்தை நாம் கைவிட வேண்டும் என்று அவர் கூறுகின்றார். ஏனெனில் தமோகுணமானது பலவீனத்தையும், மூட நம்பிக்கையையும், அற்பத்தனத்தையும், சிறு விடயங்களுக்காகப் பரஸ்பரச் சண்டை பூசல்களையும் உண்டாக்குகிறது. நமது பழங்காலத்தையும் மிஞ்சக்கூடிய சிறப்புயர்வு வாய்ந்த வருங்காலத்தை நாம் நிர்மாணிக்க வேண்டும். சுவாமிகளின் இந்தச் செய்தி இன்றைய காலத்துக்குத் தேவையானதாகும். ஏனெனில் நம்மை இன்று சூழ்ந்துள்ள அபாயத்தைப் போல ஒரு அபாயநிலை நேரும்போது தான் ஒவ்வொரு நாடும் தமது பலாபலன்களை கணக்கெடுத்து ஆத்மசோதனை செய்து பார்த்துக் கொள்ளும்.

# 7. நடன கோபாலநாயகி சுவாமிகள்

பக்தர் ரங்காரியரும் அவரது பத்தினியார் லக்ஷ்மி அம்மாளும் சௌராஷ்டிர பிராம்மண சமூகத்தைச் சேர்ந்தவர்கள். மதுரையைப் பிறப்பிடமாகக் கொண்டவர்கள். இவர்களுக்கு நான்காவதாகப் பிறந்த குழந்தைக்கு 'ராமபத்ரன்' என்று நாமகரணம் செய்தனர்.

குழந்தை பிறந்த உடனே மற்றைய குழந்தைகளைப் போல அழவில்லை. இளமையில் மற்றைய குழந்தைகளோடு சேராது தனிமையை நாடினான். மோனமாய் அமர்ந்து தியானிக்கும் பக்குவத்தையும் அடைந்தான். ஓதாதுணர்ந்த உத்தமராய், கல்லாத கல்வி வளர் கடலாய் இருந்த அவருக்கு பள்ளிக்கல்வி மூளையில் ஏறவில்லை. அதனால் பிழைக்கத் தெரியாத பிள்ளை என்ற பெயரும் பெற்றார். "கிடைக்குமா மனித ஜன்மம், இது அபூர்வமடா" என்று தன்மனதிற்கு புத்தி புகட்டி பிறவியைப் பயனுடையதாக்க விரும்பினார்.

எட்டு வயதுப் பாலகனுக்கு ஏட்டுக்கல்வியில் நாட்டமில்லை. கடையில் கணக்கு வேலைசெய்ய, முதலாளிக்கு எடுபிடிப் பையனாக இருக்க ஒரு வேலை தேடித்தந்தனர். பையன் கணக்குப் புத்தகத்தில் கூட்டல், கழித்தல், பெருக்கல், வகுத்தல் செய்யும்போது, தம்புண்ணியப் பயனைக்கூட்டி, பாபவினைகளைக் கழித்து, ஆனந்த அனுபவத்தைப் பெருக்க ஒரு அனுகூல வழியை வகுத்துக் கொண்டார். கணக்குப் புத்தகத்தைக் கையில் எடுத்தால் மனம் எங்கோ ஆழ்ந்து சென்றுவிடுகிறது. இதனைக் கண்ட முதலாளி, இவன் கடைக்கு உதவான் என்று வீட்டுக்கு அனுப்பிவிட்டார்.

இவர்களுடைய குலத்தொழில் நெசவுத்தொழிலாகும். தந்தையார் மகனுக்குத் தறியொன்று தனியாகப் போட்டுக்கொடுத்து வேலையில் உற்சாகம் ஊட்டினார். சிலநாட்கள் சீராகவேலை நடைபெற்றது. ஒருநாள், பையனுடைய கையில் நெசவுப்பலகை இருக்கிறது. ஆனால் பார்வையோ எங்கோ பதிந்திருக்கிறது. இக்காட்சியைத் தாயார் பார்த்தாள். அவளுக்கோ ஒன்றும் புரியவில்லை. கைத்தறியில் கால்கட்டைக்கும் தறிக்கும் உள்ள

சம்பந்தக் கயிற்றை சூத்திரம் என்று கூறுவர். இந்தச் சூத்திரக் கயிறு இற்றுப் போகுமானால் நெசவு இல்லை. இந்த உடலுக்குள் புகுந்து இயங்கும் பிராணன் என்னும் சூத்திரம் இற்றுப் போனால் வாழ்க்கை என்ற நெசவு ஏது? "சூத்திரப்பாவை கயிறற்று விழுமுன் சூக்குமக்கயிற்றைப் பாரடா" என்றார் மஸ்தான் சாயிபு என்ற ஞானி.

செய்து கொண்டிருக்கும் நெசவுப் பலகையிலிருந்து கைநழுவ, கண்கள் மூட, மனம் ஒன்றுபட அகமுகமான உணர்வுகளுடன் தன்னை மறந்து, உலகை மறந்து அமர்ந்திருக்கும் மகனைக் கண்டாள் தாய் லக்ஷ்மி அம்மாள். மகனை உலுக்கி எழுப்பினாள். "என்னடா ராமபத்திரா! உட்கார்ந்து கொண்டே உறங்குகிறாய்." "இல்லை அம்மா. இப்போதுதான் நன்றாக விழித்துக் கொண்டேன்" என்றான். தந்தை, மகன் இப்படிப் பொறுப்பின்றி இருப்பதைக் கண்டு மனம் நொந்து கடிந்து பேசினார். இதே காரணமாக அமைய ராமபத்திரனின் உள்ளத்தில் வைராக்கியம் பிறந்தது.

ஒரு நாள் இரவு பையன், வைராக்கியமும் விவேகமும் துணைநிற்க, நான் எனது என்ற பந்தங்களை அறுத்துக் கொண்டு வீட்டை விட்டுப் புறப்பட்டு விட்டான். இது நிகழ்ந்தது அவரது பத்தாவது வயதிலாகும். பாலப்பருவத்திலேயே துருவன் தவம் செய்யச் சென்றது சுவாமிகள் மனதில் நல்ல பருவத்தில் உரம் நிரம்பிய மண்ணில் விதைத்த விதைபோல நன்கு பதிந்து விட்டது. புறப்பட்ட பையன் கடைவீதியைக் கூடத் தாண்டவில்லை. ஒரு கடையின் வெளித்திண்ணையில் ஏறிப்படுத்து நித்திரையாகிவிட்டான். சிறிதுநேரம் சென்றது. ஒரு வயது முதிர்ந்த துறவி தன்னைத்தட்டி எழுப்புவது கண்டு எழுந்து பார்த்தான். "பலபல" என்று விடியும் நேரம், அருகே எவரும் இல்லை. உறக்கத்தில் ஏதோ கனவு கண்டேன் போலும் என்று எண்ணினான். ஆனால், என்ன இது! அந்தப் பண்டாரத்தின் கையில் இருந்த புத்தகம் இங்கு இருக்கிறதே! பார்க்கிறான். வேதாந்த தத்துவ விளக்கமான ஞானநூல் ஒன்று தன் தலைப்புறத்தில் வைக்கப்பட்டிருப்பதைக் கண்டான். தன் கனவில் வந்தது இறைவனே என்பதை உணர்ந்து கொண்டு, அப்புத்தகத்தை எடுத்துக்கொண்டு திருப்பரங்குன்றத்தை நோக்கிப் புறப்பட்டான்.

திருப்பரங்குன்றத்தை நோக்கிச் சென்ற பையன் கிரிவலம் போகும்போது கோயிலின் பின்னாலிருந்த குகையொன்றைக் கண்டு அதையே தான் தவஞ்செய்வதற்கேற்ற இடமாகக் கொண்டான். முதலில் பால் மாத்திரம் உட்கொண்டவர் படிப்படியாக அதனையும் குறைத்துக் கொண்டு எப்பொழுதேனும் பசித்த போது பாலும் பழமும் சாப்பிட்டார். ராமபத்திரனுக்கு வயது பதினெட்டு. திருப்பரங்குன்றம் சென்ற ஒரு அம்மையார் அங்கு தான் கண்ட ஒரு பாலயோகியைப்பற்றி லக்ஷ்மி அம்மையாருக்குக் கூறினார். ஒருவேளை ராமபத்திரனாக இருக்குமோ என்று ஓடோடிச் சென்று குகாசிரமத்தில் தவம் புரியும் தபஸ்வியைக் கண்டார். அவர் சந்தேகம் உண்மையாயிற்று.

“ஐயோ மகனே! எங்களை விட்டுப் பிரியத்தான் உனக்கு எப்படி மனம் வந்ததோ? இந்தக் கோலத்துடனா நான் உன்னைப் பார்க்க வேண்டும்! என்னோடு வா. உனக்கொரு அழகான பெண்ணைக் கலியாணம் பண்ணி வைக்கிறேன்” என்று அழைத்தார். ராமபத்திரன் சிரித்தார். “அம்மா எனது வாழ்க்கைக்கு நீ உதவி செய்ய விரும்பினால் உனது கையினால் ஒரு திருவோடு தந்து அத்திருவோட்டில் நீயே முதலில் பிச்சையும் இடவேண்டும்” என்று உருக்கமாகக் கேட்டார். மகனுடைய வைராக்கியத்தை உணர்ந்து கொண்ட தாயார் வேறு பேச்சு எதுவுமின்றி திருவோடு ஒன்று கொடுத்துப் பிச்சையும் இட்டுவிட்டுத் தனியாகவே சென்று விட்டார்.

ராமபத்திரன் திருப்பரங்குன்றத்திற்கு வந்து ஆண்டுகள் பன்னிரண்டு கழிந்து விட்டன. ஒருநாள் ஆறுமுகப் பெருமான் ராமபத்திரர் கனவில் தோன்றி அவருக்கு இன்னும் முன்னேற வழிகாட்டினார். “இராமநாதபுரத்திற்கு அருகிலுள்ள பரமக்குடி என்ற சிற்றூரில் வாழும் நாகலிங்க அடிகளிடம் சென்று யோகப் பயிற்சியும் உபதேசமும் பெறுவாயாக” என்று ஆறுமுகப்பெருமானே கருணை கொண்டு வழிகாட்டினார். பரமக்குடி சென்ற ராமபத்திரர் பல இடங்களிலும் குருவைத்தேடி அலைந்து திரிந்து கடைசியாக பருத்தியூரம்மன் கோயில் வாயிலில் வந்து அமர்ந்தார். அப்போது அங்கு ஒரு பெரியவர் புன்முறுவல் பூத்தவராய் இவர் அருகே வந்தார். “நீர் தான் ராமபத்திரரா!” என்றார். அவருடைய கேள்வி மின் அலைகள் பாய்வது போன்ற ஒரு உணர்வை உடலில்

ஏற்படுத்தியதை உணர்ந்தார். முருகப்பெருமான் கனவில் கூறிய செய்தியை இருவரும் பரிமாறிக் கொண்டனர்.

குருநாதர் சீடருக்கு யோகசாதனத்தை உபதேசிக்கலானார். ‘சதானந்தசித்தர்’ என்ற தீட்சா நாமத்தையும் பெற்றார்.

**“ நாகலிங்கக் குருவாலே நாதமணிக் காலாட்டி**
**ஏகலிங்க வட்டத்திலே—அருள்கண்ணா—இருபாதம் கூடினேனே**
**காமம் விழுகாமல் கலைமணிக் காலாட்டி**
**நாகலிங்கக் குருவாலே—அருள்கண்ணா—**
**நானெடுத்துரைத்தேன்கேள்.**

சுவாமிகள் பாடிய இப்பாடல் மூலம் அவர் தான் குருவிடம் பெற்ற அனுபவத்தை நாம் ஓரளவு உணர்ந்து கொள்ளலாம். நாகலிங்கர் பன்னெடுங்காலம் பாடுபட்டுப் பெற்ற யோகசித்தியைச் சீடராகிய சதானந்தசித்தர் சில தினங்களில் பெற்றுவிட்டார். ‘சித்த’ என்ற சொல்லுக்கு வங்காளி மொழியில் ‘வெந்தது’ அதாவது பக்குவமானது என்பது பொருளாகும். சதானந்தசித்தர் தியானத்தில் அமர்ந்தபோது அவர் உடல், அவர் அமர்ந்திருந்த இடத்தை விட்டு மேலே எழும்பியது. இருபத்தொரு அடிகள் மேலெழும்பி எவ்வித ஆதாரமுமின்றி அங்கேயே நின்றது. இந்த அதிசயத்தைக் கண்ட குருநாதர் அதிசயித்தார்.

பரமக்குடியில் சிலகாலம் தங்கியபின் சதானந்த சித்தர் புறப்பட்டு இராமநாதபுரம் சென்றார். இராமநாதபுரம் அரசர் சுவாமிகளுடைய யோக வலிமையைக் கேள்வியுற்று நல்லதொரு வரவேற்புச் செய்தார். அங்கிருந்து சிவகங்கை சென்றார். சிவகங்கை மன்னர் சுவாமிகளைப் பல வழியிலும் சோதித்துத் தெளிய விரும்பினார். சுவாமிகள் அரண்மனையில் அழகானதோர் அறையில் தனிமையில் இருந்தபோது அரசர் அழகிய நடனப்பெண் ஒருத்தியை சுவாமிகளிடம் அனுப்பி வைத்தார். சுவாமியை மயக்கச் சென்ற அப்பெண் சுவாமிகளிடம் தான் மயங்கி சுவாமிகளுக்கு அடிமையானாள். சுவாமிகள் இருந்த அறைக்கதவுகள் யாவும் பூட்டப்பட்டு சுற்றிவர பலத்த காவலும் இடப்பட்டன. அறையினுள்ளே இருந்த சுவாமிகள் அடுத்த நாட்காலையில் சோலை ஒன்றில் உலாவிக் கொண்டிருப்பதை

அரசன் பார்த்து ஆச்சரியப்பட்டார்.

சுவாமிகள் மதுரையில் சிலகாலம் வாழ்ந்த பின்பு தெற்கே உள்ள தலங்களைத் தரிசிக்கச் சென்றார். வழியில் சுவாமிகளுடன் சென்ற அடியார் கூட்டத்தைக் கயவர் கூட்டம் ஒன்று கொள்ளை அடித்தது. அதனைக் கண்ணுற்ற சுவாமிகள் ஒரு பிடி மண்ணை எடுத்துப் பஞ்சாட்சரம் ஓதித் தூவினார்கள். உடனே கயவர்கள் பார்வையிழந்தனர். கயவர்கள் தமது பிழையை உணர்ந்து சுவாமிகளிடம் மன்னிக்குமாறு வேண்டினர். சுவாமிகளும் மனம் இரங்கி பஞ்சாட்சரம் ஓதினார். கயவர்கள் அன்று தொடக்கம் தாம் யாருக்கும் மனதாலும் தீமை நினைப்பதில்லை எனச் சபதம் எடுத்துக் கொண்டனர்.

நம்மாழ்வார் பிறந்த ஆழ்வார் திருநகருக்கு எழுந்தருளினார் சதானந்தர். அங்கு வடபத்ராரியரைச் சந்தித்தார். இவரது சந்திப்பு ராஜயோகியாக இருந்த சதானந்தரை பக்தயோகியாக மாற்றம் பெறச் செய்தது. வடபத்ராரியருடைய சந்திப்பின்பின் சதானந்த சித்தர் “நடன கோபால சுவாமிகள்” என்ற திருநாமத்தைப் பெற்றார்கள். கண்ணனின் தாசனாக மாறிய சுவாமிகள் ஆண்டாள் பிறந்த ஸ்ரீ வில்லிபுத்தூர் வந்தார். அத்திருத்தலம் வந்து, கண்ணனிடம் தீராக்காதல் கொண்டு, அவனது கரம் பற்றிய கோதைநாச்சியார் சன்னிதானத்தில் சேவித்து நின்றார். ஆண்டாளின் பக்தி உணர்ச்சி காதல் வேகம் சுவாமிகள் உள்ளத்திலும் உணர்ச்சிப் பெருக்கைத் தூண்டியது.

சுவாமிகள் கண்ணனுடைய காதலியாகப் பாவனை செய்து கொண்டார். காதல் நெஞ்சின் வேகத்தில் பல நூறுபாடல்கள் சுவாமிகளது திருவாயிலிருந்து வெளிவந்தன.

**“ பிழைக்க வழி வேறில்லை பிராணேசனை அல்லால்**
**அழைக்க அவன் வருவானேடி அட்டி ஒன்றும் சொல்லான்**
**சொல்லடியே சொன்னதெல்லாம் சுத்தமுடன் சொல்லாய்**
**கல்லடியே உந்தன் மனம் கண்ணன் முன்போய் நில்லாய்**

என்று தோழியைத் தூது விடுத்து தோடி ராகத்தில் பாடுகிறார். கண்ணனின் அடையாளத்தை தோழிக்குக் கூறுகிறார்.

**உச்சியிற் கோணக் கொண்டை ஒய்யாரமதாயிருக்கும்**
**இச்சித்தவர்க் கெல்லாம் எஜமானா யின்பம் பெருக்கும்**
**கைதனில் கன்று மேய்த்திடும் கோலிருக்கும் பாராய்**
**பைதனில் துயிலும் பரமன் பாதகமலம் சேராய்.**

அழகர் மலையிலிருந்து பெருமாள் ஆண்டுதோறும் மதுரைக்கெழுந்தருளும் பாதையிலிருக்கிறது காதக்கிணறு என்னும் கிராமம். அங்கு சுவாமிகள் ஓர் இடத்தைத் தேர்ந்தெடுத்தார். அங்கிருந்து நோக்கினால் தொலைவிலிருக்கும் யானைமலை புலப்படும். யானை மலையில் யோக நரசிம்மர் திருக்கோயில் உண்டு. அந்த யோகநரசிம்மரின் சன்னதிக்கு நேராக அழகர் வரும் பாதையில் தான் என்றும் அமர இடம் தெரிந்தெடுத்தார். சுவாமிகளது திருவுளப்படியே அவ்விடம் சுத்தம் செய்யப்பட்டது. முன்னர் குறித்தபடியே சுவாமிகள் வைகுண்ட ஏகாதசிக்கு இருதினங்கள் முன்பே அஷ்டமி அன்று இரவு தன் உடல்நிலை சரியில்லை எனக்கூறி, சுவரோடும் நிமிர்ந்து அமர்ந்து சுவாசபந்தனம் செய்து கண்களை மூடித் தியானத்தில் ஆழ்ந்தார். நவமியும் தசமியும் கழிந்தன. சுவாமிகள் அன்ன ஆகாரமின்றி, அசைவின்றித் தியானத்தில் ஆழ்ந்திருந்தார். பக்தர்களும் சீடர்களும் குழுமியிருந்தனர். பக்தியுடனும் வருத்தத்துடனும் பகவத்நாமத்தைப் பாடிக்கொண்டிருந்தனர். 08-01-1914 பிரமாதீச வருடம் மார்கழி மாதம் 25ம் நாள் வைகுண்ட ஏகாதசியன்று சுவாமிகள் பரிபூரணம் எய்தினார்கள்.

அன்று இரவு முழுவதும் ஹரிநாம சங்கீர்த்தனம் நடைபெற்றது. மறுநாள் துவாதசியன்று சுவாமிகள் குறிப்பிட்ட காதக்கிணறு தலத்திற்கு சுவாமிகளது திருமேனியை புஷ்பப் பல்லக்கில் வைத்து எடுத்து வந்தனர். அனைவரின் நாவுகளும் நாராயண நாமகீர்த்தனம் புரிந்தன. சுவாமிகள் பிறந்ததும் மார்கழிமாதம், குருவாரம். இம்மண்ணைத் துறந்ததும் அதே திங்கள், அதேதினம். அவரது சமாதியில் திருமேனி வைக்கப்பட்ட திருநக்ஷத்திரமும் அவரது ஜனன நக்ஷத்திரமான மிருகசீரிடமேதான்.

# 8. சச்சிதானந்த சற்குரு சுவாமிகள்

சுவாமிகளுடைய திரு அவதாரம் நிகழ்ந்த இடம் திண்டி மாநகரமாகும். சுவாமிகளுடைய பூர்வாச்சிரமத்தை யாரும் அறியார். மக்கள் அன்பினோடு தான்தோன்றித் தம்பிரான் என அழைத்தனர். சுவாமிகள் தேசசஞ்சாரம் செய்ய விரும்பினார்கள். முதலில் கேரளம், கன்னியாகுமரி, தெற்குமலையாளம் முதலிய இடங்களுக்குச் சென்றார்கள். அங்குள்ள பக்த கோடிகளுக்கு அறம், பொருள், இன்பம், வீடு என்னும் நால்வகைப் புருஷார்த்தங்களையும் விளக்கி அருளினார்கள்.

சச்சிதானந்தமே உண்மைப்பொருள்; ஒன்றே கடவுள்; அதுவே வீர சைவம்; சீவனைச் சிவமாக்குவதே சீவகாருண்யம் என்று உபதேசித்தார். ஆலய வழிபாட்டின் ஆபாசங்களைக் கண்டித்தார். பின் மேற்குத்திசை நோக்கிப் புறப்பட்டார். அங்கு சஞ்சாரம் செய்தபோது அங்குள்ள அன்பர்களுக்கெல்லாம் ஞான உபதேசங்களை விளக்கினார். பின் வடதிசையில் புறப்பட்டு வடக்கு மலையாள மார்க்கமாகச் சென்று அங்குள்ள அன்பர்களுக்கு வேத வாக்கிற்கும் அனுபவத்திற்கும் உள்ள பேதா பேதங்களைப் பிரித்துக் காட்டினார். அங்கிருந்து கோகர்ணம் சென்று ஒன்றே கடவுள் உணர்வே பிரம்மம் என்று தெளிவுறுத்தினார்.

பின்பு கொண்டாரண்யம் என்ற வனத்திற்குச் சென்றார். அது துட்ட மிருகங்கள் நிறைந்த, மரங்கள் அடர்ந்த கானகம். சுவாமி செல்லும்போது கொடிய விலங்குகளும் சுவாமி மீது உரஞ்சிக் கொண்டு செல்லும். மனித சஞ்சாரமே கிடையாது. மலைப்பாம்புகள் பின்னிக்கிடக்கும். சுவாமிகள் வடதிசையாகப் பிரயாணஞ் செய்து நாசிக் பஞ்சவடி என்னும் க்ஷேத்திரம் வந்து சேர்ந்தார். அங்கு இலட்சுமணன் தவஞ்செய்த பஞ்சவடிக்குக் கீழ்ப்பாகத்தில் சுமார் ஒன்றரை மைல் தூரத்தில் பெரிய மலைக்குகை ஒன்றிருந்தது. மனித சஞ்சாரமற்ற அக்குகையில் சுவாமிகள் சிலகாலம் தவம் செய்தார்கள். சுமார் ஒரு மைல் தூரத்திற்கப்பால் காடவர் என்ற சாதியினர் இருந்தனர். சுவாமியைக் கண்ட நாள்முதல் அவர்கள் பயபக்தியோடு சுவாமிக்கு வேண்டிய உணவோடு வந்து ஒரு பர்லாங்கு தூரத்தில் காத்து இருப்பர்.

சுவாமிகள் வந்து ஆகாரம் எடுத்துக் கொண்ட பிறகுதான் தங்கள் இருப்பிடங்களுக்குத் திரும்பிச் செல்வார்கள். காடவர் என்பவர் காட்டில் வசிக்கும் மராட்டிய சாதியைச் சேர்ந்தவர்கள்.

சுவாமிகள் அங்கிருந்து பம்பாய் சென்று அங்குள்ள அசோகா புல் தோட்டத்தில் தங்கி இருந்தார்கள். அங்கு ஒரு சாது சங்கத்தைக்கூட்டி ஆத்மீக விடயங்களைப்பற்றிப் பேசிக் கொண்டிருந்தார்கள். தன்னை அறிவதுதான் தவம்; காண்பானைக் காண்பவனே கற்றவன்; யோகம் அறுபத்துநான்கில் ஞானயோகமே சிரேஷ்டமானது. அந்த ஞானயோகம் சற்குருவின் கிருபாகடாட்சத்தினாலேயே கிடைக்கும் என்பதே சுவாமிகளுடைய உபதேசமாகும். பின்பு காசி மார்க்கமாகச் சுவாமிகள் சென்றார்கள். செல்லும் வழியில் சருகுகள் மாத்திரமே உணவாகக் கிடைத்தன. சேற்று நீரே தாகத்திற்கு உதவின. சுவாமிகள் ஐதராபாத் சென்றடைந்தபொழுது ஒரு சாது சுவாமிக்குத் தொண்டனாக வந்து சேர்ந்தார். அச்சமயம் சுவாமிகள் தீவிர வைராக்கிய மௌனமாய் இருந்தபடியினால் அந்தச் சாது சுவாமிகளின் குறிப்பறிந்து தொண்டாற்றி வந்தார். அதனால் அச்சாது குறிப்பறியும் தொண்டனார் என்ற நாமத்தையும் பெற்றார்.

சுவாமியுடன் சாதுவும் காசிக்குச் சென்றார். காசியில் அரிச்சந்திரன் கட்டம் என்ற இடத்தில் தங்கியிருந்த சுவாமிகள் தீவிர சாதனைகளை மேற்கொண்டார்கள். பின்பு சிலகாலம் காசி விசுவநாதர் கோயிலில் தங்கி இருந்தார்கள். அங்கிருந்து வடக்கே அயோத்திக்குச் சென்றார்கள். சுவாமிக்குப் பசித்த காலங்களில் அவ்வூர்ச்சனங்கள் ஆகாரங் கொண்டுவந்து கொடுத்தார்கள். சாப்பாட்டிற்காக சுவாமியை ஒருமனிதன் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றான். அந்த வீடு நான்கு கால்கள் நாட்டிய ஒரு சிறு குடிசை. அந்த வீட்டிற்குள் நுழைய வேண்டுமானால் உட்கார்ந்துதான் செல்ல வேண்டும். வீட்டுக்காரன் குடிசையில் சுவாமிகளையும் சாதுவையும் புல்லாசனத்தில் இருத்திவிட்டு வெளியே சென்று விட்டான். அப்போது காலை 10 மணி இருக்கும். வெளியே சென்ற மனிதன் அவ்வூர்க் கோயில் குருக்கள் ஆவார். அவர் மாலை 6 மணிக்குத் தனது சீடனுடன் சில சோளப்பொரி உருண்டைகளையும் கொண்டுவந்து சேர்ந்தார். சுவாமிகளும் சாதுவும் அதனைக் கண்ணபிரானுக்குக்

குசேலர் கொடுத்த அவல் மாதிரி இருக்கிறது என்று புகழ்ந்து கொண்டே சாப்பிட்டார்கள்.

சுவாமிகளும் சாதுவும் நடந்து கொண்டிருந்தார்கள். சுவாமிகளுடைய வெறுங்காலை கல்லும் முள்ளும் பதம் பார்த்தன. காலில் இரத்தம் கசிந்தது. சுவாமிகளுடைய காலைப்பார்த்த சனங்கள் ஒரு சோடி செருப்புக்கொண்டு வந்து கொடுத்தார்கள். சுவாமிகள் விளையாட்டாக அதனைப் போட்டுப் பார்த்துவிட்டு, “சீச்சீ சரீர அபிமானம் உள்ளவர்கள் அல்லவா இதனைப் போட வேண்டும்” என்று கூறிக்கொண்டே அதனைக் கழற்றி எறிந்து விட்டார்கள். பின்னர் பிரயாகை, ஹரித்துவாரம், குருஷேத்திரம், ரிஷிகேசம் போன்ற இடங்களிலும் சுவாமிகளுடைய இதோபதேசம் நடைபெற்றது. நாம் கடவுளை உண்மையாக தியானம் செய்தால், நாங்கள் எங்கிருந்தாலும் ஆங்காங்கே பெரியோர்களுடைய தரிசனம் கிடைக்கும் என்று சுவாமிகள் அருளிச் செய்தார்கள். சுவாமிகள் தெலுங்கு இராச்சியத்தினூடாகத் தென்னாட்டுக்கு வந்தார்கள். சோழ நாட்டின் புண்ணிய க்ஷேத்திரமாகிய வைத்தீஸ்வரன் கோயிலுக்கு வந்து சேர்ந்தார்கள். அங்கு இரண்டு வருடகாலம் அவதூதராக உலாவினார். அதன்பின் சீர்காழி வந்து, அங்கிருந்து சிதம்பரம் வந்துசேர்ந்தார்கள். சிதம்பரத்தில் பலர் வந்து தரிசித்தார்கள். அவர்களுக்குச் சுவாமிகள் ஞானத்திற்சரியை, ஞானத்திற்கிரியை, ஞானத்தில்யோகம், ஞானத்தில் ஞானம் என்பவற்றை உபதேசித்தார்கள்.

சுவாமிகள் பின்வரும் உபதேசத்தைப் பல இடங்களில் மக்களுக்குச் செய்தார்கள்:
சச்சிதானந்தம் ஒன்றே கடவுள்; சீவனைச் சிவம் ஆக்குவதே சீவகாருண்யம்; கடவுளுக்கு மனைவி மக்கள் கிடையாது; மனைவிமக்கள் எல்லாம் மனதினுடைய கொடுமை; இந்தப் பிரபஞ்சம் எல்லாம் தர்மம் குறைந்து, அதர்மம் மேலிட்டு, அக்கிரமவேலி கட்டி, அட்டூழிய பாத்திகட்டி, அகங்காரவிதையூன்றி, சீவர்களைப் பாமரர்களாக்கி தமோகுணமென்ற கிளைகளோடு தத்துவங்களே பூவாகி, அதன் சேடிப்புகளே காயாகிக் கனியாகிப் பழுத்து நாஸ்திகம் மேலிட்டு ஆஸ்திக தர்மம் குன்றி, மெய்யடியார்களுக்கு இடையூறு அதிகரித்து தெய்வீகம் நசித்து விட்டதாகப் பிரச்சாரம் செய்தார்கள்.

சுவாமிகள் இலங்கைக்கும் வந்து தர்மப்பிரச்சாரம் செய்துள்ளார்கள். இலங்கையிலிருந்து கப்பலேறி நாகபட்டினம் சென்று பல தலங்களையும் பல கிராமங்களையும் தரிசித்துக்கொண்டே வடலூர் மார்க்கமாக மோகனூர், காட்டுப்புத்தூர், வேலூர், கரூர் முதலாம் இடங்களுக்கும் சென்றார்கள். பின் திருச்சிவந்து சுவாமிகள் திருவானைக்காவலில் சில மாதங்கள் தங்கியிருந்தார்கள். வடநாட்டிலுள்ள ஒரு அன்பர் "தனது குருநாதர் திருவானைக்காவில் உள்ளார்" என்பதைக் கனவில்கண்டு திருவானைக்கா வந்து சுவாமிகளிடம் உபதேசம் பெற்றுத் திரும்பினார்.

சதிபதிகள் இருவர் சுவாமிகளிடம் அன்புள்ளவர்கள். ஒருநாள் காவேரியில் இருவரும் ஸ்நானம் செய்யும்போது திடீரென வந்த காற்றுவெள்ளம் அவர்களை அடித்துச் சென்றது. அவர்கள் குருநாதா! குருநாதா! என்று குரல் எழுப்பினார்கள். உடனே அவர்களுக்குச் சுவாமிகளுடைய தரிசனம் கிடைத்ததோடு வெள்ளத்தினின்று காப்பாற்றவும் பட்டார்கள்.

கணக்கன்பதி, பெட்டகம்பதி என்ற ஊர்களில் உள்ள அன்பர்கள் குருநாதர் ஞாபகார்த்தமாகக் குருபூசை நடத்தினார்கள். அடுத்த மாதத்தில் சச்சிதானந்த சபை நிறுவி, சற்குருநாதர் பிரதி பிம்பஸ்தாபனம் செய்து, அன்று முதல் ஒவ்வொரு மாதமும் மூன்றாவது குருவார தினத்தில் குருபூசை செய்து வந்தார்கள். அன்பர்கள் பெருந்தொகையாகக்கூடி இப்படிக் குருபூசை செய்வது சில நாத்திகர்களுக்குப் பொறாமையை உண்டாக்கியது. இக்கற்சிலை பேசுமா? ஏன் வீணாகப் பொழுதைப் போக்குகிறீர்கள் என்று கிண்டலாகப் பேசியதோடு சவாலும் விட்டார்கள். குருபூசை தொடங்கி பத்தாவது மாதக் குருபூசை நடைபெறும்போது ஒரு அதிசயம் நிகழ்ந்தது. ஊர்வலம் புறப்படும் சமயம் எல்லாருக்கும் கேட்கும்படியும் நாத்திகர்களின் நெஞ்சம் கலங்கும்படியும் திருவுருவத்தில் நின்று ஓங்கார சப்தம் ஐந்து நிமிடம்வரை சப்தித்தது. சனங்கள் யாவரும் ஆச்சரியப்பட்டு இதுவரை பார்த்திராத நிகழ்ச்சியாக ஆரவாரம் செய்தார்கள்.

நாத்திகர் மட்டும் சந்தேகத்துடன் திருவுருவம் பேச முடியுமா? இது யாரோ வேண்டுமென்று சூழ்ச்சி செய்திருக்கிறார்கள் என்று பேசிக்கொண்டு இருந்தார்கள். அதேசமயம் மீண்டும் திரு உருவத்தினின்று "ஆணவத்தை விடுங்கள், "நெஞ்சம் பிளக்கப்படும்,

“ஜாக்கிரதை” என்ற வார்த்தைகள் ஒலிக்கப்பட்டதோடு நாத்திகர் நின்றபக்கம் வெடிகுண்டு போன்ற சத்தமும் கேட்டது. அவர்கள் பயந்து நாவிலும் பசையற்று, நெஞ்சு உலர்ந்து, குருநாதரை தோத்திரம் செய்தார்கள். அன்று முதல் சனங்களுக்குப் பயபக்தி ஏற்பட்டு குருபூசைக்கு ஏராளமான சனங்கள் வரத்தொடங்கினார்கள்.

அரியலூர் புகையிரத விபத்தின்போது திருவையாற்று அன்பர்கள் இருவர் அப்புகையிரதத்தில் பிரயாணம் செய்து கொண்டிருந்தவர்கள் குருநாதா குருநாதா என்று குரல் கொடுத்தார்கள். அவ்விபத்தில் இந்த இருவரும் மாத்திரமே யாதோர் காயமும் இன்றித் தப்பித்தவர்கள். குட்டரோகி ஒருவர் சுவாமிகளிடம் தினமும் வந்து சுவாமிகளை வணங்கி அமைதியாக இருந்துவிட்டுச் செல்வார். ஒருநாள் சுவாமிகள் அவர் உடல் முழுவதையும் தம்திருக்கண்களாலும் பார்த்துக் கிருபை செய்தார்கள். தேகத்திலுள்ள குட்டம் முழுவதும் நீங்கிவிட்டது. நெடுநாளாகப் பைத்தியம் பிடித்துத் திரிந்த கிறித்தவப் பெண் ஒருத்தி ஒருநாள் திடீரெனச் சுவாமிகளுடைய நயன தீட்சைக்கு ஆளானாள். உடனே பைத்தியம் நீங்கிச் சுய உணர்வு பெற்றாள். அன்று தொடக்கம் தினமும் தவறாது வந்து சுவாமிகளுடைய தரிசனம் பெற்றுத் திரும்புவாள்.

சுவாமிகள் சென்னை மவுண்ட்றோடு அரசாங்க வீட்டில், அன்பர் R.S. தனகோபால் அவர்களுடைய இல்லத்தில் சிறிதுநாள் தங்கி இருந்த காலத்தில், அதாவது 1946வது வருடம் நவம்பர் மாதம் 19ம் திகதி பிற்பகல் ஐந்தரை மணிக்கு விதேகமுத்தி அடைந்தார்கள். அதன்பின் சுவாமிகளின் திருமேனியை தாம்பரம் ராஜ கீழ்ப்பாக்கம் அருகாமையிலுள்ள புண்ணிய க்ஷேத்திரத்தில் 21-11-46 வியாழக்கிழமை இரவு 10 மணிக்கு அடியார்கள் அன்பர்கள் புடைசூழச் சமாதி வைத்தார்கள். அதற்கடுத்து இரண்டாம் நாள் 23-11-46 சனிக்கிழமை இரவு ஈசானிய மூலையில் இருந்து ஒரு அகண்டாகார ஒளி வந்து சுவாமியின் சமாதியின் பேரில் பிரகாசித்து அப்படியே சமாதியினுள் ஐக்கியமாகிவிட்டது. அச்சமயம் அங்கிருந்த அடியார்களும் பக்தர்களும் கண்ணாரக்கண்டு பரவசம் அடைந்தார்கள். அவ்விடத்திற்கு அகண்டபரிபூரண சச்சிதானந்த சபா குருக்ஷேத்திரம் என்று பெயர் விளங்கி வருகிறது. ஒவ்வொரு பிரதி மாதமும் முதல்வார குருவாரத்தன்று குருபூசையும் பிரதி வருஷம் கார்த்திகை மாதம் முதல் குருவாரத்தன்று மஹாகுருபூசையும் விமரிசையாக நடைபெற்று வருகின்றன.

# 9. சைவசித்தாந்தத்தில் இரு குழந்தைகள்

சைவ சமயகுரவர் நால்வர். அவர்கள் சம்பந்தர், அப்பர், சுந்தரர், மாணிக்கவாசகர் ஆகியோராவர். சைவசந்தானகுரவர் நால்வர். அவர்கள் மெய்கண்டார், அருணந்தி, மறைஞானசம்பந்தர், உமாபதி சிவாச்சாரியார் ஆகிய நால்வருமாவர். மெய்கண்டசாத்திரங்கள் பதினான்கு. திருவுந்தியார், திருக்களிற்றுப்படியார் என்னும் இரண்டு நூல்களும் சிவஞான போதத்திற்கு காலத்தால் முற்பட்டவை எனினும், சிவஞானபோதமே சைவசித்தாந்த நூல்களுள் முதன்மைவாய்ந்த நூலாகக் கருதப்படுகிறது. இதனை இயற்றியவர் மெய்கண்டார். இவர் இரண்டு வயதிலேயே ஞானம் பெற்றவர். இவர் திருமுனைப்பாடி நாட்டில் திருப்பெண்ணாகடம் என்னும் ஊரில் அச்சுதகளப்பாளருக்குக் குழந்தையாகப் பிறந்து சுவேதனப் பெருமாள் என்னும் பெயரோடு வளர்ந்து வந்தார். திருக்கைலாயத்திலிருந்து பொதியமலைக்கு அகத்திய முனிவரிடம் ஆகாய வழியாகச் சென்ற பரஞ்சோதியார் இரண்டு வயதாயிருந்த சுவேதனப் பெருமாளின் பக்குவநிலையறிந்து அவருக்கு ஞானோபதேசம் செய்து மெய்கண்டார் என்ற தீட்சாநாமமும் சூட்டி அருளினார்.

சைவசித்தாந்த சாத்திரங்கள் சைவ சித்தாந்தத்திற்கு இலக்கணமானால் பன்னிரு திருமுறைகளும், சைவ சித்தாந்த இலக்கியங்கள் என்று போற்றப்பெறும், பன்னிருதிருமுறைகளில் முதல் மூன்று திருமுறைகளையும் செய்தருளியவர் திருஞானசம்பந்தப் பெருமானாவர். இவர் சீர்காழியிலே சிவபாதவிருதயருக்கு மகனாகப் பிறந்து வளர்ந்து வரும் நாளிலே இவரது மூன்றாவது வயதிலே உமாதேவியாரால் ஞானப்பால் ஊட்டப்பெற்று ஞானசம்பந்தர் ஆனார். ஞானசம்பந்தப் பெருமானர் முருகப் பெருமானுடைய திருவவதாரம் என்ற ஒரு கொள்கை நெடுங்காலமாக இருந்து வருகிறது. இக்கொள்கையை அருணகிரியார் வலியுறுத்தி

" வழுதி கூன்னிமிர்த்த பெருமாளே" என்றும்

" உபயகுல தீபதுங்க விருதுகவி ராஜசிங்க
உறைபுகலி யூரில் அன்று வருவோனே.
இறைவி யெனு மாதிபரை முலையின் ஊறி
எழும் அமிர்தம் நாறு கனிவாயா
புழுகொழுது காழி கவுணியரில் ஞான
புனிதனென ஏடு தமிழாலே
புனலிலெதி ரேற சமணர்கழுவேற
பொருத கவி வீர குருநாதா!"

என்றும் திருப்புகழில் கூறுகின்றார்!

சேக்கிழார் காலத்தில் வாழ்ந்த பெரும் புலவராகிய ஒட்டக்கூத்தர் திருஞானசம்பந்தர் முருகனுடைய திருஅவதாரம் என்றே வற்புறுத்துகின்றார்.

" வருகதை தெய்வமகள்என் மருமகள் வள்ளிவதுவை
மணமகிழ் பிள்ளைமுருகன் மதுரையில் வெல்லும் இனிய
தொருகதை சொல்லு தவள ஒளிவிரி செவ்வி முளரி
ஒளிதிகழ் அல்லிகமழும் ஒருமனை வல்லி எனவே."

என்று ஒட்டக்கூத்தர் தக்கயாகப்பரணியில் பாடுகின்றார்.

பெரிய புராணத்தில் திருஞானசம்பந்தருடைய புராணம் மிக விரிவானது. 4286 பாடல்கள் அடங்கிய பெரிய புராணத்தில் ஞானசம்பந்தர் புராணம் 1256 பாடல்கள் அடங்கியது. இதனை நினைந்து "பிள்ளைபாதி, புராணம்பாதி" என்று பழமொழி ஒன்று தமிழில் வழங்குகிறது. இன்றும் மதுரையில் திருஞானசம்பந்தமூர்த்தியின் வழிவந்த ஞானப்பரம்பரையினர் தலைவர்களாக வீற்றிருந்து சைவத்தைப் பரிபாலனம் செய்துவரும் ஆதீனம் ஒன்று உண்டு. அதன் வழிவந்த ஆதீனம் ஒன்று ஈழத்திலும் நல்லூரில் இருப்பது மிகப் பொருத்தமானது. நல்லூர் ஞானசம்பந்தர் ஆதீனத்தில் இரண்டாவது தம்பிரானாகப் பட்டம் ஏற்றிருப்பவரும் ஆண்டில் இளையவரே.

பதி, பசு, பாசம் ஆகிய முப்பொருளறிவை நமக்குத் தெளிவாகச் சொல்லும் அறிவுச்சுரங்கமே சிவஞானபோதம்.

சிவபெருமான் சமயாசாரியர் நால்வரையும் தடுத்தாட் கொண்டமையிலும் ஒரு அழகை இரசிக்கிறோம். ஞானசம்பந்தருக்கு பாலைக் கொடுத்தும், அப்பருக்குச் சூலையைக் கொடுத்தும், சுந்தரருக்கு ஓலையைக் காட்டியும், மணிவாசகருக்கு நூலைக்காட்டியும் ஆட்கொண்டார். மணிவாசகருக்குக் காட்டிய நூல் சிவஞானபோதமாகும். இதனாலேயே இதன் சிறப்பை நாம் ஓரளவு உய்த்துணரலாம். இந்நூல் திட்பநுட்பமானது. பன்னிரண்டே சூத்திரங்களால் ஆனது. அதனுள் அடங்கிய பொருளோ உடல், உள்ளம், உயிர், மனம், உலகம், பரம்பொருள் ஆகிய அனைத்தையும் ஒருங்கே விளக்குவது.

திருஞானசம்பந்தர் வயதில் சிறியவராயினும், ஞானத்தில் பெரியவர். தம்முடன் கயிலைக்கு வந்த சேரமான்பெருமாள் நாயனாரை உள்ளே அழைத்துச் செல்லவில்லை சுந்தரர். ஆனால், சம்பந்தர் தம் திருமணத்திற்கு வந்த அத்தனை பேருக்கும் சிவலோகக் காட்சி அளித்தார். அத்துணைக் கருணை உள்ளம் படைத்தவர் சம்பந்தர். கருணைவேறு, ஞானம்வேறு என்று சிலர் சொல்லுகிறார்கள். அது பிழை. ஞானத்தின் பயன்தான் கருணை. இதைத் திருவள்ளுவர் கூறுகிறார்.

**அறிவினான் ஆகுவதுண்டோ பிறிதின் நோய்**
**தன்நோய்போல் போற்றாக் கடை.**

பிறரது துயரைத் தன் துயரமாக எண்ணி இரங்குவது தான் நல்லறிவுக்குரிய இலக்கணமாகும். அந்த நல்லறிவே ஞானம்.

ஞானம் மூவகைப்படும். பொருள்களைப் பற்றி அறியும் ஞானம் பாசஞானம். ஆன்மாவைப்பற்றி அறிகிற ஞானம் பசு ஞானம். இறைவனைப்பற்றி அறிகிறஞானம் பதிஞானம். பாசஞானத்தாலும் பசுஞானத்தாலும் பிறவித் துன்பம் தீராது. பதிஞானத்தாலேயே அதுதீரும். ஞானசம்பந்தர் பதிஞானத்தோடு தொடர்பு கொண்டவர்.

வேதத்திற்கு வேதாந்தம்போல, ஆகமத்திற்குச் சித்தாந்தம் விளங்குகிறது. அது சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய

நான்கு பாதங்களை உடையது. ஆணவம், கன்மம், மாயை ஆகிய அழுக்கேறிய ஆன்மாவைக் கருணைத்தாய்போல எடுத்துக் கழுவி மாசகற்றிச் சுத்த ஆன்மாவாக்கி திருவருள் பொழிந்து, ஞானக்கண் திறந்து, 'பார், இதுவே சிவம். மெய்ப்பொருள்! உனது உயிர்க்குயிராயிருப்பது; அதனுடன் கலந்திரு' என்று நற்கதி தருவது சித்தாந்தம்.

சித்தாந்தம் ஒரு சமரச ஞானக்கடல். அதில் எல்லாச் சமயங்களும் வந்து கலக்கின்றன. அது சமயாதீதப் பொருளை எட்டும். சமயத்திற்கெல்லாம் தாயாகவும், அப்பாலும் பரந்து அகண்டமாகவும் விளங்கும். அ∴து அகண்ட சமரசச் சமயம். உலகோரெல்லாரும் சித்தாந்திகளாயிருக்கலாம். அதனுண்மையை விளங்கிக் கொண்டால், உலகில் உள்ள எல்லா இராச்சியங்களும் தத்தமது இராச்சியத்திலுள்ள மக்கள் எல்லோரும் சுபீட்சமாக வாழவேண்டும்' என்பதையே விரும்பும். ஆனால் அவர்கள் விரும்பியபடி எதுவும் நடக்கவில்லை. ஞானசம்பந்தப்பெருமானோ உலகம் சுபீட்சமடைய வழி சொல்லுகின்றார். " அரன்னாமமே சூழ்க் வையகமுந்துயர் தீர்கவே" என்கிறார். ஹரன் என்பதுதான் தமிழில் அரன் என்றாகிறது. ஹர ஹர என்று எங்குபார்த்தாலும் சனங்கள் கோஷிக்க வேண்டும் என்று அந்தத் தெய்வக் குழந்தை போட்ட ஆக்ஞா விசேஷத்தால்தான், இன்றளவும் 'நம, பார்வதீ பதயே' என்று ஒருவர் சொன்னால், நாம் அத்தனை பேரும் 'ஹர ஹர மகாதேவா' என்கிறோம். 'அரோஹரா' அண்ணாமலைக்கு அரோஹரா' என்றெல்லாம் அத்தனைபேரும் சேர்ந்து சொல்கிறோம்.

" நல்லவாறே உன்றன் நாமம் நாவில் நவின்றேத்த
வல்லவாறே வந்து நல்காய் வலிவலம் மேயவனே" என்றும்

" பூநாளும் தலைசுமப்பப் புகழ்நாமம் செவிகேட்ப
நாநாளும் நவின்றேத்தப் பெறலாமே நல்வினையே" என்றும்

" கல்லா நெஞ்சில், நில்லானீசன்
சொல்லா தாரோடு அல்லோம்யாமே"
என்றும்

ஞானசம்பந்தப்பெருமான் ஆண்டவனுடைய நாம ஜெபத்திற்கு முக்கியத்துவம் கொடுப்பதை நாம் உய்த்துணர வேண்டும். கலியுகத்தில் இறைநாம ஜெபம் ஒன்றினாலேதான் இறைவனை அடைய முடியும் என்பது ஞானசம்பந்தப்பெருமானுடைய கருத்தாகும்.

சிவஞானபோதம் பன்னிரண்டாம் சூத்திரம் பின்வருமாறு

" செம்மலர் நோன்றாள் சேரல் ஒட்டா
அம்மலம் கழீஇ, அன்பரொடு மரீஇ
மாலற நேயமலிந்தவர் வேடமும்
ஆலயந் தானும் அரனெனத் தொழுமே.

சிவப்பேற்றினை அடைந்த சீவன் முத்தன் மும்மலங் களையும் அறக்களைவன்; சீவன்முத்தன் சிவபத்தர்களோடு இணங்கி நிற்பன்; சீவன்முத்தன் அடியாரது வேடத்தைச் சிவமெனக்கண்டு வழிபடுபவன்; சீவன்முத்தன் சிவலிங்கங்களையும் சிவமெனவழிபடுபவன்.

" பூக்கைக் கொண்டரன் பொன்னடி போற்றிலார்
நாக்கைக் கொண்டரன் நாமம் நவில்கிலார்
ஆக்கைக் கேயிரை தேடி அலமந்து
காக்கைக் கேயிரை யாகிக் கழிவரே."

என்பது அப்பர் தேவாரம்.

நம் சைவசமயத்தைச் "சைவ சமயமே சமயம்" எனவும், "சைவத்தின்மேற் சமயம் வேறிலை" எனவும் ஆன்றோர்கள் புகழ்ந்து போற்றியுள்ளார்கள். சைவம் - சிவசம்பந்தமுடையது. சிவம்-மங்கலம், சிவம் அநாதியாக உள்ளது; காலம் கடந்தது. ஆகவே, சைவசமயத்திற்குத் தோத்திரம், சாத்திரம் என்ற இரண்டும் இரு கண்களாக உள்ளன. தோத்திரங்கள் சொல்லுவதினால் இறைவனிடம் அன்பை விளைவிப்பன. சாத்திரங்கள் பயிலுவதனால் இறைவனைப்பற்றிய அறிவை விளைவிப்பன. "தோத்திரமும் சாத்திரமும் ஆனார் தாமே" என்பதும், "தொழுதெழுந்து ஆடிப்பாடித் தோத்திரம் பலவும் சொல்லி,

அழுமவர்க்கு அன்பர்போலும் ஆவடு துறையானாரே" என்பதும் அப்பர் தேவாரம்.

சைவசமய மரபிலே வந்த ஒவ்வொருவரும், சைவசமயம ஒழுக்கத்தைக் கடைப்பிடித்து, இறைவழிபாட்டில் நிற்றல் வேண்டும். உடலால், உள்ளத்தால், உடையால், நடையால், உணவால்- எல்லாம் சைவ ஒழுக்கம் மிளிர வேண்டும். இறைவழிபாட்டில் தேவாரம், திருவாசகம் முதலிய தோத்திரப் பாடல்களைச் சொல்லித் துதித்து வழிபடில் மனம் பண்பட்டு இறையருளைப்பெற வழியாகும்.

# 10. பிரம்மேந்திர சரஸ்வதி சுவாமிகள்

சுவாமிகளுக்குக் குரு ஒருவரை அடைந்து உபதேசம் பெறவேண்டும் என்ற தாகம் எழுந்தது. ஆதிசங்கராச்சாரியார் தென்னாட்டிலிருந்து வடநாடு ஏகுகையில் வழியில் குருவை அடைந்ததும் பின்பு அவர் காசியம்பதியை அடைந்ததும் நினைவுக்கு வந்தபடியினால், உடனே காசியம்பதியை நோக்கிப் புறப்பட்டார். கன்று பசுவை நாடிச் செல்வதுபோல் கால்நடையாகவே காசியம்பதியைச் சென்றடைந்தார்.

காசியை அடைந்ததும் விசுவநாதப்பெருமானுடைய தரிசனம் கிடைத்தது. பெருமானிடத்திலேயே வேண்டுதல் செய்தார். வேண்டுதல் வீண்போகவில்லை. திருவண்ணாமலை-தக்ஷிணாமூர்த்தி சுவாமிகளுடைய தரிசனை கிடைத்தது; ஜனகர் முதலான நால்வருக்கும் சிவனாகிய தக்ஷிணாமூர்த்தி கிடைத்ததுபோல இவருக்கும் ஒரு தக்ஷிணாமூத்தி கிடைத்ததை எண்ணி ஆச்சரியப்பட்டார்.

“ கண்டோ மென்பார் சிலர்தேடிக்
காணோ மென்பார் சிலர்தெய்வம்
உண்டோ மென்பா ருளதென்பா
ருருவா மென்பா ரருவென்பார்
எண்டோண் முக்கண் ஈசனிலை
எவரே தெரிவார் தவமிலரே”

என்பதற்கேற்பக் ‘கடவுள் இல்லை’ யென்றும், ‘இருந்தால் காட்டு’ என்றும் ‘கடவுளிருந்தால் என் முறைப்பாட்டுக்கு ஏன் செவி கொடுக்காமலிருக்கிறார்’ என்றும் வாயில் வந்தபடி பேசிக்கொண்டலைகின்றாரே! என்ன செய்யலாம்! யாரே உணர்த்தவல்லார் இறைவனுடைய இப்படிப்பட்ட மகிமையை! தவப்பெருஞ்சோதியை தவத்தினாலறியக்கூடுமல்லது வேறு எதனால் அறிதற்காகும்? என்றெண்ணி குருவின் முன்னிலையில் அடியற்ற மரம்போல் வீழ்ந்து சற்றுக்கிடந்தார். குருநாதர் கருணை பாலித்தார். சீடனின் பக்குவநிலையறிந்து அவருக்கு உபதேசம் செய்தார். மூன்று ஆண்டுகாலம் குருவுக்குப் பாதசேவனம்

செய்தார். சந்நியாசம் பெறவேண்டுமென்று ஆவல் கொண்டார். குருநாதர், தந்தையாருடைய அனுமதி பெற்றுச் சந்நியாசம் கொள்வதுதான் பொருத்தமானது என்று தைரியங்கூறித் தென்னாட்டிற்கு அனுப்பிவைத்தார். இவர் சென்ற அன்றே இவரது தந்தையார் இறந்துவிட்டார். தந்தை இறந்து பதின்மூன்றாவது நாள் நடந்த கிரியையின்போது தாம் துறவியாவதற்கு உத்தரவு தருமாறு வேண்டினார். தாயாரும் தமையன்மாரும் மனமிசைந்திலர்.

சுவாமிகள் மூன்று அல்லது ஆறு வீடுகளில் தான் உடுத்திருந்த உடையிலேயே மடிப்பிச்சை ஏற்று அந்த அன்னத்தில் ஆறு கவள உணவுமாத்திரம் உண்பதென்கிற விரதநியமம் மேற்கொண்டிருந்தார். மீதியைக் காகங்களுக்கு அளித்து வந்தார். இவரது நிலை கண்டவர்கள் இவரைப் பட்டினத்து சுவாமிகளுடன் ஒப்பிட்டுப் பேசலாயினர். ஞானச்செல்வங் கைவரப் பெற்றவர்கள் சுவாமிகளின் அந்த நிலையைக் கொண்டாடினர். சாதாரண மக்கள் சுவாமிகளிடம் கரைகடந்த மரியாதை பாராட்டினர். குழந்தைகளுங்கூட சுவாமிகளை மரியாதை பாராட்டி அழைத்து வணங்கினர். இதனால் சுவாமிகளுக்கு வித்தியாசம் மேற்கொள்ள வேண்டும் என்ற அவா மேலும் மேலும் எழுந்தது.

ஒருநாள் நரசிம்மகனபாடி என்பவர், உனக்குச் சந்நியாசம் கொடுக்கக்கூடிய குருவைத் தேடிக்கொண்டு வா என்றார். சுவாமிகள் குருநாதனைத் தேடிப்புறப்பட்டு விட்டார். ஒரு இடத்தில் இவர் தங்கியிருந்தபோது சிலருடைய பேச்சு இவருடைய காதில் விழுந்தது. "வெள்ளியம்பலம் என்று போற்றப்படுவதாகிய மதுரையம்பதியில் ஸப்ஜட்ஜி சுவாமிகள் என்றும் சதாசிவப்பிரம்மேந்திரர் என்றும் பெயர்பெற்ற ஒரு மகான் விளங்குகிறார். அவர் தரிசனம் பாபவிமோசனம் தருவது" என்பதே அவர் கேட்ட பேச்சாகும். இதனைக்கேட்ட சுவாமிகள் இறைவன் குருவைக் காட்டினான். குறைகள் நீக்கினான் என்று எண்ணிக் குதூகலமடைந்து குருவைநாடி ஓடினார். தேடியடைந்த சுவாமிகள் முன்னிலையில் கண்ணீருங் கம்பலையுமாக விழுந்து வணங்கி எழுந்து நின்றார்.

இவரது பக்குவ நிலையறிந்த சுவாமிகள் "உன் தாய் தந்தையரின் அனுமதியின்றி நான் ஒன்றும் செய்வதற்கில்லை"

என்று கூறினார். சுவாமிகள் இதைக் கேட்டதும் 'தந்தை காலமானதையும் தாயாரிடம் உத்தரவு பெறலாம் என்றுங் கூறினார். ஆனால் இன்றைய தினம் ஒரு மணிக்கு முன்பாகவே இந்த முகூர்த்தத்திலேயே தங்கள் சந்நிதானத்திலேயே நான் அவதூதம், மௌனம் இரண்டையும் அடைய விரும்புகிறபடியால் கிருபைபுரிய வேண்டும்" என்று தெரிவித்துக் கொண்டார்.

பிரஹ்மேந்திரர் உடனே சுவாமிகளுக்கு உபதேசம் செய்து "நீ இடையில் ஏகவஸ்திரத்துடன் தாயாருடைய சந்நிதியை அடைந்து அவ்வம்மையாரை மூன்று முறை வலம் வந்து அங்கே மூன்றேமுக்கால் நாழிகை அவர்கள் சந்நிதியிலே இருந்து அப்பால் அங்கேயே அவதூதமும் மௌனமும் கொள்ளலாம்" என்று கூறினார்.

உடனே தம் குருநாதரைப் பணிந்து விடைகொண்டு பகல் ஒன்றரை மணிக்கு அங்கிருந்து புறப்பட்டு ஆவேசம் அடைந்தவர் போல் 72 மைல் தூரம் நடந்து கானப்பேட்டையை அடைந்து அன்னையின் சந்நிதி சேர்ந்தார். அம்மையாரை மும்முறை வலம்வந்து பணிந்து எழுந்தார். ஒரு முகூர்த்த காலம் அவ்விடத்திலேயே தங்கி இருந்தார். அப்பால் அந்த இடத்திலேயே அவதூதமும் மௌனமும் மேற்கொண்டார். அவ்விடத்தை விட்டு எழுந்தபோது அவர் தரித்திருந்த வஸ்திரம் நழுவி விழ எடுத்து எறிந்துவிட்டுப் புறப்பட்டார்.

சுவாமிகள் தம் தாயாரிடம் சந்நியாசம் வாங்கிக் கொள்ள உத்தரவு பெறும்போது, தமக்கு இனிமேல் பிச்சை இடுகின்றவர்களே தாய்மார்கள் என்றும், ஞானோபதேசம் செய்யும் குருவே பிதா என்றும், சாந்திதான் பத்தினி என்றும், சீடர்களே குழந்தைகள் என்றும் இவ்விதமாக ஒரு பெரிய குடும்பம் தமக்கு உண்டாகப்போகிறதென்றும் கூறிச்சென்றார்.

சுவாமிகளுடைய இத்திருக்கோலத்தைக் கண்டோர் அனைவரும் சிவபெருமான் தாருகாவனத்திலே கொண்டருளிய பிக்ஷாடனக் கோலத்தை நினைவு கூர்ந்தனர். சுவாமிகளுடைய அவதூத நிலையைக் கண்டோரனைவரும் ஒரு குழந்தையைப் பார்ப்பது போலவே உணர்வு பெற்றனர்.

"மனத்தகத் தழுக்கறாத மௌன ஞான யோகிகள்
வனத்தகத் திருக்கினு மனத்தகத் தழுக்கறார்
மனத்தகத் தழுக்கறுத்த மௌன ஞான யோகிகள்
முலைத்தடத் திருப்பினும் பிறப்பறுத் திருப்பரே"

என்ற பாடலுக்கேற்பச் சுவாமிகளும் சித்தவிவகாரம் அடையாதிருந்தார். சிவத்தியானம் செய்வதைத் தவிர வேறு எதையும் அறியாதவரானார். இந்த ஆச்சிரமத்தை ஏற்றுக் கொண்ட சுவாமிகள் அந்த ஊரிலே மூன்று தினங்கள் மாத்திரமே தங்கினார்கள். அப்பால் நேராகக் கரூர் சென்றார். அங்கு நெரூரில் சமாதி கோயில் கொண்டருளிய சதாசிவப் பிரமேந்திரருடைய சமாதி தரிசனம் செய்தார்.

"தில்லையைக் காணக் காசியிலிறக்கச் சிறக்கு மாரூர்தனிற் பிறக்க
எல்லையில் பெருமை யருணையை நினைக்க எய்தலாம் முத்தி"

என்பது நினைவுக்கு வர திருவண்ணாமலையை அடைந்தார். சிவபெருமானே மலையினுருவாக விளங்குகின்றபடியினால் இம்மலைச்சாரலில் தங்கிச் சிலகாலம் தவம்புரிவாராயினர். உற்றார் உறவினரும் சினேகிதர்களும் அடிக்கடி வந்து சுவாமிகளுடைய தவத்திற்கு இடையூறு விளைவித்தமையால் சேலத்தைச் சேர்ந்த கொல்லிமலைக்குச் சென்று தவம்புரிய எண்ணினார்.

அவதூத நிலையில் சுவாமிகள் செல்லும்போது சிலருக்குப் பைத்தியம்போலக் காட்சி அளித்தார். அதனால் கல்லடியும் பட்டார். ஒருசிலர் மகான் என்று கருதிச் சிறப்புக்கள் பல செய்தனர். சேலம் சென்றதும் இவர் உடையில்லாமல் திரிவதை வெறுத்த பொலீசார் சிறையில் அடைத்து கோர்ட்டில் நிறுத்தினர். சுவாமிகளுடைய பெருநிலையை விளங்கிக்கொண்ட வக்கீல் ஒருவர் சுவாமிகளுடைய உயர்ந்த நிலையைப்பற்றிய விளக்கத்தை நீதிபதிக்குத் தெரிவித்து அவரை விடுதலை செய்வித்தார். வக்கீல் தமது இல்லத்திற்கு அழைத்துச் சென்று உபசரித்தார்.

வக்கீல் குடும்பத்தினருக்கு அனுக்கிரகம் செய்த சுவாமிகள் சேந்தமங்கலம் நோக்கிப் புறப்பட்டார்கள். சேலத்திலிருந்து

சேந்தமங்கலம் செல்லும் வழியில் பல விநோதக் காட்சிகளை அனுபவித்தார். வழியில் ஓரிடத்தில் பொய்மான் நரடு என்ற ஒரு காடு உண்டு. இதில் இரண்டு பெரிய பாறைப் பிளவின் நடுவே தூர இருந்து பார்த்தால் மான்போல ஒரு உருவம் தெரிகிறது. அருகில் சென்று பார்த்தால் அது தெரிவதில்லை. இதனால் சனங்கள் இந்த இடந்தான் மாரீசன் சீதையின் முன் மானாக வந்த இடம் என்கிறார்கள். இத்தகைய காட்சிகளைக் கண்டுகளித்தவராய்ச் சேந்தமங்கலம் அடைந்தார்கள்.

# 11. நால்வர் வழியிலே வாழ்ந்து நாவலர் வழியிலே தொண்டு செய்த நல்லை ஆதீனம்

11-04-81 சனிக்கிழமை காலையில் வாசிக்கப்பட்ட வானொலிச் செய்திபோல் துன்பத்தைக் கொடுத்த செய்தி வேறு எதுவும் இருக்க முடியாது. "அப்பன் இல்லாவிட்டால் தெரியும் அப்பன் அருமை உப்பில்லாவிட்டால் தெரியும் உப்பின் அருமை" என்ற பழமொழியை இன்று நாம் உணருகின்றோம். நல்லை ஆதீனம் குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாத தேசிக ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் பரிபூரணம் எய்தியபின் சிந்திக்கின்றோம்: சிந்தனை ஓடவில்லை.

**ஒழுக்கம், அன்பு, அருள், ஆசாரம், உபசாரம், உறவு, சீலம்**
**வழுக்கிலாத்தவம், தானங்கள், வந்தித்தல், வணங்கல், வாய்மை**
**அழுக்கிலாத்துறவு, அடக்கம் அறிவொடு அர்ச்சித்தல் ஆதி**
**இழுக்கிலா அறங்கள் ஆனால் இரங்குவான் பணிஅறங்கள்.**

இத்தனையும் சேர்ந்த திருஉருவமே நல்லை ஆதீனகர்த்தர். வெளியே பார்த்தால் யாரும் விரும்பாத கரிய உரு. இந்தக் கரிய உருவுக்குள்ளே இத்தனையும் அடங்கியுள்ளனவா என்று கேட்கத் தோன்றுகின்றது.

உள்ளம் குழந்தை உள்ளம். "குழந்தைகளாகி என்னிடத்திலே வாருங்கள் என்ற இயேசுநாதரின் வாக்கிற்கு இலக்கியம் அவர். அந்தணர் குலத்திலே தோன்றினாலும் அகத்திலே அகங்காரம் எள்ளளவும் இல்லை. பூணூலின் இடத்தைக் காவிஉடை மறைத்துக் கொண்டது. தாம் உடுப்பது கந்தைக் காவியானாலும் மற்றையோருக்குப் போர்ப்பதெல்லாம் பொன்னாடை. தாம் அணிவது உருத்திராக்கமாலை. மற்றையோருக்கு அணிவிப்பது பூமாலை; பாமாலை; புகழ் மாலை. அரசனிடமும் ஆண்டியிடமும் அதே அன்பு. சைவக் கோயில்களிலே சைவப்பிரசங்கம் செய்ய ஆட்களில்லையே என்று ஏங்கினார் நல்லைநகர் ஆறுமுகநாவலர். அந்த ஏக்கத்தைத் தவிர்த்தார் நல்லை ஆதீன முதல்வர்.

ஆதீனம் என்ற சொல்லுக்குப் பொருள் அறிய இந்தியாவுக்குத்தான் செல்ல வேண்டும் என்றிருந்த காலமும் ஒன்றிருந்தது. அதனைப்போக்கி இதோ நல்லை ஆதீனம் என்று எல்லார் நாவிலும் நடனம் செய்யவைத்த பெருமை பரமாசாரிய சுவாமிகளுக்கே உரியது. சங்கீதகதாப்பிரசங்கமா? வாரியார் சுவாமிகளைத்தான் வரவழைக்க வேண்டும் என்றிருந்த காலம் போய் நமது ஆதீனமுதல்வர் நாம் அழைத்தபோது ஓடிவரக் காத்திருக்கிறாரே என்ற அளவுக்கு மக்கள் உள்ளத்திலே தமது பேச்சுவன்மையால், இசைவன்மையால் ஒரு இடத்தைப் பிடித்துக் கொள்வதற்குச் சுவாமிகளைத் தவிர வேறுயாரால் தான் முடியும்.

ஆங்கிலத்தில் மெற்றிக்குலேசன் சித்தி அடைந்தவர்களுக்கு அரசாங்க உத்தியோகம் வீடுதேடி வந்தகாலம். உத்தியோகம் புருஷலட்சணம் என்று மக்கள் மனதில் ஊறியிருந்தகாலம். எனக்கு 'டமில்' நல்லா வராது என்று பகிரங்க மேடைகளில் சொல்வதை நாகரிகம் என்று எண்ணியிருந்த காலம். இருபது வயது இளைஞன் சங்கீத கதாப்பிரசங்கம் செய்ய முன்வந்தான் என்றால் அவன் ஒரு சாதாரண இளைஞனாக இருக்க முடியாது.

இந்த இளைஞனுக்கு இந்த நல்ல புத்தி ஏன் வந்தது? எப்படி வந்தது? என்றொரு கேள்வி. இது பரம்பரைச் சொத்து. வித்துவான் பிரம்மஸ்ரீ சி. கணேசையரின் பேரன் என்றால் வேறு எப்படி இருப்பான்? தைமாதம் பூராட நட்சத்திரத்துடன் வெள்ளிக்கிழமை சேரப் பிறந்ததால், குடும்பத்துக்குத் தோஷம் உண்டென்று பயந்தனர் உற்றார் உறவினர். அதனால் வண்ணை வைத்தீஸ்வரன்-வாலாம்பிகைக்கு விலைபோயினன் அந்த இளைஞன். அடுத்த வீட்டிலே பாகவதர் ஒருவர் நடத்திய சங்கீத வகுப்பு இவ்விளைஞனைச் சங்கீதத்தில் பைத்தியமாக்கியது. கல்வி கற்றது வைத்தீஸ்வர வித்தியாலயம். வாய்த்த ஆசிரியர்கள்: சுவாமி விபுலானந்தா, சுவாமி அவினாசானந்தா, சுவாமி சர்வானந்தா, சுவாமி நிஷ்ரேஷ்வரானந்தா ஆகியோர். இவர்களிடத்திலே கல்விகற்கும் வாய்ப்புக் கிடைத்தால் எந்த இளைஞன்தான் கெட்டுப்போக முடியும்?

அந்தக் காலத்தில் சங்கரசுப்பையரினதும் நாகலிங்கப் பரதேசியினரதும் கதாப்பிரசங்கத்தை அடிக்கடி கேட்கும் வாய்ப்பு

இளைஞனுக்குக் கிடைத்தது. இவர்களைப்போல நானும் ஏன் ஒரு கதாப்பிரசங்கியாக வரமுடியாது என்ற ஆர்வம் அடிமனத்திலே எழுந்தது. இந்துக் கல்லூரியில் மெற்றிக்குலேசன் படித்துக் கொண்டிருக்கும்போது பாடசாலையில் உள்ள நடராஜப் பெருமானுக்குக் காலை மாலை பூசை செய்யும் வாய்ப்பு இளைஞனுக்குக் கிடைத்தது. கிடைத்த சந்தர்ப்பத்தை இளைஞன் நல்லமுறையில் பயன்படுத்திக் கொண்டான். இளைஞனுக்கு இசையும் சித்திரமும் கைவந்த கலைகள். சித்திரமும் கைப்பழக்கம்; செந்தமிழும் நாப்பழக்கம் என்று கூறுவார்களே! அதன் இலக்கிய புருஷனாக விளங்கினான் இளைஞன். இன்றும் சுவாமிகளுடைய அழகான கையெழுத்து அவரை ஒரு சித்திர விற்பன்னர் என்று எடுத்துக் காட்டிக் கொண்டிருக்கின்றது.

நாவலர் பெருமான் எந்த வண்ணைச் சிவன்கோயிலில் தமது சைவப் பிரசங்கத்தை ஆரம்பித்தாரோ அதே வண்ணைச் சிவன் கோயிலிலேயே பரமாசாரிய சுவாமிகளும் தமது சைவப்பிரசங்கத்தை ஆரம்பித்துப் பலருடைய பாராட்டையும் பெற்றார். 45 ஆண்டுகள் சுவாமிகள் தம்மைச் சைவப்பணிக்கே அர்ப்பணித்துக் கொண்டவர்கள்.

சுவாமிகளுடைய சைவத் தமிழ்ப் பணியை ஈழத்திலுள்ள வர்கள் நல்லமுறையில் பயன்படுத்திக் கொள்ளத் தவறினாலும் மலேசியா, சிங்கப்பூர், தமிழ்நாடு ஆகிய இடங்களிலுள்ளவர்கள். சுவாமிகளுடைய பணியை நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டார்கள். சுவாமிகளுடைய பேச்சுச் சுவாரஸ்யத்தில் தம்மைப் பறிகொடுத்த மதுரை ஆதீனம் அவர்கள் “புலவர் மணி” என்ற பட்டத்தைச் சூட்டியதோடு தமது உத்தம சீடராக்கியும் கொண்டார். இதனால் மணிபாகவதர் சுவாமிநாததம்பிரான் ஆகிக் காலகதியில் சுவாமிநாத தேசிகஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் ஆனார்.

சுவாமிகளுடைய உபாசனாமூர்த்தி முருகப் பெருமானாகும். முருகப் பெருமானுடைய திருவருளால் சுவாமிகள் உயர்ந்த நிலைக்கு உள்ளத்தை உயர்த்திக் கொண்டார். இதனையறியாத பாமரமக்கள் பழைய மணிபாகவதர் என்றே பரமாசாரிய சுவாமிகளை அழைத்து வருகின்றனர். ஊர் பேர் அறியாதிருந்த கலைஞர்களை மேடை ஏற்றித் தகுந்த சந்தர்ப்பமும் சன்மானமும் அளித்து

பொன்னாடை போர்த்தி பட்டம் அளித்துக் கௌரவித்தார். சைவமுந் தமிழும் தமது இரு கண்களாகக் கொண்டு சுவாமிகள் செய்த சேவையை சைவத்தமிழ் உலகம் என்றும் மறக்க முடியாது. கடந்த பல ஆண்டுகளாக நல்லூர்க் கந்தசுவாமி கோயில் ஆதீன வித்துவானாக இருந்து சுவாமிகள் வருடாந்த விழாவின்போது செய்த உபந்நியாசங்களைக் கேட்டு உள்ளம் பூரித்தோர் தொகை கணக்கில் அடங்காது.

ஐந்தெழுத்தை முறைப்படி ஓதுவதினால் உலக பந்தபாசங்கள் நீங்கி இறைவன் திருவடியை ஆன்மா அடையும் என்பதை மெய்கண்டார் சிவஞான போதத்தில்" **உராய்த்துணைத் தேர்த்தெனப் பாசம் ஒருவத்தண் ணிழலாம் பதிவிதி எனும் அஞ்செழுத்தே"** என்றார். பிறவிப் பெருங்கடலை நீந்துவதற்கும் உலக ஆசைகளில் அல்லற்படாது இருத்தற்கும் ஐந்தெழுத்தே தெப்பம். இதனைப் பரமாச்சாரிய சுவாமிகள் நன்குணர்ந் திருந்தார்களாதலினால் அவர்களுடைய அனுட்டான முறையில் சித்திபெற்று பரமபதம் அடைந்துள்ளார்கள்.

நல்லை ஆதீனத்தை நல்ல முறையில் நடைபெறச் செய்வதற்கு எம்மால் என்னென்ன வகையில் உதவமுடியுமோ அத்தகைய உதவிகளை எல்லாம் செய்வதே யாம் பரமாசாரிய சுவாமிகளுக்குச் செய்யும் கடப்பாடாகும். பரமாசாரிய சுவாமிகளுடைய சரித்திரம் மாணவர்களுடைய வாசினைப் புத்தகங்களில் இடம்பெறச் செய்வது மிக முக்கியமானதொன்றாகும்.

# 12. காயத்திரி சுவாமிகளுடன் ஒரு நாள்

25-07-82 ஞாயிற்றுக்கிழமை தாம்பரம் இறைபணி மன்றத்தில் அருணகிரிநாதர் விழா மிக அற்புதமாக நடைபெற்றது. அவ்விழாவிற்கு ஸ்ரீ பித்துக்குளி முருகதாஸ், திரு. மீ.ப. சோமசுந்தரம், குருஜீ சுந்தரராமன் போன்றவர்களுடன் தவத்திரு. ஸ்ரீலஸ்ரீ காயத்திரி சுவாமிகளும் வந்திருந்தார்கள்.

காயத்திரி சுவாமிகளைப் பற்றி நிறையக் கேள்விப்பட்டதுண்டு. ஆனால் முதல் தரிசனம் அன்றுதான் கிடைத்தது. சுவாமிகள் என்றால் குறைந்தது காவியாவது உடுத்தி நாலுபேர் முன்பின்னாகக் கட்டியங்கூற, தண்டு கமண்டலங்களுடன் காட்சி கொடுப்பார் என்று ஒரு எண்ணம். சுவாமிகளைப் பார்த்த உடனேயே அந்தப் படாடோப எண்ணங்கள் எல்லாம் மறைந்து வேறோர் படம் உதித்தது.

காட்சிக்கு மிக எளிய உருவம்; நம்மைப் போலவே மிக மிகச் சாதாரண உடை. அதுவும் வெள்ளை உடை. முகத்தில் ஒரு தேஜஸ். அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்பார்களே, அந்த அழகை முகத்தில் பார்க்கக்கூடிய ஒரு இலக்கிய புருஷர். “வெள்ளைக்கில்லை, கள்ளச்சிந்தை” என்பது போல உடையும் வெள்ளை; உள்ளமும் வெள்ளை. வெள்ளை நிறத்தில் எந்த நிறமும் மிக இலகுவில் பிடித்துக் கொள்ளும்.

‘மனத்துக்கண் மாசு இலனாதல் அனைத்து அறன்’ என்ற வள்ளுவன் வாக்கிற்கு உதாரண புருஷர். அவரது உள்ளம் வெள்ளை மாத்திரம் அல்ல, பல நல்ல குணங்களையும் உடையதாக இருந்தது.

ஏழைகள் மீது கருணை, கலியுகத்தில் கண்கண்ட தெய்வமாம் கந்தன் கருணையின் இருப்பிடம், தன்னை நாடி வந்தோரின் துன்பம் அறிந்து அதனை விரைந்து சென்று நீக்கும் பண்பு, தனக்கென்று எதனையும் வைத்துக் கொள்ளாமை, கையில் கிடைத்ததை எல்லாம் ஏழைகளுக்கே வாரி வழங்கும் வள்ளல் தன்மை, வலதுகை கொடுப்பதை இடதுகை அறியாத்தன்மை

ஆகிய நல்ல குணங்கள் எல்லாம் உள்ளத்தில் நிறைந்து பொங்கி வளிந்தன.

அவரது குணங்கள் பேச்சிலும் செயலிலும் புலப்பட்டன. நொந்துபோன உள்ளங்கள் இலட்சக்கணக்கில் அவரது தரிசனத்துக்காக ஏங்கிக் கிடக்கின்றன. அவரது இனிய வார்த்தைகளைக் கேட்டு மனச்சாந்தி பெறுவதற்காக பல ஆயிரக்கணக்கான மக்கள் தமது காதினை அவர் திசை நோக்கித் திருப்பி வைத்துக் கொண்டிருக்கிறார்கள். நொந்த உள்ளங்களைச் சிறிதளவாவது அமைதிப்படுத்தி அனுப்புவதே தமது வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டிருக்கிறார்கள்.

"ஒரு சீவனை ஈடேற்றுவதற்காக எத்தனை முறை என்றாலும் பிறவி எடுக்கத் தயார்" என்று கூறிய வீர விவேகானந்தருடைய உள்ளத்தையே சுவாமிகளிடமும் காண முடிந்தது.

உலக மக்களுடைய சுபீட்சத்திற்காகச் சுவாமிகள் பல யாகங்களைச் செய்துள்ளார்கள். ஆயிரம் ரூபாயிலிருந்து பதினையாயிரம் இருபத்தையாயிரம் வரை செலவு செய்து யாகங்கள் நடத்தி உள்ளார்கள். கையில் ஒரு சதமேனும் வைத்திருந்து தொடங்கியவை அல்ல. 'முருகன் திருவருள் நல்ல எண்ணங்களைத் தோற்றுவிக்கிறது. அவ்வெண்ணங்களைச் செயற்படுத்தத் தக்கவர்களை எல்லாம் முருகப் பெருமானே அனுப்பி வைக்கின்றான்' என்பதே சுவாமிகளுடைய சித்தமாகும். தான் முருகனின் கருவி மாத்திரமே என்பதுதான் சுவாமிகளுடைய அசைக்கமுடியாத நம்பிக்கை.

ஆண்டாண்டு காலமாக முருக உபாசனை செய்தவர்கள் சுவாமிகள். முருகனின் திருவருள் கிட்டவில்லை. மதுரை மீனாட்சி அம்மன் கோயிலில் முருகன் அருளை வேண்டி மூன்று தினங்கள் அன்ன ஆகாரம் இன்றி தவம் இருந்தார்கள். தன் அன்பனை நீண்டகாலம் சோதனை செய்ய முருகப்பெருமான் விரும்பவில்லை. அன்னை மீனாட்சிக்கு முருகன் எப்பொழுதும் குழந்தைதானே. அதுபோல முருகப் பெருமானுக்கும் சுவாமிகள் செல்லக் குழந்தை ஆனார். முருகன் சித்து என்ற விளையாட்டைச் சுவாமிகளுக்கு அருளினான். அதனைச் சுவாமிகள் தன்னை

நாடிவரும் அகதிகளுக்கும் அலைந்தாருக்கும் அருளிக்கொண்டே இருக்கின்றார்கள்.

ஒரு தாய் பசித்திருக்கும் தனது குழந்தைக்கு ஒரு தீன்பண்டத்தைக் கையில் கொடுக்கிறாள். அக்குழந்தை அதனை வாங்கி உண்ணப்புகும்போது தன்னிலும் பார்க்க பசி அதிகம் உள்ள குழந்தை ஒன்று அழுவதைக் கண்டு அதனை அக்குழந்தையிடம் நீட்டுகின்றது. இக் கருணையைக் கண்ட அக் குழந்தையின் தாய் தன் குழந்தைக்கு இரு பங்கு பட்சணங்களைக் கொடுக்கிறாள். இதே போலவேதான் அத்தாயினுடைய தானத்தில் முருகன் இருந்து கருணை பொழிகின்றான். குழந்தையின் தானத்திலே சுவாமிகள் இருக்கின்றார்கள். முருகன் கொடுப்பதை அப்படியே ஏழைகளுக்கே கொடுத்துவிடுகின்றார்.

ஒரு முறை ஒரு யாகம் நடைபெற்றது. பெரிய பெரிய இரத்தின வியாபாரிகள் எல்லாம் வந்திருந்தார்கள். பெரிய வணிகர் எல்லாம் பெருந்தொகையாக யாகத்திற்கு நன்கொடை அளித்தார்கள். ஒரு ஏழைத்தாய் பைசாக்கணக்கில் முடிந்து வைத்திருந்த பணத்தை அவிழ்த்து சுவாமிகளுடைய திருப்பாதங்களில் வைத்தாள்.

சுவாமிகள் அந்த யாகத்திலிருந்து வரவழைத்த ஒரு இரத்தினமாலையை அத்தாயிடம் கொடுத்தார்கள். பெரிய பணக்காரர்கள் எல்லாம் பெருந்தொகையாகக் கொடுத்தும் தமக்கு ஒன்றும் கிடைக்கவில்லையே என்று ஏங்கினார்கள். சிலர் வாய்விட்டும் கேட்டேவிட்டார்கள். சுவாமிகள் புன்முறுவல் பூத்தார்கள்.

“நீங்கள் தந்த பணம் தொகையால் பெரியது. ஆனால் அத்தாய் கொடுத்த பணமோ தியாகத்தால் பெரியது” என்றார்கள். அடுத்த கணப்பொழுதிற்குத் தனக்குத்தேவை என்று எதனையும் அவள் வைத்துக் கொள்ளவில்லை. அதுவல்லவா உண்மையான தியாகம்.

**“ அன்றே என்றன் ஆவியும் உடலும், உடைமை எல்லாமும்**

குன்றேயனையாய் எனை ஆட்கொண்டபோதே கொண்டி லையோ" என்ற மணிவாசகப் பெருமானுடைய திருப்பாடல்தான் நினைவிற்கு வந்தது. பணக்காரனோ தனக்குக் கிடைத்ததை மற்றவர்களுக்குக் கூறியிருக்கமாட்டான். தான் மாத்திரம்தான் அதனை அனுபவிக்க வேண்டும் என்பது அவனது இயற்கைக்குணம். ஆனால் அந்தத் தாயோ குறைந்தது ஆயிரம் பேருக்காவது முருகன் திருவருளை வியந்து வியந்து கூறியிருப்பாள் அல்லவா? அதனால் பலர் முருகப் பெருமானுடைய திருவருளை நினைவுகூரும் பாக்கியத்தைப் பெற்றனர்.

சுவாமிகள் சாதி சமய பேதம், கடந்தவர். சிறுமை பெருமை பார்க்காது எல்லாரையும் ஒன்றுபோல நோக்குவார். ஒரு முறை அரிஜனப் பெண்களில் எழுவரை அழைத்து அவர்களையே சுபாஜினிகளாக வைத்து சுவாமிகள் பூசை செய்தார்கள். அதனால் சுவாமிகளுடைய சமரச மனோபாவத்தை ஒரு அளவாவது பலரால் புரிந்து கொள்ள முடிந்தது.

ஒருமுறை சுவாமிகள் ஒரு ஏழை விவசாயியின் இல்லத்தில் தங்க நேர்ந்தது. அந்த ஊரோ ஏழை விவசாயிகளால் நிரம்பப் பெற்றது. அந்த ஏழை விவசாயியோ மனங்கோணாது சுவாமியைத் தரிசிக்க வருபவர்களை எல்லாம் உபசரித்தார். அந்த ஊரிலுள்ள ஏழை விவசாயிகள் தம்மிடமுள்ள விவசாயப் பொருட்களை சுவாமிகளுக்குத் தட்சணையாகக் கொடுத்து வணங்கினர். சுவாமிகள் அத்தனை பொருட்களையும் அந்த ஏழை விவசாயிக்கே கொடுத்துவிட்டு எப்படி அங்கு வந்தாரோ அப்படியே சென்றார்.

**பிறக்கும்பொழுது கொடு வந்ததில்லை பிறந்து இறக்கும்பொழுது கொடு போவதில்லை இடைநடுவில் வந்த செல்வம் சிவன் தந்தது என்று அறிந்து** அதனைக் கொடுக்க வேண்டும் என்பது பட்டினத்தாருடைய கருத்து. அக்கருத்தைச் சுவாமிகள் அப்படியே கடைப்பிடித்து வருகின்றார்கள்.

# 13. பிரணவானந்தரின் பிரிவுத் துயரம்

மலேசிய நாட்டின் தலைநகராம் கோலாலம்பூரில் இருந்து ஏழு மைல் தொலைவில் உள்ளது பத்துமலை. பத்துமலை முருகனுக்கு நடைபெறும் தைப்பூச விழா உலகப் பிரசித்தி பெற்றது. இந்த முருகன் ஆலயத்திற்குப் பக்கத்திலே ஒரு ஆச்சிரமம். அதன் பெயர் சிவானந்த ஆச்சிரமம் என்பது. இந்த ஆச்சிரமத்தின் தாபகரும் தலைவருமாக விளங்கியவரே சுவாமி பிரணவானந்தராவர்.

29-03-82 திங்கட்கிழமை சுவாமிகள் ஆச்சிரமத்தில் மகாசமாதி அடைந்தார்கள். இச்செய்தி கேட்ட மலேசிய இந்துக்கள் ஆறாத்துயர் எய்தினர். அங்கு வாழ்ந்த இந்துக்களுக்கு வாழ்க்கையில் கலங்கரை விளக்கமாக விளங்கியவர்கள் சுவாமிகள். அக்கலங்கரைவிளக்கம் அணைந்துவிட்டதால் தமக்கு வழிகாட்டி ஒருவர் இல்லை என்ற கவலையே அவர்களுடைய துயருக்குக் காரணமாகும்.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் உள்ள கிராமங்களுள் மிகப் பெரியதாக மதிக்கப்படுவது அளவெட்டிக் கிராமமாகும். அக்கிராமத்தில் நாகமுத்து, கண்ணகி அம்மாள் என்றொரு தெய்வீகக் குடும்பம். இக்குடும்பத்தினருக்கு28-08-1908ம் ஆண்டு ஒரு மைந்தன் பிறந்தான். அவன் பெயர் பொன்னையா என்பது. இவர் அளவெட்டி அருணோதயக் கல்லூரியில் கல்வியை முடித்துக் கொண்டு 17வது வயதில் சிங்கப்பூர் சென்றார். 14-04-1925ல் மலேசியா சென்று புகையிரதப் பகுதியில் ஓராண்டு உத்தியோகம் பார்த்தார். 34 ஆண்டுகள் ரப்பர் ஆராய்ச்சி நிலையத்தில் நிரந்தரமாக வேலை ஆற்றினார். 28-08-1963ல் உத்தியோக ஓய்வு பெற்றார். இவரது வாழ்வு நைஷ்டிகப் பிரமச்சரியமாக அமைந்தமையினாலே ஆத்மீகத்தில் விழிப்புணர்வு பெற்றார்.

1953ம் ஆண்டு பொன்னையா ரிஷிகேசம் சுவாமி சிவானந்த சரஸ்வதி அவர்களைத் தரிசிக்கும்பேறு பெற்றார். சுவாமிகளிடம் மந்திரோபதேசம் பெற்றுச் சிவானந்த பொன்னையா என்னும் திருநாமத்தோடு மலேசியா திரும்பினார். 1959ல் குருதேவரிடம் சென்றபோது 02-07-1959ல் குருதேவர் இவருக்கு சன்னியாசம்

கொடுத்தார். குருதேவரால் "சுவாமி பிரணவானந்த சரஸ்வதி" என்ற சன்னியாச ஆச்சிரமத் திருநாமம் வழங்கப்பட்டது. மலேசியாவில் இவர் ஆற்றிய தொண்டினை அறிந்த குருதேவர் "பிரச்சாரப் பிரவீணா", "குருபக்திரத்னா" என்ற பட்டங்களை அளித்தார். 1958ல் தெய்வீக வாழ்க்கைச் சங்கத் தலைமையகத்தில் நிர்வாகத்துறைக் குழுவில் இவரை ஓர் உறுப்பினர் ஆக்கிச் சிறப்பித்தார். 1963ல் தெய்வீக வாழ்க்கைச் சங்கத்தின் தலைமையகம் இவரைப் போஷகர்களில் ஒருவராகவும் நியமித்தது.

14-07-1963ல் குருதேவருடைய மகாசமாதி நிகழ்ந்தது. 25-12-1963ல் தென்னிந்திய யாத்திரையை மேற்கொண்ட பிரணவானந்தர் 1964மார்ச் முதல் ஆகஸ்ட் வரை ரிஷிகேசத்தில் தங்கித் தீவிர சாதனையிலீடுபட்டார். கேதார யாத்திரையின் பின்பு மலேசியாவிற்கு சுவாமிகள் வந்தார்கள். சுவாமிகள் திரும்பும்போது இலங்கையிலும் மலேசியாவிலும் சுவாமிகளுக்குப் பிரமாண்டமான வரவேற்புகளை அளித்தார்கள். குருதேவரின் முதன்மைச் சீடரான சிதானந்தஜீ அவர்கள் பத்துமலை சிவானந்த ஆச்சிரமத்திற்கு விஜயம் செய்து, சலவைக்கல்லால் சமைத்த குருதேவரின் திருஉருவைப் பிரதிட்டை செய்தார்.

சுவாமி பிரணவானந்தரின் அயரா முயற்சியால் 1968ம் ஆண்டு தொடக்கம் "தேவதூதன்" என்ற முத்திங்கள் வெளியீடு நடைபெற்று வந்தது. இச்சஞ்சிகையை வாழ்த்தி சுவாமி சிதானந்தஜி அவர்கள் பின்வருமாறு ஆசிமொழி பகர்ந்தார்.

"குருதேவரின் உபதேசங்கள் வாழ்வை வெறுத்துத் துடைப்பதற்காக அன்று. அவை வாழ்வை வளப்படுத்தும் நிறைவளிக்கும் தெய்வீக அருளுபதேசம். அவை இன்று தேவதூதன் இதழ்மூலம் வெளிவந்து உலகைப் பரிமளிக்கின்றன. மதிப்பிற்குரிய சுவாமி பிரணவானந்தஜி வீறு பெற்றவர்; சற்குருதேவருக்கு தம்மையே முழுதும் அர்ப்பணித்துக் கொண்ட ஆன்மீகச் சீடர். மலேசியாவிலுள்ள தெய்வீக வாழ்க்கை வாழவிரும்பும் ஒவ்வொரு சாதகரின் இல்லத்திற்கும் இச்சஞ்சிகையின் மூலம் குருதேவரின் உள்ளக்கருத்தைப் பரப்புகிறார் சுவாமி" என்று இவ்வளவு பாராட்டியுள்ளார்.

சுவாமி உலகின் பலபாகங்களிலும் காலத்திற்குக் காலம் நடைபெற்ற சமய ஒற்றுமை மகாநாடுகளில் பங்குபற்றி உலக சகோதரத்துவத்தை வற்புறுத்தினார். சுவாமிகள் எப்போதும் சிரித்த முகப்பொலிவோடு காணப்படுவார். இந்தத் தோற்றம், அவர் சந்திக்கும் நபர்களின் உள்ளத்திலே கிளர்ச்சியைத் தூண்டும். குழந்தைகள், இளைஞர்கள் முதியோர் அனைவருமே சுவாமியுடன் இருப்பதை, பழகுவதை, இன்சொற்களைக் கேட்பதைப் பெரிதும் விரும்புவர். தமிழிலும், ஆங்கிலத்திலும் சுவாமிஜி தம் உள்ளம் திறந்து உரையாற்றும்போது அது கேட்போர் உள்ளத்தைப் பிணிக்கும் தன்மையதாய் இருக்கும். இத்தகைய சுவாமிகளின் பிரிவு உலகத்திற்கே ஒரு பேரிழப்பாகும்.

# 14. இந்துமத போதகர்

மகான்கள், சீவன்முத்தர்கள், முனிவர்கள் இவர்களுடைய வாழ்க்கையே இந்துமதம். இவர்களுடைய இருப்பிடங்கள் ஆச்சிரமங்கள் என்று அழைக்கப்பட்டன. இத்தகைய இடங்களைத் தேடி எல்லாச் சமயத்தவர்களும் வந்தனர். இத்தகையவர்கள் அநுபூதி பெற்றவர்கள். இவர்களுக்குச் சமயபேதம் இல்லை. இத்தகைய இடங்களைத் தேடிச் சென்ற எச்சமயத்தவரும் உயர்நிலை எய்தினர். இந்த நிலை இந்து மதம் ஒன்றிற்கே உள்ள தனிச்சிறப்பாகும்.

எச்சமயத்தவரும் எந்த நிலையில் உள்ளவரும் இந்துசமய போதனைகளை ஏற்றுக்கொள்ளலாம். போதனையை ஏற்றுக்கொண்ட பின்னரும் அவர் தமது முந்திய சமயப் பெயருடனேயே வாழலாம். தம்மைத் தேடி வந்தவர்களுக்கு ஞானப் பொக்கிஷத்தை அள்ளி அள்ளிக் கொடுத்தது இந்துசமயம்.

உலகிலுள்ள எல்லாச் சமயங்களையும் நல்ல உள்ளத்தோடு ஏற்றுக் கொண்ட ஒரே ஒரு சமயம் இந்து சமயம். எல்லாச் சமயத்தவரும் முத்திநிலை பெறலாம் என்று தெளிவாகக் கூறுவது இந்து சமயம்.

**“ யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வமாகி ஆங்கே**
**மாதொரு பாகனார்தாம் வருவர்” என்றும்,**
**“ எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்**
**எல்லா உடலும் இறைவன் ஆலயமே” என்றும்,**
**“ ஒன்றவன் தானே இரண்டவன் இன்னருள்” என்றும்,**
**“ ஒன்றாய்ப் பலவாய் உயிர்க்குயிராய்” என்றும்,**

ஒரு பொருளே எல்லாரிடத்தும் எல்லாச் சமயத்திலும் விளங்குகின்றது என்றும் சமரசம் பேசுவது இந்துசமயம்.

உள்ளது ஒன்று. அதையே “தத் ஸத்” என்று குறிப்பிடுவர். அதாவது ‘தத்’ என்றால் அது. ‘ஸத்’ என்றால் உண்மை.

அதையே அவன், எல்லாம்வல்ல ஒருவன், இறைவன் என்று அழைத்தது இந்துமதம். அந்த இறைவன், தானே அனைத்துமாய், தானே தானாய், ஒப்புயர்வில்லாமல் உள்ளான். இரவி எழுந்தது என்றால் அதன் கதிரும் அதனுடன் எழுந்து பரவுகிறதல்லவா? கதிரும் கதிரவனும் சொல்லுக்கு இரண்டு இயல்பில் ஒன்றுதான். அதுபோலவே பரமன் தனது அருட்கதிரான பராசக்தியுடன் கூடி இரண்டாகின்றான். பரம்பொருள் ஒருவனே. இவ்வாறு இறைவன்-இறைவி, ஆண்டவன்-அருள், தலைவன்-தலைவி, அப்பன்-அம்மையாக விளங்குகின்றான். அதனாலேதான் உயிர்கள் எல்லாம் ஆண்-பெண் ஆகிய இரண்டுருக் கொண்டு விளங்குகின்றன. உயிர்க்குயிரான ஒருவனே இரண்டாகப் பொலிகிறான்.

சுவாமி விவேகானந்தர் அமெரிக்காவில் நடந்த உலக சமய சமரச மகாநாட்டில் இந்துமதக் கொள்கைகளை விளக்கினார். அவருடைய பேச்சிற்கு நல்ல வரவேற்பு இருந்தது. அவருடைய இந்துசமய தத்துவங்களை விரிந்த மனப்பான்மையுடைய அமெரிக்க மக்கள் ஏற்றுக்கொண்டனர். உலகம் முழுவதிலும் இன்று இந்துசமய தத்துவங்களை மக்களுக்கு எடுத்துச் சொல்லும் இந்துசமய நிலையங்கள் ஆயிரக்கணக்கில் உள்ளன. ஆனால் அவை இந்துசமயக் கொள்கைகளை எடுத்துச் சொல்வதோடு மாத்திரம் நின்றுவிடுகின்றனவே தவிர, இந்து சமயத்திற் சேருங்கள் என்று எவரையும் ஒருவார்த்தை கூறியதாகச் சரித்திரம் இல்லை.

ஆனால் சமயசாதனைகள் அற்ற பாமர மக்களுடைய நிலைவேறு. அவர்களுக்குத் தருமத்தையும் நீதியையும் கடவுட்கொள்கையையும் எடுத்துச் சொல்வதற்கு நம்மத்தியிலே சமய போதனைகள் இல்லை. ஒரு சிலர் இருக்கலாம். அவர்கள் மாத்திரம் எல்லாருடனும் தொடர்புகொள்ள முடிவதில்லை. குருடன் குருடனுக்கு வழிகாட்ட முடியாது. ஆகவே ஒவ்வொரு ஊரிலும் இந்து சமய வழிநின்று அதனைப் போதிக்கக்கூடியவர்கள் ஒவ்வொரு ஊருக்கும் குறைந்தது இருவர் மூவராவது இருக்க வேண்டும். அதற்காக ஒவ்வொரு ஊரிலும் இருவர் மூவரைத் தெரிவு செய்து இந்து சமய போதகர்களை உருவாக்க வேண்டுமென்ற எண்ணம் பல பெரியார்களுடைய உள்ளங்களிலே வளர்ந்து வந்தது. அதனை நெறிப்படுத்துமுகமாக, கிளிநொச்சியிலே உள்ள குருகுலம் அகில இலங்கையிலும் இருபது இளைஞர்களைத் தெரிவு செய்து, சென்ற விஜயதசமி தொடக்கமாக பயிற்சி கொடுத்துக்கொண்டு வருகின்றது.

தெரிவுசெய்யப் பெற்ற இளைஞர்கள், யுவதிகள் குருகுல வாசம் செய்து அறிவிலும் அனுட்டானத்திலும் முதிர்வடைந்தபின் கிராமங்களுக்குத் தொண்டர்களாக, வழிகாட்டிகளாக அனுப்பப்படுவார்கள். வானப்பிரஸ்த, சந்நியாச நிலை அடைந்தவர்களும் வயதில் ஐம்பது அறுபது வயதடைந்தவர்களும் தமது குடும்பப் பொறுப்புகளைத் தமது பிள்ளைகளிடம் ஒப்படைத்துவிட்டு சமய சமூக சேவைக்கென்றே தம்மை அர்ப்பணித்து விடுவார்களானால் அத்தகையவர்களுக்கும் தகுந்த முறையில் பயிற்சி அளித்து சமய சமூக சேவையிலீடுபடுத்தும் திட்டமொன்றும் நடைமுறைப்படுத்தப்பட இருக்கிறது.

இவை இரண்டுவகையினரையுந் தவிர குடும்பத்திலிருந்து கொண்டே குடும்பமாகச் சேவை செய்ய விரும்புகிறவர்களுக்கும் பயிற்சி கொடுத்து அவர்களையும் சேவையிலீடுபடுத்த விரும்புகிறது. மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவனும் அயலவனையும் நேசித்து வாழக் கடமைப்பட்டிருக்கிறான். சேவை என்பது தொண்டர்களுக்கு மாத்திரம் அல்ல எல்லோருக்கும் தொண்டு உரியது. ஆகவே அவரவர் நிலையில் ஒவ்வொருவரும் தொண்டு தத்தமக்கு இயன்ற அளவில் செய்ய முடியும். தன் குடும்பத்திலுள்ள, தன் வீட்டிலுள்ள வயது வந்தவர்களுக்கும் குழந்தைகளுக்கும் சேவை செய்வதும் தொண்டு தான். அந்தப் பழக்கம் தான் அயலவர்களுக்கும் சேவை செய்யத் தூண்டுகின்றது.

நாங்கள் மனிதர்கள் என்ற நினைவு எல்லோரிடத்திலும் எப்போதும் இருக்க வேண்டும் இறைவனை எந்நிலையிலும் எப்போதும் மறவாது வாழவேண்டும். இப்படி எல்லோரும் வாழ்ந்துவிட்டால் உலகில் சண்டைசச்சரவுக்கே இடம் இல்லை. பொலிசார், வழக்கறிஞர்கள் போன்றவர்களுக்கு வேலையில்லாமல் போய்விடும். இத்தகையதொரு வாழ்க்கையை மக்கள் வாழவேண்டும் என்று தான் மகாத்மாகாந்தி விரும்பினார். அதற்கு இராமராச்சியம் என்றெ பெயரிட்டு வழங்கினார். இந்த நிலைக்கு மக்களுடைய மனோநிலையை உயர்த்துவதே இந்துமத போதகர்களைப் பயிற்றுவோருடைய முக்கிய குறிக்கோளாகும். காற்றுள்ளபோதே தூற்றிக்கொள்ள வேண்டும் என்று சொல்லுவார்கள். உரிய சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி நாமும் மற்றையோருக்குப் பயனுள்ளவர்களாக வாழ்வோமாக.

# 15. ஓம் ஸ்ரீ குள்ளச்சாமி

இறைவனின் அற்புதப் படைப்புகளில் அதி உன்னதமானது ஆத்ம ஞானிகளின் நிலை. ஆத்மா கல்லிலிருந்து எல்லா சீவராசிகளின் உடலினுள் நுழைந்து நல்லதைச் செய்து, செய்து மனிதனாக மாறுகின்றது. உலகத்தின் அனைத்து சீவராசிகளின் தொகுப்பே மனிதன். எல்லா சீவராசிகளின் அறிவின் தொகுப்பே மனித அறிவு. மோன குரு திருவருளால் பிறப்பு மாறி முப்பொழுதும் கடந்த பெரு வெளியை கண்டு முக்தி எனும் வானகத்தே பரிதியாகி, வானகத்தை, வையகத்தில் காட்டும் சாமியே நம் குள்ளச்சாமி. ஓம் ஸ்ரீ குள்ளச்சாமி புதுவை மாநகரில் சுமார் 15 ஆண்டுகள் நடமாடி வந்துள்ளார். ஓம் ஸ்ரீ குள்ளச்சாமிக்கு ஞானதேசிகன் என்றும், மாங்கொட்டைச் சாமி என்றும் மூட்டைத் தூக்கிசாமி என்றும் பெயர்கள் வழங்குகின்றன. சாதாரணமான மனிதனுக்கு நிகழ்காலத்தை மட்டும் தான் அறியும் ஆற்றல் உள்ளது. ஆனால் குள்ளச்சாமிக்கு அனைத்தையும் காணும் ஆற்றலுண்டு. குள்ளச் சாமியின் பேராற்றலை யாராலும் சொல்ல இயலாது. அவர் ஒரு சித்தர்; எல்லா இடங்களிலிருந்தும் எல்லாவற்றையும் காணும் வல்லமையுள்ள மகோன்னத புருஷர்.

ஓம் ஸ்ரீ குள்ளச்சாமியை வரதராஜு நாயுடு என்பவர் தன் ஞான குருவாக ஏற்றுக்கொண்டு அவருக்கு தொண்டாற்றி வந்தார். சுவாமிகள் அவர் வீட்டு மாடியில் உட்கார்ந்திருப்பார். திரு. நாயுடு அவர்கள் சுவாமிகளுக்குப் பால் கொடுப்பது வழக்கம்.

சுவாமிகள் பாலை சாப்பிட்டு உடனே வரதராஜுலு வாயில் உமிழ்வார். உடனே அவர் மூர்ச்சையாய் கீழே விழுந்துவிடுவார். அச்சமயத்தில் அவர் கடலோரத்தில் சிறு குழந்தைகளுடன் விளையாடிக் கொண்டிருப்பார். இப்படி சுவாமிகள் ஒரே சமயத்தில் பல இடங்களில் காட்சியளிப்பது வழக்கம்.

1922ம் ஆண்டில் ஒருநாள் புதுவை, வீதியில் இருந்த ஒரு வீட்டின் மேல்மாடியில் ஸ்ரீ அரவிந்தர் தங்கியிருந்தார். தீவிர ஆத்ம சாதனையில் ஈடுபட்டிருந்த சமயம் அது. அச்சமயத்தில் ஆத்ம சாதனையில் ஈடுபட்டிருந்தபொழுது ஸ்ரீ அரவிந்தருக்கு

பனிமூட்டம் போன்று இனம் தெரியாத ஒரு குழப்பம் இருந்தது. ஒருநாள் காலை மேல் மாடியில் உள்ள ஜன்னலை ஸ்ரீ அரவிந்தர் மெல்லத் திறந்தார். கீழே குள்ளச்சாமிகள் நின்றுகொண்டிந்தார். ஸ்ரீ அரவிந்தரைப் பார்த்து சுவாமிகள் மூன்று முறை கை தட்டினார். ஸ்ரீ அரவிந்தர் கீழே குனிந்து சுவாமிகளைப் பார்த்தார். தன் கையில் கொட்டாஞ்சி வைத்திருந்தார். அதை மூன்று முறை கையில் கவிழ்த்து எடுத்துக் காட்டியதும் ஸ்ரீ அரவிந்தருக்கு அந்தப் பனிமூட்டம் போன்ற குழப்பம் பட்டென விலகியது. ஜன்னலை சாத்தினார். ஆன்மீக பாதையில் மிக வேகமாக ஸ்ரீ அரவிந்தர் சாதனையில் ஈடுபட்டார்.

ஒரு சமயம் ஒரு ஆச்சிரமவாசியைப் பற்றிச் சுவாமிகளிடம் கூறினார்கள். இவன் ரமணர் ஆளாயிற்றே என்று சிரித்துக்கொண்டே சொன்னார்கள். சில ஆண்டுகளுக்குப்பின் ஆச்சிரமத்தை விட்டு விலகியிருந்தார். சுவாமிகளுக்கு மூட்டைத் தூக்கி சுவாமிகள் என்றும் பெயர். யாராவது மூட்டையைத் தூக்கிக் கொண்டே சென்றால் அதைத்தான் வாங்கிக் கொண்டு எந்த இடத்தில் சேரவேண்டுமோ அந்த இடம்வரை தூக்கிச் சென்று இறக்கிவிடுவார்.

சுப்பிரமணியபாரதியார் சுவாமிகளைப் பற்றிச் சொல்வதாவது: தெளிந்த ஞானி; பாசத்தை அழித்துவிட்டார்; பயத்தைச் சுட்டுவிட்டார்; நாசத்தை அழித்து விட்டார்; எமனைக் கொன்றார்; பாவனையால் பரவெளிக்குமேலே சென்றார்; காயகல்பம் செய்துவிட்டார். அவர் வாழ்நாளைக் கணக்கிட்டு வயது உரைப்பார் யாரும் இல்லை.

ஒரு நாள் புதுவையிலுள்ள தர்மராஜ ஈஸ்வரன் கோவில் வீதியில் ஒரு சிறுவீட்டில் திரு. ராஜா ராமையா வசித்து வந்தார். அவருடைய தந்தை உபநிடதத்தை மொழிபெயர்த்திருந்தார். அதைத் திருத்தித் தருமாறு பாரதியாரை பலநாள் வேண்டினார். ஒருநாள் அதற்காகப் பாரதி அங்குசென்றார். அப்பொழுது நம்குள்ளச்சாமி அங்கு வந்தார். சுவாமிகளைப் பற்றி பாரதியார் முன்பே கேள்விப்பட்டிருந்தார். பாரதி சுவாமிகளின் கையைப் பேரன்போடு பற்றினார்; ஐயா, தேசிகனே உன்னை எல்லோரும் ஞானி என்று சொல்கிறார்களே! சிலர் பித்தன் என்று பேசுகிறார்களே! அட்டாங்க யோகசித்தி கைவரப்பெற்றவர் என்று

புகழ்கின்றார்களே! எதை எதையோ பேசி எனக்கு ஒப்பனைகள் காட்டாது, உத்தமனே! எனக்கு உன்னை உணர்த்துவாய் என்றார்.

மேலும் அவர் பேசுகையில் கந்தையை கட்டிக்கொண்டு சுற்றகிறீர்களே ஏன்? இறைவனை போன்று பார்க்கின்றீர்கள். தங்கள் உருவத்தை பார்க்கும்பொழுது பரமசிவன் போல் காட்சி கொடுக்கிறீர்கள். ஆவல் அற்றுவிட்டீர்கள். யாவற்றையும் எனக்கு உணர்த்த வேண்டுமென்றார். சுவாமிகள் பாரதியாரின் கையை திருகிக் கொண்டு அவ்வீட்டின் கொல்லைக்கு குதித்தோடி சென்றார். பாரதி விடவில்லை; மின்னலெனப் பாய்ந்து சென்று சுவாமிகளை மறித்தார்.

அங்கு இருந்த காட்சி: பக்கத்திலேயிருந்த வீடு இடிந்த நிலையில் காட்சி கொடுத்தது. மேலே சூரியன் அருகே ஒரு கிணறு. சுவாமிகள் பாரதியாரை உற்று நோக்கி குமிழ் சிரிப்புடன் அக்குட்டிச் சுவரை சுட்டிக் காட்டினார். பின் விண்ணில் உள்ள சூரியனை காட்டினார். உடனே கிணற்றுள் இருக்கும் தண்ணீரில் சூரியனின் பிம்பம் தெரிவதையும் காட்டினார். தெரிந்து கொண்டாயா என்று கேட்டார். அதற்கு பாரதி அறிந்தேன் என்றார். இந்த வேதாந்த தத்துவத்திற்கு பாரதியின் விளக்கம்: நாசியில் ஓடும் வாசியை (காற்று) கும்பித்து லலாடத்தில் இறுகக் கட்டி கட்டி எதிரிலுள்ள மண் சுவரைப் போன்று நீ இருத்தல் வேண்டும். பின் கிணற்றுள்ளே சூரியனின் பிம்பத்தைக் கண்டது போல் உன்னுள்ளே சிவனைக் காண வேண்டும். செயலில் இறங்கினால் சிவனிடம் சென்று அடையலாம்.

பிறிதொருநாள் பழங் கந்தல் அழுக்கு மூட்டையை முதுகின் மேலே சுமந்துகொண்டு பாரதியின் முன்னே வந்து நின்றார். ஐயா, தம்பிரானே, கருணை முனியே, முற்றுமிது பித்தருடைய செய்கை அன்றோ! ஏனையா இப்பெரும் மூட்டையை சுமந்து திரிகின்றீர் என்றார். சுவாமிகள் புன்னகை பூத்தார். புறத்தே நான் சுமக்கின்றேன். உன் அகத்தினுள்ளே இதைவிட பெரும் பழங் குப்பையை சுமக்கின்றாய் என்று கூறி ஓடிவிட்டார்.

பாரதிக்கு ஞானோதயம் தோன்றியது. பாரதி சுவாமிகளை

மிக உயர்ந்த நிலையில் பேசுகின்றார். குற்றமற்ற தேசிகன் என்றும் அவர் பார்வை, இறைவனின் அருட்பார்வை என்றும், தவம் நிறைந்தவர் என்றும், சாந்தநிலை பெற்றவர் என்றும் சொல்லுகின்றார்.

சில நாட்களுக்குப் பிறகு சுவாமிகள் சென்னைக்கு சென்று தங்கியுள்ளார். பின் புதுவைக்கு வந்தார். சுவாமிகளின் நிலையை உற்று நோக்கும்பொழுது ஆத்ம தரிசனம் பெற்றவர் என்று தெரிய வருகின்றது. ஊர், பெயர் எதுவும் தெரியவில்லை. உற்றார், பெற்றோர் பற்றி எதுவும் அறிய முடியவில்லை. சுவாமிகள் ஆத்ம ஞானிகளுக்கு தீபச் சுடராய் விளங்கினார். ஆத்ம ஞானிகளுக்கு வழிகாட்டும் அருள் ஜோதியே அந்த மாங்கொட்டைச்சாமி. ஆத்ம ஞானிகள் தங்கள் தீவிர ஆத்ம சாதனையில் எந்த நேரத்திலும், எந்த நிமிடத்திலும் தவறி விழ வாய்ப்புண்டு. அல்லது மேலும் செல்ல வழி தெரியாமல் குழம்பிக் கொண்டிருத்தலும் உண்டு.

அத்தகையவர்களுக்கு சுவாமிகள் அவர்களின் சிக்கலை நீக்கி, குழப்பத்தைப் போக்கி நல் வழிகாட்டியுள்ளார். சுவாமிகள் உள்ளாழ்ந்த மௌன நிலையில் தன்னை நிறுத்திக் கொண்டு வாழ்ந்துள்ளார். எங்கேயோ பிறந்தவர். எங்கேயோ பிறந்தவரை புதுவை மாநகர் தன்னின் ஆன்மீக காந்த சக்தியால் இழுத்தது. சுவாமிகள் இறையருட் காட்சியைக் கண்டது புதுவையில், சுவாமிகள் இறைவனோடு கலந்தது புதுவையில். சுவாமிகள் மரணமடையவில்லை பரம்பொருளோடு கலந்துவிட்டார். ஆதாரம் ஆத்மஞானம் பெற்றவர்கள் அறிவார்கள். குதித்தோடி வாழ்ந்த குள்ளச்சாமியை கண்டுகொள்ளாது, அவரின் பேரன்பைப் பெறத்தகுதியாக்கிக் கொள்ளாது அன்றைய உலகம் விட்டுவிட்டது. எங்கும் பரந்து கிடக்கும் பரம்பொருளோடு ஐக்கியமான குள்ளச்சாமி இதைப் படிக்கின்ற உங்களுக்குள்ளும் இருக்கின்றார். பொய்யை ஒழித்துப் புறப்படுங்கள்! உண்மையாக கலந்து வாழுங்கள்? குள்ளச்சாமியின் அரிய தரிசனத்தைப் பெறலாம்!

## இந் நூல் வெளியிடுவதற்கு நிதி உதவிய திருக்கூட்டத்தினரின் விபரம்

| | |
|---|---|
| திரு. செல்லத்தம்பி மார்க்கண்டு | 100.00 |
| திரு. பொன்னுச்சாமி யோகானந்தன் | 100.00 |
| திருமதி புனிதவதி சிவசுப்பிரமணியம் | 50.00 |
| திருமதி செல்லமுத்து சின்னத்துரை | 50.00 |
| திருமதி மகேஸ்வரி வியாகரத்தினம் | 50.00 |
| திருமதி நாகேஸ்வரி கணேஸ் | 50.00 |
| திருமதி ராசமலர் முத்தையா | 50.00 |
| திருமதி ராசமலர் சின்னராசா | 50.00 |
| திரு. செல்லத்துரை சோமசுந்தரம் | 50.00 |
| திருமதி கமலாதேவி அமிர்தராசா | 50.00 |
| திருமதி தவமணி தியாகராசா | 50.00 |
| திருமதி தவனேஸ்வரி சாம்பசிவம் | 50.00 |
| திரு. பா. ஞானசபாபதி | 50.00 |
| திருமதி அன்னபூரணம் ஞானசம்பந்தர் | 50.00 |
| திருமதி பார்வதி நடராஜா | 50..00 |
| திருமதி கமலாதேவி மகாலிங்கம் | 50.00 |
| திருமதி இராஜலட்சுமி சண்முகலிங்கம் | 50.00 |
| திருமதி தேவமலர் நாகராஜா | 50.00 |
| திருமி நாகலோசனி நாகலிங்கம் | 50.00 |
| திருமதி கோகிலாம்பாள் கனகசபாபதி | 50.00 |
| திருமதி சற்குணதேவி பஞ்சலிங்கம் | 50.00 |
| திருமதி தங்கமுத்து தம்பித்துரை | 50.00 |
| திரு. இராசையா சிவஞானசுந்தரம் | 50.00 |
| திருமதி கனகாம்பிகை வில்வராஜா | 50.00 |
| திருமதி பரமேஸ்வரி பரமநாதன் | 50.00 |
| திருமதி இராஜலட்சுமி சண்முகலிங்கம் | 50.00 |

## இந்து சமயப் பேரவை வெளியீடுகள்.

| | |
|---|---|
| தரிசனம் | ஆத்மஜோதி நா. முத்தையா சுவாமிகள் |
| அர்ச்சனை மாலை | ஆத்மஜோதி நா. முத்தையா சுவாமிகள் |
| என்னை எனக்கறிவித்த எங்கள் குருநாதர் | ஆத்மஜோதி நா. முத்தையா சுவாமிகள் |
| திருமுறைக் கதைகள் | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| முத்தான தொண்டர் | கவிஞர். வி. கந்தவனம் |
| புதிய சைவ வினாவிடை(முதலாம் புத்தகம்) | கவிஞர். வி. கந்தவனம் |
| தங்கம்மா நான்மணிமாலை | கவிஞர். வி. கந்தவனம் |
| சிவயோக சுவாமிகளின் அருள்மொழிகள் | மார்க்கண்டு சுவாமிகள் |
| பன்னிருமாத நினைவுகள் | ஆத்மஜோதி நா. முத்தையா சுவாமிகள் |
| கனடாவிற் சைவ சமயம் | கவிஞர். வி. கந்தவனம் |
| ஈழத்துச் சித்தர் குடைச்சுவாமி | பேரறிஞர் முருகவே பரமநாதன் |
| சைவத் திருமுறைகளின் விழுமியம் | பேரறிஞர் முருகவே பரமநாதன் |
| புதிய சைவ வினவிடை (இரண்டாம் புத்தகம்) | கவிஞர் வி. கந்தவனம் |
| நல்லூர் நாற்பது | கவிஞர் வி. கந்தவனம் |
| யோகி ராம் சுரத்குமார் | ஆத்மஜோதி முத்தையா சுவாமிகள் |
| திருமுறைச்செல்வம் | சிவத்தமிழ் வித்தகர் சிவமகாலிங்கம் |
| தேவைக்கேற்ற திருமுறைத்திரட்டு | (தொகுத்தவர்) கவிஞர் வி. கந்தவனம் |
| விதியை வெல்வது எப்படி | திரு கு. வைத்தியநாதன்(சைவசித்தாந்த சாகரம்) |
| கந்தன் கதை | கவிஞர் வி. கந்தவனம் |
| குரு வழிபாடு | கவிஞர் வி. கந்தவனம் |

| | |
|---|---|
| அகத்தியரும் விநாயகரும் | கவிஞர் வி. கந்தவனம் |
| முருகப்பெருமானும் அவ்வையாரும் | கவிஞர் வி. கந்தவனம் |
| சிந்தனைத் தேன் துளிகள் | மாதாஜி புலவர் சி. விசாலாட்சி |
| ஞானவிளக்கு | சிவத்தமிழ் வித்தகர் சிவ மகாலிங்கம் |
| விநாயக வெண்பா | கவிஞர் வி. கந்தவனம் |
| விநாயக விருத்தம் | கவிஞர் வி. கந்தவனம் |
| சுவாமி சதானந்தர் நற்போதனை | தொகுப்பு சபா சிவானந்தன் |
| கந்தனே கலியுகத்தில் கண்கண்ட தெய்வம் | ஆத்மஜோதி நா. முத்தையா சுவாமிகள் |
| தெய்வீக வாழ்க்கை | ஆத்மஜோதி நா. முத்தையா சுவாமிகள் |
| முப்பெரும் சித்தர்கள் | ஆத்மஜோதி நா. முத்தையா சுவாமிகள் |
| திருமுறைக்காட்சி | ஆத்மஜோதி நா. முத்தையா சுவாமிகள் |
| கேதார பத்திரி யாத்திரை | ஆத்மஜோதி நா. முத்தையா சுவாமிகள் |
| கந்தக் கதம்பம் | தொகுத்தவர் ஆத்மஜோதி நா. முத்தையா சுவாமிகள் |
| மூன்றாவது கண் | இரசிகமணி கனக செந்திநாதன் |
| பயன்தரவல்ல திருமுறைப்பாக்கள் | தொகுத்தவர் சைவதுரந்தரர் வி கந்தவனம் |
| மகான் காசிவாசி செந்திநாத ஐயர் | மூதறிஞர் க. சி. குலரத்தினம் |

இந்து சமயப் பேரவையின் வெளியீடுகள் தேவையானோர்

தொடர்பு கொள்ளவேண்டிய தொலைபேசி இலக்கம்

*416-724-6240*

## இந்நூலிலிருந்து சில வரிகள்

ஒரு சக்கரவர்த்தியின் இராச்சியத்தில் எங்காவது கலகம் நிகழ்ந்தால் அதனை அடக்குவதற்குச் சக்கரவர்த்தியே நேரில் செல்வதில்லை. தனது பிரதிநிதி ஒருவரையே அனுப்பிவைப்பது வழக்கம். அதுபோல பூமியில் எங்காவது ஒரு இடத்தில் பாவம் மலியுமானால் அதனைப் போக்குவதற்காகப் பகவான் ஒரு அவதார புருஷரையே அனுப்பி வைக்கின்றார்.

கடவுள் காலங்கள்தோறும் மகான்களை அனுப்பி அவர்கள் மூலம் உலகத்துக்கு அருளையும், நன்மைகளையும் வழங்குகிறார்.

எவன் ஒருவன் தனது ஆத்ம திருப்திக்காக எழுதுகின்றானோ அந்த எழுத்துத்தான் மற்றையோருடைய ஆத்மாவையுந் திருப்திப்படுத்தும்.

நாவலர் எழுதிய இரண்டாம் பாலபாடத்திலுள்ள நீதிவாக்கியங்களும் நீதிக்கதைகளுமே மனித வாழ்க்கைக்கு வழிகாட்டப் போதியனவாகும்.

சித்தாந்தம் ஒரு சமரச ஞானக்கடல். அதில் எல்லாச் சமயங்களும் வந்து கலக் கின்றன. அது சமயாதீதப் பொருளை எட்டும். சமயுத்திற்கெல்லாம் தாயாகவும், அப்பாலும் பரந்து அகண்டமாகவும் விளங்கும். அஃது அகண்ட சமரசச் சமயம்.

சேவை என்பது தொண்டர்களுக்கு மாத்திரம் அல்ல எல்லோருக்கும் தொண்டு உரியது. ஆகவே அவரவர் நிலையில் ஒவ்வொருவரும் தொண்டு தத்தமக்கு இயன்ற அளவில் செய்ய முடியும். தன் குடும்பத்திலுள்ள, தன் வீட்டிலுள்ள வயது வந்தவர்களுக்கும் குழந்தைகளுக்கும் சேவை செய்வதும் தொண்டு தான். அந்தப் பழக்கம் தான் அயலவர்களுக்கும் சேவை செய்யத் தூண்டுகின்றது.

அழுக்கு மூட்டையை முதுகின் மேலே சுமந்துகொண்டு பாரதியின் முன்னே வந்து நின்றார். ஐயா, தம்பிரானே, கருணை முனியே, முற்றுமிது பித்தருடைய செய்கை அன்றோ! ஏனையா இப்பெரும் மூட்டையை சுமந்து திரிகின்றீர் என்றார். சுவாமிகள் புன்னகை பூத்தார். புறத்தே நான் சுமக்கின்றேன். உன் அகத்தினுள்ளே இதைவிட பெரும் பழங் குப்பையை சுமக்கின்றாய் என்று கூறி ஓடிவிட்டார்.

ஞானம் என்றால் அறிவின் தெளிவு என்பது கருத்தாகும். மனித வாழ்வில் ஞானம் இடம்பெறும் அளவிற்கே மக்களுக்கு சிறப்பும் இன்பமும் அமைதியும் பேரின்பமும் ஏற்படுகின்றன. எனவே ஞானம் என்பது வாழ்க்கை விளக்கு ஆகும். தகுதியுடையோர் ஞானம் பெற்று வாழவேண்டும். இயலாதோர் ஞானிகளின் வழியை பின்பற்றி வாழவேண்டும்.

அதருமம் தான் தருமம் இருந்த இடத்தைப் பிடித்துக் கொண்டது. தம்மைக் கற்றவர்கள் என்று கொள்ளுபவர்கள், பெரிய பதவிகளை வகிப்பவர்கள் தருமத்தினின்று தவறிவிட்டார்கள். அவர்கள் செய்யும் அதருமங்களைத் தான் பாமரமக்கள் தருமம் என்று நினைக்கிறார்கள். இந்த ரீதியிலே வாழ்க்கை அமைந்தால் தருமத்தின் இடத்திலே மக்கள் அடைக்கலம் புகுவது என்று ஆகிவிடும்.